WILD HONEY (Tamil)

# காட்டுத் தேன்

## பலமுள்ள கிறிஸ்தவரை உருவாக்கும் சத்தியங்கள்

R.ஸ்டான்லி



# காட்டுத் தேன்

**R. ஸ்டான்லி,** B.E., M.TECH.,
*திருமறைப் போதகராய்*
*மாறிய ஒரு கட்டிடப் பொறியியலர்*

ஆசீர்வாத இளைஞர் இயக்கம்
8 சர்ச் காலனி, வேலூர் 632 006
தொலைபேசி: 00 91 416 2242943, 2248943
*<blc@bym-india.org>* *www.bym-india.org*

**Wild Honey** (Tamil)

Copyright 1993 R. STANLEY

First Edition : April 1993
Second Edition : April 1995
Third Edition : August 1998
This Edition : October 2011

This book is available
in several other Indian vernaculars also.

Printed by
New Shenbagam Offset,
Sivakasi

*உள்ளே...*


| | | | |
|---|---|---|---|
| 1. | காட்டுத் தேன் | ... | 5 |
| 2. | திருவசனத்திற்குத் திரும்புவோம்! | ... | 8 |
| 3. | அமைதி நேரம் | ... | 17 |
| 4. | தேவன் எவ்விதம் பேசுகிறார்? | ... | 28 |
| 5. | கேட்பதும் வாசிப்பதும் | ... | 39 |
| 6. | கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்! | ... | 46 |
| 7. | வென்றவர்மூலம் வெல்லுவோம்! | ... | 53 |
| 8. | வரங்களை அறிந்துகொள்ளுங்கள்! | ... | 62 |
| 9. | வரங்களை அப்பியாசியுங்கள்! | ... | 71 |
| 10. | பெந்தெகொஸ்தேயின் நோக்கம் | ... | 81 |
| 11. | பிரசங்கிக்கக் கற்றுக்கொள்வோம்! | ... | 89 |
| 12. | பிசாசுகளைத் துரத்துவோம்! | ... | 98 |






# 1
# காட்டுத் தேன்

## அறிமுகம்

நான் யோவான் ஸ்நானகன் ரசிகன். அவனை ரசிப்பதில் ஆபத்தில்லை. ஏனெனில் அவன் எவரையும் தன்னிடம் கவராமல் இயேசுவிடம் திருப்பிவிடுவான். யோவானது ரசிகர் யாவரும் இயேசுவின் ருசிகராகி விட்டனர்.

யோவானது ஆகாரம் வெட்டுக்கிளி; அவனது வார்த்தைகள் கூர்மையாய் இருந்தன!

யோவானது ஆகாரம் தேன்; அவனது செய்திகள் திருப்தியளிப்பதாய் இருந்தன!

யோவானது ஆகாரம் ''காட்டுத்'' தேன்; அவனது பிரசங்கங்கள் ஊருக்குள் கிடைக்காத உபதேசங்களாயிருந்தன!

யோவானது உணவோ, உடையோ, உபதேசமோ எதுவும் செயற்கையானதல்ல! மாற்றுகள் மலிந்துள்ள இக்காலத்தில் அவன் பேசுவதைக் கேட்பது அவசியம்.

இப்புத்தகத்திலுள்ள ஒவ்வொரு அத்தியாயமும் யோவானது வாழ்க்கை அல்லது ஊழியத்தின் ஏதாவதொரு பகுதியைப் பிரதிபலிக்கிறது.

மணமகன் இயேசுவின் வார்த்தைகள் அவரது சிநேகிதன் யோவானுக்குப் பேரானந்தமாயிருந்தன. அடுத்த அத்தியாயம் ***''திருவசனத்திற்குத் திரும்புவோம்''*** எனக் கூவியழைக்கிறது. வேதத் தியானம் நமக்குப் பேரானந்தமாவது எப்படியென அதில் சொல்லப்பட்டுள்ளது.



வெளி ஊழியத்திற்கு வருமுன் யோவான் தனிமையில் தேவனோடு வனாந்தரங்களில் சஞ்சரித்தான். தினமும் தேவனோடு தனித்து நேரம் செலவிடுவதை ***''அமைதி நேரம்''*** என்ற அத்தியாயம் விளக்குகிறது.

கர்த்தருடைய வார்த்தை யோவானுக்கு உண்டானது. ***''தேவன் எவ்விதம் பேசுகிறார்''*** என்ற அத்தியாயத்தில் தேவன் தமது சிந்தையை வெளிப்படுத்தும் முறைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

யோவானின் பிரசங்கம் கேட்டோர், ''அப்படியானால் நாங்கள் என்ன செய்யவேண்டும்?'' என வினவினர். பேசப்பட்ட அல்லது எழுதப்பட்ட இறைச் செய்திகளிலிருந்து பெரும் பயன் பெறுவது எப்படியென ***''கேட்பதும் வாசிப்பதும்''*** என்ற அத்தியாயம் விளக்குகிறது.

யோவான் தனது சீடருக்கு ஜெபிக்கக் கற்றுக்கொடுத்தான். இயேசுவின் சீடர் அதைக் குறிப்பிட்டு இயேசுவிடம் தங்களுக்கு ஜெபிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டினர். ***''கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்''*** எனும் அத்தியாயம் ஜெபத்தைக் குறித்த நடைமுறை ஆலோசனைகளை வழங்குகிறது.

யோவான் ஆவியில் பலங்கொண்டிருந்தான். எலியாவின் ஆவியும் வல்லமையும் அவனுக்கிருந்தது. ***''வென்றவர்மூலம் வெல்லுவோம்''*** என்ற அத்தியாயம் எதிரியை அடையாளங்காணவும், தோற்கடிக்கவும் நம்மை அழைக்கிறது. ***''பிசாசுகளைத் துரத்துவோம்''*** என்ற அத்தியாயத்தில் பிசாசின் பிடியிலிருந்து மக்களை விடுவிக்கும் விதம் தெளிவாக்கப் பட்டுள்ளது.

அவன் மூலமாய் எல்லாரும் விசுவாசிக்கும்படி யோவான் ஒளியைக் குறித்து சாட்சி கொடுக்க வந்தான். ***''பெந்தெகொஸ்தேயின் நோக்கம்''*** என்ற அத்தியாயம் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் வல்ல சாட்சியாயிருக்க அறைகூவுகிறது.

யோவான் தேவனால் அனுப்பப்பட்டவன். அவன் ஒரு சத்தம். தீர்க்கதரிசிகளிலெல்லாம் அவன்தான் பெரியவன் என்று சாட்சியிட்டார் இயேசு. யோவானின் செய்திகள் இதயங்களைத் துளைத்தன. ***''பிரசங்கிக்கக் கற்றுக்கொள்ளுவோம்''*** என்ற அத்தியாயத்தில் தேவ செய்தியைப் பெறுவதும் பகிர்வதும் எப்படியென விளக்கப்பட்டுள்ளது.

பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் கொடுக்கிறவரென இயேசுவை யோவான் அறிமுகம் செய்தான். ***''வரங்களை அறிந்துகொள்ளுங்கள்''*** என்ற அத்தியாயத்தில் கொரிந்தியர் முதல் நிருபத்திலிருந்து ஆன்மீக வரங்கள் வியாக்கியானப்படுத்தப்பட்டுள்ளன.

யோவான் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான். ***''வரங்களை அப்பியாசியுங்கள்''*** என்ற அத்தியாயம் வாசகர் தங்கள் அழைப்பை நிறைவேற்றிப் பிறர்க்கு ஆசீர்வாதமாய் மாறச் சவாலிடுகிறது.

வாருங்கள், காட்டுத் தேனைச் சேர்ந்து பருகுவோம்!



# 2
# திருவசனத்திற்குத் திரும்புவோம்!

''திருவசனத்திற்குத் திரும்புவோம்!'' அனைத்துப் பிரசங்க பீடங்களி லிருந்தும் இன்று முழங்கவேண்டிய முக்கிய செய்தி இதுவே!

நான்கு நற்செய்தி நூல்களிலும் தமது வார்த்தையாலும் வாழ்க்கை யாலும் வேதத்தின் முக்கியத்துவத்தைக் கிறிஸ்து விளக்கியதை இங்கு சுருக்கமாய் ஆராய்வோம்.

இயேசுவின் பெயரே ''தேவனுடைய வார்த்தை'' என்பதுதான் (வெளி 19:13). தேவ வார்த்தைக்கு மரியாள் அடிபணிந்தபோது அவளது கரு வறையில் பாலகன் இயேசு உருவானார் (லூக் 1:38). வசன ஆராய்ச்சியில் திளைத்திருந்த இளைஞன் இயேசு தமது பெற்றோரையும் மறந்துவிட்டார் (லூக் 2:42-49). ''தேவ வசனத்தைக் கேட்டு, அதின்படிச் செய்கிறவர் களே எனக்குத் தாயும் எனக்குச் சகோதரர்களுமாயிருக்கிறார்கள்'' என்று சொல்லுமளவிற்கு வாலிபன் இயேசு திருவசனத்தை நேசித்தார் (லூக் 8:21). இரட்சகன் இயேசு சிலுவையில் தொங்கும்போதும் வசனத்தை நிறைவேற்றுவதில் கருத்தாயிருந்தார் (யோ 19:28). இந்த இரகசியத்தை இயேசுவிடம் கற்ற ஜான் பனியன் (1628-1688), ''நான் வேதமில்லாது இருந்ததேயில்லை'' என்றார்! நமது வாழ்விலும் அப்படியே இருக்கட்டும்.

### *1. அன்றன்றுள்ள அப்பம்*

திருமறையைப் பற்றி இயேசு கூறியதாக எழுதப்பட்டுள்ள முதல் வசனம் மத்தேயு 4:4, ''மனிதன் அப்பத்தினாலே மட்டுமல்ல, தேவனு

டைய வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.'' இது ஒரு பழைய ஏற்பாட்டு வசனமாகும் (உபா 8:3). அனுதின மன்னா போலவே உயிர் வாழ தேவ வசனம் இன்றியமையாதது என இவ்விதம் மோசே மக்களுக்குப் போதித்தான்.

இச்சத்தியத்தை அப்படியே அங்கிகரித்து, அனுபவித்த பக்தன் யோபுவின் அறிக்கையாவது: ''அவரது வாயின் வார்த்தைகளை எனக்கு வேண்டிய ஆகாரத்தைவிட அதிகமாய்க் காத்துக்கொண்டேன்'' (யோபு 23:12). யோபுவுக்கு ''எப்பொழுதும்'' வேண்டியது நமக்கு ''எப்பொழுதோ'' வேண்டியதாகிவிட்டது! சாப்பிட மறக்கிறோமோ? எத்தனை நாட்கள் திருவசனத்தைத் தியானிக்க மறந்துவிடுகிறோம்! வசனத்தை விடுவதாலேயே வழுக்கிவிழுகிறோம். உள்ளான மனிதன் தினமும் பலப்படாவிடில் ஆன்மீக நோய்களுக்குப் பலியாவது திண்ணம்.

ஆன்மாவுக்கு ஆகாரமாயிருப்பது போல் இறைவார்த்தை உடலுக்கும் ஆரோக்கியமாகும். நோயுற்றோரை இயேசு ''வார்த்தையால்'' சுகமாக்கினார் (மத் 8:8,16). ''வசனத்தை அனுப்பி'' தேவன் இஸ்ரவேலரைக் குணமாக்கினார் (சங் 107:20). இன்றும் அவரது வார்த்தைக்கு அதே வல்லமை உண்டு. ''என் மகனே, என் வார்த்தைகளைக் கவனி... அவைகள் உயிரும், உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்'' (நீதி 4:20-22).

அப்படியே வேத வசனம் சிந்தைக்கும் உணவாகும். உற்சாகமாய்த் திருவசனத்தைப் படித்ததாலேயே இளைஞன் இயேசு தமது பருவத்திற்கும் மிஞ்சிய ஞானியாயிருந்தார் (லூக் 2:47,52). தாவீதின் அனுபவமும் அதுவே. ''உமது சாட்சிகள் என் தியானமாயிருக்கிறபடியால் எனக்கு போதித்தவர்கள் எல்லாரிலும் அறிவுள்ளவனாயிருக்கிறேன்'' என்றான் அவன் (சங் 119:99,100). ஆம், வேதமே மூளைக்குச் சிறந்த டானிக்!

வேத வாசிப்பு அட்டவணை ஒன்றைத் தெரிந்துகொண்டு அதைத் தவறாது பின்பற்றுங்கள். தினசரித் தியானத்திற்கும் மனனத்திற்கும் உதவியாக நான் வெளியிட்டுள்ள *''வேதாகம அட்டவணை''* என்ற குறுநூல் பயனுள்ளதாயிருக்கும். வேதமில்லாத நாளை வீணாகிய நாளாய்க் கருதுங்கள். நாளின் துவக்கமும் முடிவும் திருவசனத்தோடிருக்கட்டும். அப்பொழுது பகல் பரவசமாயிருக்கும், இரவு இனிமையாயிருக்கும் (சங் 42:8).



## *2. பரிசுத்தப் பெரும்பாதை*

சீடர்களின் பரிசுத்தமே இயேசுவின் கரிசனையாயிருந்தது. இறை வார்த்தையே அதற்கு வழியென அவர் அறிந்திருந்தார். எனவேதான், ''உமது சத்தியத்தினால் அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உமது வசனமே சத்தியம்'' எனப் பிதாவிடம் ஜெபித்தார் (யோ 17:17). தமது ''உபதேசத்தினால்'' சீடர்கள் சுத்தமானார்களென அவர்களுக்கு அறிவித்தார் (யோ 15:3).

ஆண்டவரது வார்த்தைகள் ஏழு முறை புடமிடப்பட்ட வெள்ளி போன்று சுத்தமானவை (சங் 12:6). அது உண்மை. ஒழுக்கம், நீதி, கற்பு, அன்பு, நற்கீர்த்தி, புண்ணியம், புகழ் ஆகியவற்றிற்குத் தோள் கொடுக்கும் (பிலி 4:8). ஆனால் துர்க்குணம், கபடம், வஞ்சகம், பொறாமை, புறங்கூறுதல் போன்றவற்றிற்கெதிரே வாள் வீசும் (1 பேது 2:1,2). பிழைகள், குற்றங்கள், துணிகரப் பாவங்கள், பெரும் பாதகம் ஆகியவற்றிற்குத் திருவசனமானது மாற்று மருந்தாகும் (சங் 19:7-13). பரிசுத்த வேதம் பரிசுத்த மக்களை உருவாக்குகிறது.

பாவத்தை நமக்கு உணர்த்துவதில் வசனத்திற்கு நிகரேது? அரசர்களைத் தங்கள் ஆடைகளைக் கிழிக்க வைத்ததும், மக்களை மனங்கசந்து அழ வைத்ததும் திருவசனமன்றோ? (2 இரா 22:11; நெகே 8:9). இந்தக் கண்ணாடிமுன் யாவும் அப்பட்டம் (யாக் 1:23-25). பரம வைத்தியரின் சிகிச்சைக் கத்தியல்லவா அது? (எபி 4:12,13).

வேதத்திலிருந்து நம்மை விலக்குவது பாவம்; பாவத்திலிருந்து நம்மை விலக்குவது வேதம்! (சங் 1:1,2; 119:104,128). தகவல் தருவதல்ல, திருத்தம் செய்வதே பரிசுத்த வேதத்தின் முதல் நோக்கு. புதிதாய் வேதத்தை வாசித்துக்கொண்டிருந்த ஆப்பிரிக்கப் பெண்ணொருத்தியிடம் ''எப்படியிருக்கிறது?'' எனக் கேட்கப்பட்டது. ''நான் இப்புத்தகத்தை வாசிக்கவில்லை; இப்புத்தகமே என்னை வாசிக்கிறது'' என்றாள்! ஆம், வேதம் நம்மை அலசட்டும். அதின் சலவை தரும் இனிமைதான் என்னே! அதிலுள்ள சட்டமும் சாட்சியும், அதாவது உபதேசமும் வரலாறும், தேவனைப் பிரியப்படுத்துவது எப்படியெனப் போதிக்கிறது (ஏசா 8:20; 1 கொரி 10:5,11). இப்புனித நெடுஞ்சாலையில் நடப்பவன் அறிவற்றவனானாலும் வழி தவறமாட்டான் (ஏசா 35:8; சங் 119:165).

### *3. எதிரியை வீழ்த்தும் வாள்*

இயேசுவைத் தீட்டுப்படுத்தித் திசைதிருப்பப் பிசாசு அத்தனையும் செய்தான்; ஆனால் படுதோல்வியடைந்தான். இயேசுவின் ''எழுதியிருக் கிறதே'' எனும் வாள் வீச்சுக்கு முன் அவனால் நிற்க முடியவில்லை (மத் 4:4,7,10). இயேசு தமது ஞானம், பலம் இவை மீது சாராது திருவசனத் தையே கையாடினார்.

வனாந்தரத்தில் இயேசு சந்தித்த சோதனைகள் நமக்கெதிரான முப் பெரும் எதிரிகளுக்கு அடையாளமானவை. ''மாம்சத்தின் இச்சை, கண் களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை.'' வசனம் நம்மில் நிலைகொண்டி ருந்தால் மட்டுமே இவைகளை நிலைபெயர்க்கலாம் (1 யோ 2:14-16).

பாவப் பழக்கமே மிகப்பெரிய அடிமைத்தனம். வசனமெனும் பட்டய மின்றி விடுதலை தேடுவது வீண். ''சத்தியம் உங்களை விடுதலையாக் கும்'' என்றார் இயேசு (யோ 8:32-34). சத்துருவின் தந்திரங்கள் எண்ணில டங்கா (ஆதி 3:1,2; 2 கொரி 2:11). இடங்கொடுத்தால் தலைக்குமேல் ஏறிவிடுவான், இருபுறமும் கூர்மையான வாளெடுத்தாலோ தலை தெறிக்க ஓடிவிடுவான். நமது வாழ்வில் தனது அரியணை அமைக்க முடியாது போவான் (வெளி 2:12,13).

திருவசனத்திற்கு நெடுகவே கீழ்ப்படிதல் நமது தசைகளை வலுப் படுத்தி, கடவுளுக்கெதிரான எல்லா எண்ணங்களையும் தகர்க்கச்செய் யும் (2 கொரி 10:4-6). சத்துருவின் வெள்ளம் போன்ற படையெடுப்பை முறியடிப்பது நமது வாயிலுள்ள தேவ வசனமே (ஏசா 59:19,21). வசனத் திற்கு அடிபணிவோம், சத்துருவுக்கெதிராய் அதை அறிக்கையிடுவோம், வெற்றி நமதே!

### *4. அசையா அடித்தளம்*

மலைப்பிரசங்க முடிவில் இயேசு இரு வகை அடித்தளங்களைக் குறித்துப் பேசினார். ஒன்று அசையாதது, அடுத்தது அழிந்துபோவது. தேவ வசனமே அசையாத அடித்தளமாம். மழை வரட்டும், வெள்ளம் அடிக்கட்டும், புயல் மோதட்டும், அசையாது வசனக் கன்மலை (மத் 7:24-27).

நமது செயல்கள் யாவும் வசனத்திற்கிசைந்ததாய் இருக்கவேண்டும். பரிசுத்த எழுத்துக்கு மாறான எதையும் செய்யத் துணியக்கூடாது. ''புத்த



கத்தில்'' எழுதியிருப்பதற்கு இடப்புறமோ, வலப்புறமோ செல்லக்கூடாது (யோசு 23:6). மனிதனோ சத்தியத்திற்குப் பதிலாகப் பாரம்பரியங்களை யும், தேவ வல்லமைக்குப் பதிலாக மனித ஞானத்தையும், ஆரோக்கிய வசனங்களுக்குப் பதிலாக ஆகாத உபதேசங்களையும் நிலைநிறுத்தப் பார்க்கிறான். இவையெல்லாம் வெறும் மணல்தான். இவற்றிற்கெதிராக இயேசு குறிப்பாய் எச்சரித்துள்ளார்.

*அ) பாரம்பரியங்கள்*

''உங்கள் பாரம்பரியத்தினால் தேவனது கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்'' என வேதபாரகரையும் பரிசேயரையும் இயேசு கடிந்து கொண்டார் (மத் 15:3-6).

எல்லாச் சபைப்பிரிவுகளிலும் தந்திரமாக வசனத்துக்கெதிரான பாரம் பரியங்கள் நுழைந்துவிட்டன. வசதியை நாடுவதால் மக்கள் சத்தியத்தை விடப் பாரம்பரியங்களையே விரும்புகிறார்கள். சத்தியத்திற்காகப் போராட அழைக்கப்பட்டுள்ளோம். இப்போராட்டத்திற்கான செலவைக் கணக்குப் பார்ப்பது அவசியம். புகழ் போய்விடும், தலையும் போய்விடும். தமது கால மார்க்கவுலகின் பாரம்பரியங்களை எதிர்த்த இயேசுவுக்குப் பரிசு சிலுவைதான். அப்படியானால் நம் கதி? (லூக் 23:31).

மார்க்கத் தலைவர்களுக்கு அஞ்சாது, வசனத்துக்கெதிரான சடங்காச் சாரங்கள் அத்தனையையும் மார்டின் லூத்தர் (1483-1546) போல் எதிர்க்க வேண்டும். சபையல்ல வேதத்திற்கு அதிகாரம் கொடுப்பது; வேதம்தான் சபைக்கு அதிகாரம் கொடுக்கிறது. எனவே சபை நம்புவதென்ன என்ப தல்ல, வேதம் சொல்லுவதென்ன என்பதே காரியம். ஆதியிலே வார்த்தை இருந்தது, சபையல்ல!

*ஆ) மனித ஞானம்*

மனிதனது ஞானமும் தர்க்கமும் தேவனது அற்புத வல்லமையை ஒப்புக்கொள்ளத் தயங்குகின்றன. அன்றைய சதுசேயரைப் பகுத்தறி வாளர் சங்கத்தினர் எனலாம். அவர்கள் உயிர்த்தெழுதலையோ தூதர் களையோ நம்புவதில்லை. உயிர்த்தெழுதல் குறித்துக் கேள்வி கேட்டு இயேசுவை மடக்க முயற்சித்தனர். இயேசுவோ, ''நீங்கள் வேத வாக்கியங் களையும், தேவ வல்லமையையும் அறியாமல் தப்பான எண்ணங் கொள்ளுகிறீர்கள்'' எனப் பதில் தந்தார் (மத் 22:23-33).

தேவ வல்லமையும் வெளிப்பாடுமின்றி, வெறுமனே தலையறிவால் வசனத்தை விளங்க, விளக்க முயலும் கிறிஸ்தோரும், பிரசங்கிகளும்

இன்றுமுண்டு. இத்தத்துவத்தைப் பவுல் முற்றும் நிராகரித்தான் (1 கொரி 2:1-5). தேவ வசனமும் தேவ வல்லமையும் சேர்ந்தே செல்லவேண்டும். ஒன்றிற்காக மற்றொன்று பலியாகக்கூடாது. அவரது சொல்லும் செயலும் பின்னிப்பிணைந்தவை.

*இ) நவீன உபதேசங்கள்*

''ஒருவனும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள்... அநேகக் கள்ளத் தீர்க்கரும் எழும்பி அநேகரை வஞ்சிப்பார்கள்'' என்று இயேசு ஒலிவ மலையில் ஒலித்தார் (மத் 24:4,11). விசுவாசத்தை விட்டு விலகலும், பிசாசின் உபதேசங்களில் சிக்குதலும் இறுதிக்காலத்தின் அடையாளங்கள் (1 தீமோ 4:1). வஞ்சக ஆவிகள் இன்றுபோல் என்றும் விறுவிறுப்பாயிருந்ததில்லை. பிரசங்கிகள் வேடிக்கையான வெளிப்பாடு களைக் கொண்டுவருகிறார்கள். யாருக்குத்தான் கூட்டமில்லை? ஆவி யானவரின் உதவியுடன் கவனமாய் இன்றையப் போதனைகளைச் சோதித்துப்பார்க்காவிடில் ஏமாறுவது நிச்சயம் (அப் 17:11). ''சத்திய ஆவி யானவர் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துவார்'' எனும் வாக்குண்டே (யோ 16:12,13). நம்மீதுள்ள அவரது அபிஷேகத்தினால் நாம் பகுத்தறி யலாம் (1 யோ 2:26,27). மட்டுமல்ல, பலவிதக் காற்றுகளிலிருந்து நம் மைப் பாதுகாக்க தேவனால் நியமிக்கப்பட்ட திருப்பணியாளருமுண்டு (எபே 4:11-14).

## *5. ஜெபப் பாடப் புத்தகம்*

இயேசுபோல் ஜெபித்தது எவருமிலர். அவர் எப்பொழுதும் திருவசனத் திற்கேற்ப ஜெபித்ததால் அவரது ஜெபங்கள் தேவனுக்குப் பிரிய வாசனை யாயிருந்தன.

இதோ ஓர் எடுத்துக்காட்டு: பிரதான ஆசாரியனின் வேலைக்காரனின் காதைப் பேதுரு வெட்டினான். இயேசு பேதுருவை நோக்கி, ''நான் என் பிதாவை வேண்டிக்கொண்டால் அவர் பன்னிரண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடம் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? அப்படிச் செய்வேனானால், இவ்விதமாய்ச் சம்பவிக்க வேண்டும் என்கிற ***வேதவாக்கியங்கள்*** எப்படி நிறைவேறும்?'' என்றார் (மத் 26:53,54). என்னே படிப்பினை!

இன்று ஜெபத்தில் ஓர் எழுப்புதல் வந்திருப்பது உண்மை. ஆனால் தகுந்த உபதேசமில்லாவிடில் அந்நிய அக்கினியும் சேர்ந்துவிடும்.



எனவே ஜெபிப்பது எப்படியென விசுவாசிகளுக்குப் போதிக்கவேண்டும். ஜெபமானது வசனத்திற்கு இசைந்ததாகவே இருக்கவேண்டும். தேவ சித்தத்தின்படி ஜெபிக்கக் கட்டளை பெற்றுள்ளோம் (1 யோ 5:14). தேவ வசனம்தான் தேவ சித்தமாம். எதையும் ஆண்டவரிடம் கேட்கலாம்; ஆனால் அந்த ''எதையும்'' என்பது வெளிப்படுத்தப்பட்ட தேவ சித்தத்தின் வரம் பிற்குள் இருப்பதவசியம்.

''நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந் தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப் படும்'' என்று இயேசு போதித்தார் (யோ 15:7). ஜெபமற்ற வேத ஆராய்ச்சி வறட்சியாயிருக்கும்; வேத ஆராய்ச்சியற்ற ஜெபமோ ஆபத்து. வசனத் தால் நிரம்பியிருந்தால்தான் சரியாய் ஜெபிக்க முடியும். வசனத்தில் நிலைத்திருந்தால்தான் சரியான பதில் கிடைக்கும். மற்றபடி ஜெபமே அபத்தம்தான் (நீதி 28:9).

மறைநூலுக்கு இசைவாய் ஜெபித்ததாலேயே தானியேலின் ஜெபம் அந்த வினாடியே பரத்தை எட்டியது. சீக்கிரம் அவனுக்குப் பதில் போய்ச் சேரும்படி வழியிலுள்ள தடங்கல்களை நீக்க பிரதான தூதனாகிய மிகாவேலை அனுப்புமளவுக்குத் தானியேலின் ஜெபம் தேவனுக்குப் பிரியமாயிருந்தது (தானி 9:2,3; 10:10-14).

அப்படியே, திருவசனமில்லாத் தொழுகையும் பயனற்றது. வசனந் தானே அதின் ஆக்கியோனை நமக்கு வெளிப்படுத்துவது! தாம் வேதத் தின் ஒவ்வொரு புத்தகத்திலும் எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளாரென்ற விளக்கமே உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் வசன வியாக்கியானமாகும். அதுவே சீடரை நிறுத்தாத தொழுகைக்குள் நடத்திற்று (லூக் 24:25-27, 44,52,53). ''அறியாததைத்'' தொழுதுகொள்வது அறியாமை (யோ 4:22). ஆனால் தேவனைக் குறித்த வேதத்தின் ஒவ்வொரு வெளிப்பாடும் *''தேவ னே, நீர் பெரியவர்''* என்று நம்மைப் பரவசமாய்ப் பாடச்செய்கிறது! தேவன் தம்மை மோசேக்கு வெளிப்படுத்தியபோது அவன் ''தீவிரமாய் தரைமட்டும் குனிந்து பணிந்து''கொண்டான்! (யாத் 34:5-8).

## *6. நன்னெறி நூல்*

வேதமில்லையேல் நாம் இருட்டில் தடுமாறிக்கொண்டிருப்போம். ஏனெனில், ''கட்டளையே விளக்கு, வேதமே வெளிச்சம்'' (நீதி 6:23). நியாயச்சட்டங்கள் அத்தனையையும் இயேசு இரண்டே கட்டளைகளில்

அடக்கினார்: தேவனை நேசியுங்கள், பிறரை நேசியுங்கள்! (மத் 22:35-40). ''இவைகளிலும் பெரிய கற்பனை வெறொன்றுமில்லை'' என்றும் கூறிவிட்டார் (மாற் 12:31).

எனவே வேத அறிவு யாவும் தேவனை முழுமையாய் நேசிக்கவும், பிறரை நம்மைப்போல் நேசிக்கவும் வழிநடத்தவேண்டும். இந்த அன்பின் வாழ்வுக்குள் நடத்தாத எதையும் வேத சத்தியமென்று சொல்வதற் கில்லை. தாங்கள் அறிவித்த, எழுதிய எல்லாச் செய்திகளிலும் தீர்க்கரும் அப்போஸ்தலரும் தேவன் மீதுள்ள நமது அன்பை ஆழப்படுத்துவதை யும், பிறர்பால் நமது கடமையுணர்வை விரிவாக்குவதையும் கருத்தாய்க் கொண்டிருந்தனர். இதோ இரு எடுத்துக் காட்டுகள்: தீர்க்கன் மீகா, ''நியா யம் செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்குமுன் மனத்தாழ் மையாய் நடப்பதையல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடம் கேட்கிறார்?'' (மீகா 6:8). அப்போஸ்தலன் பேதுரு, ''எல்லாரையும் கனம் பண்ணுங்கள்; சகோதரரிடம் அன்புகூறுங்கள்; தேவனுக்குப் பயந்திருங் கள்'' (1 பேது 2:17).

நான் தேவனுக்குச் செய்யவேண்டியது என்ன? நான் மனிதனுக்குச் செய்யவேண்டியது என்ன? இந்த இரு கேள்விகளையும் கேட்டுப் பார்க் காமல் வேதத் தியானமோ, ஆராய்ச்சியோ முடியக்கூடாது. வேதத்தின்படி நாம் நடந்தால் மனிதர் இன்னும் அதிகமாக வேதத்தை மதிப்பர். வேதத் தை நாடுவதோடு அதின்படி நடக்கவும் வேண்டும்.

### *7. கட்டுவோரின் தூக்கு நூல்*

இறையரசைக் கட்டும் பணிக்கு இயேசுவின் கரத்திலிருந்த வரைபட மும் தூக்கு நூலும் வேதமே. ஏசாயா 61:1-3ஐ வாசித்து, எளியவருக்கு நற்செய்தியறிவித்தலும், இதயம் உடைந்தோருக்கு ஆறுதலளித்தலும், கட்டிலிருப்போருக்கு விடுதலையளித்தலும், பார்வையற்றோருக்குப் பார்வையளித்தலும், தள்ளப்பட்டோரை அணைத்தலுமே தமது ஊழிய மென இயேசு அறிந்துகொண்டார் (லூக் 4:16-21). ஒவ்வொரு அடியை யும் வசனத்தின்படியே எடுத்துவைத்தார். பெருங்கூட்டம் தம்மைத் தொடர்ந்தபோது தம்மைப் பிரபலமாக்கிவிடக்கூடாதென்று கண்டிப் பாய்க் கட்டளையிட்டார் (மத் 12:15-21). ஏசாயா 42:1ஐ நிறைவேற்றும் படி இப்படிச் செய்தார்.

நமது ஊழியம் எவ்வகையாயினும் வேதமே நமது கைநூலாகும். நமது முறைகள் எதுவும் திருவசனத்தின் தத்துவங்களுக்கு முரண்படக்கூடாது.



''என்ன'' கட்டுகிறோமென்பதைவிட, ''எப்படிக்'' கட்டுகிறோமென்பதே முக்கியம் (1 கொரி 3:12-15). பேழையைக் கடவுள் தந்த திட்டத்தின் படியே நோவா கட்டினான் (ஆதி 6:22). ஆசரிப்புக் கூடாரத்தைக் கடவுள் தந்த மாதிரியின்படியே மோசே கட்டினான் (யாத் 39:42,43). விதிமுறை களை மீறும் போட்டியாளனுக்குப் பதக்கம் கிடைக்காது (2 தீமோ 2:5).

உபதேசம் மட்டுமல்லாது, தங்கள் தலைமுறையில் தேவனுக்கும் மனிதனுக்கும் உகந்த வகையில் பணியாற்றிய பலரது சரிதைகளும், சுய சரிதைகளும் வேதத்தில் இடம்பெற்றுள்ளன. அவைகளால் நமக்குப் பெரும் பயனுண்டு. நோவாவைப்போல் கீழ்ப்படியவும் (ஆதி 6:22), மோசே யைப்போல் சாந்தமாயிருக்கவும் (எண் 12:3), யோசுவாவைப்போல் அஞ் சாதிருக்கவும் (யோசு 10:40), தெபொராளைப்போல் துடிப்பாயிருக்கவும் (நியா 5:7), நெகேமியாவைப்போல் உறுதியாயிருக்கவும் (நெகே 6:3), எஸ்தரைப்போல் ஞானமாயிருக்கவும் (எஸ் 5-7), தாவீதைப்போல் தொழுதுகொள்ளவும் (சங்கீதங்கள்), ஏசாயாவைப்போல் தைரியமாய் இருக்கவும் (ரோ 10:20அ), தானியேலைப்போல் ஜெபிக்கவும் (தானி 6:10), யோவான் ஸ்நானகனைப்போல் தாழ்மையாயிருக்கவும் (லூக் 3:16; யோ 3:30), இயேசுவைப்போல் பரிசுத்தமாயிருக்கவும் (எபி 4:15), பர்னபாவைப்போல் நல்லவராயிருக்கவும் (ஆதி 11:24),பவுலைப்போல் தியாகம்பண்ணவும் (1 கொரி 9:1-12), பெபெயாளைப்போல் உதவி செய் யவும் (ரோ 16:1), தீமோத்தேயுவைப்போல் நேசிக்கவும் (பிலி 2:19,20), யோவானைப்போல் இறுதிவரை சத்தியத்திற்காக நிற்கவும் (வெளி 1:9) நாம் கற்றுக்கொள்கிறோம். நம்மை எச்சரிக்க பிலேயாம், தேமா போன்ற எதிர்மறை எடுத்துக்காட்டுகளும் வேதத்தில் உண்டு. எப்படிச் செய்யக் கூடாதென்றும் போதிக்கும் வேதத்திற்காகத் தேவனைத் துதிப்போம்.

### *மேன்மையிலும் மேன்மை*

வேத வாக்கியங்கள் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டதே யூதரின் சிறப் பான மேன்மையாகும் (ரோ 3:1,2). இதே சத்தியத்தைப் பல்லாயிர மாண்டுகட்குமுன் மோசே குறிப்பிட்டான்: ''இந்த நியாயப்பிரமாணம் முழுமைக்கும் ஒத்த இவ்வளவு நீதியுள்ள கட்டளைகளையும் நியாயங் களையும் பெற்றிருக்கிற வேறே பெரிய மக்கள் யார்?'' (உபா 4:8). கிறிஸ் தவராகிய நாம் அந்த இஸ்ரவேலரையும்விடக் கூடுதல் ஆசீர்வதிக்கப் பட்டுள்ளோம். அவர்களுக்கிருந்தது பகுதி வேதம்; நமக்கிருப்பதோ முழு வேதம்! அதுவும் இத்தனை மொழிகளிலும், மொழியாக்கங்களிலும்! அல்லேலூயா! கையால் தொடக்கூடிய இவ்வித நிகரற்ற தேவ ஈவைப் பெற்றுள்ள நாம் அதைச் சரியாய்ப் பயன்படுத்துவோம்!

# 3
# அமைதி நேரம்

உலகின் சந்தடிகளை விட்டு இறைவனோடு தனித்து உறவாடும் வேளையே அமைதி நேரம் எனப்படும். பரலோகுடன் தொடர்புகொள்ளும் இவ்வரிய நேரத்தை அலட்சியம் செய்பவர் ஆன்மீக வாழ்வில் சீர்குலைவது திண்ணம். விசுவாசிகள் பலரும் இப்புனிதக் கலையைக் கற்றுக் கொள்ளாதிருப்பது கவலைக்குரியது. அமைதி நேரத்தை ஆசீர்வாதமாக்கும் வழிமுறைகளை இங்கு வரிசைப்படுத்துவோம்.

### *நேரம் குறியுங்கள்!*

மனது தெளிவாயிருக்கும் நேரத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். தாவீதரசனுக்கு வேலைகள் ஏராளம்; ஆனால் அவன் அதிகாலை நேரத்தை ஆண்டவருக்காக ஒதுக்கினான். ''கர்த்தாவே, காலையிலே என் விண்ணப்பம் உமக்குமுன் வரும்'' (சங் 88:13). வேதாகமக் காலங்களிலும் சரித்திரமனைத்திலும் தேவனால் பயன்படுத்தப்பட்டோர் துயிலெழுவோராகவே இருந்திருக்கின்றனர். அவர்கள் மனிதரைச் சந்திக்குமுன் தேவனைச் சந்தித்தனர். ''காலையில் தேவனைக் கண்டுகொள்ளாது ஓடுகிறவன் நாளில் அவரைக் கண்டுகொள்வதரிது'' என்றார் ஜான் பனியன் (1628-1688).

காரணம் எதுவாயினும் குறித்த இந்த நேரத்தைத் தவறவிடக்கூடாது. விண்ணரசரைச் சந்திக்கும் வேளையென அதில் கவனமாயிருக்க வேண்டும். பாபிலோனில் வாலிபன் தானியேல் சிறையிருப்பில் இருந்தான். அங்குள்ளோர் அவனது மார்க்கத்தை வெறுத்தனர். எந்த தேவனிடமும் விண்ணப்பிக்கக்கூடாதென்ற சட்டமும் பிறப்பிக்கப்பட்டிருந்தது. தானியேலோ அதைத் துச்சமென எண்ணினான். எதுவும் அவனது பரிசுத்தப் பழக்கத்தைத் தடைசெய்ய முடியவில்லை. ''முன் செய்துவந்தபடியே'' தினமும் மூன்று வேளை ஜெபித்தான், துதித்தான் (தானி 6:10).



இன்னொரு எடுத்துக்காட்டு அப்போஸ்தலர் நடபடிகளில் உண்டு. பெந்தெகொஸ்தேயை அடுத்து சபை வெகுவாய்ப் பெருகியது. ஒரே நாளில் மூவாயிரம் பேர் திருமுழுக்கு பெற்றனர். எனவே அப்போஸ்தலரின் பொறுப்பு பன்மடங்காகியது. ஆனாலும், அவர்கள் தேவனோடு தனித்திருக்கும் வேளையை அசட்டை செய்யவில்லை. ''ஜெப வேளையைப்'' பாதிக்க எதையும் அவர்கள் அனுமதிக்கவில்லை (அப் 3:1). பெருங்கூட்டம் தம்மிடம் வந்த வேளைகளிலும் தனித்து ஜெபிக்கும்படி வனாந்தரத்திற்கு உருவிச்சென்ற தங்கள் ஆண்டவரிடமிருந்து சீடர்கள் இதைக் கற்றிருந்தனர் (லூக் 5:15,16). அலுவலக நேரம், உணவு வேளை என்றெல்லாம் கண்டிப்பாக வைத்திருக்கிறோமல்லவா? அப்படியே அமைதி நேரத்தையும் கடைபிடிப்போம். அது தேவனைக் கனப்படுத்தும்.

### *கவனியுங்கள், பேசுங்கள்!*

அமைதி நேரமென்றால் நிசப்த வேளை என்று பொருள்படாது. தேவன் நம்முடன் பேசுகிறார், நாம் அவருடன் பேசுகிறோம். அதாவது, வேதத்தை வாசிக்கிறோம், ஜெபிக்கிறோம்.

திருமறைத் தியானத்துடன் தொடங்குவது சிறந்தது. நாம் அவருடன் பேசுமுன் அவர் நம்முடன் பேசக் கேட்போம். ''நீ தேவாலயத்திற்குப் போகும்போது... ***செவிகொடுக்கச்*** சேர்வதே நலம்... தேவன் வானத்திலிருக்கிறார்; நீ பூமியிலிருக்கிறாய், ஆதலால் ***உன்*** வார்த்தைகள் சுருக்கமாயிருப்பதாக'' என்றான் ஞானி (பிர 5:1,2). ''ஒன்று மற்றொன்றிற்கு வழிநடத்தும். ஆனாலும் உங்கள் வார்த்தைகளை தேவன் கேட்பதைவிட அவரது வார்த்தைகளை நீங்கள் கேட்பதே அதிமுக்கியம்'' என்றார் பக்தன் F. B. மேயர். ஜெபமும் துதியும் அவரது வெளிப்பாடுகளுக்கு நமது பிரதிபலிப்புதானே.

### *(அ) வேதத் தியானம்*

வேதத்தைத் தியானிக்கலாம், அல்லது, பகுத்து ஆராயலாம். அமைதி நேரத்தில் நாம் அதைத் தியானிக்கிறோம்.

‘‘உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும்’’ என்ற வார்த்தைகளுடன் தியானத்தைத் துவங்குங்கள் (சங் 119:18).

வேதத்தை வாசிக்கும்போது குழந்தையுள்ளம் தேவை. படித்த மேதைபோல் வேதத்தை அணுகுவோரைத் தேவன் மதிப்பதில்லை. கல்வியறிவற்ற சீடருக்குப் பரமபிதாவானவர் வெளிப்பாடுகளைத் தந்தபோது, இயேசு, ‘‘பிதாவே, இவைகளை ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்’’ என்று வியந்தார் (மத் 11:25). ‘‘புதிதாய்ப் பிறந்த குழந்தைகள்’’ போல் திருவசனமெனும் பாலை விரும்பவேண்டும் (1 பேது 2:3).

### *புதிய ஏற்பாட்டில் துவங்குங்கள்.*

எங்கே துவங்கவேண்டுமென்பது பலரது கேள்வி. இரு காரணங்களுக்காகப் புதிய ஏற்பாட்டில் துவங்குவது நன்று. முதலாவது, நாம் புதிய உடன்படிக்கையின்கீழ் இருக்கிறோம். அடுத்து, புதியதில்லாமல் பழையதை விளங்கிக்கொள்ள முடியாது.

புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களை நான்கு பகுதிகளாகப் பிரிக்கலாம். நான்கு சுவிசேஷங்களும் கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் போதனைகளை அடக்கியுள்ளன. சபை பிறந்து வளர்ந்த விதத்தை நடபடிகளில் வாசிக்கிறோம். தேவ மக்களின் தனி வாழ்விற்கும் சபை வாழ்விற்கும் தேவையான உபதேசங்கள் நிருபங்களில் உள்ளன. சபையின் எதிர்காலமும் உலகின் முடிவும் வெளிப்படுத்தல் புத்தகத்தில் முன்னறிவிக்கப்பட்டுள்ளன. வேறு விதமாய்ச் சொன்னால், முதல் இரு பகுதிகள் நேற்று நடந்தவற்றையும், மூன்றாம் பகுதி இன்றைக்குச் செய்யப்படவேண்டியவற்றையும், இறுதிப் பகுதி நாளை நடக்கவிருப்பதையும் கூறுகின்றன. இப்பின்னணியுடன் புதிய ஏற்பாட்டைத் தியானித்தால் நேற்றும் இன்றும் என்றும் மாறாத இயேசு கிறிஸ்துவின் ஐசுவரியங்களைக் காண நமது கண்கள் தெளிவடையும்.

### *கேள்விகளைக் கேளுங்கள்.*

முழு அத்தியாயத்தையும் ஒரேயடியாக வாசியுங்கள். இரு முறை வாசியுங்கள். பின்னர் கீழ்வரும் கேள்விகளைக் கேட்டுப்பாருங்கள்—



அணைத்துக்கொள்ள வாக்கு ஏமுண்டா?
விட்டுவிடவேண்டிய பாவம் ஏதுமுண்டா?
கவனிக்கவேண்டிய எச்சரிப்பு ஏதுமுண்டா?
புரிந்துகொள்ள வெளிபாடு ஏதுமுண்டா?
பின்பற்ற எடுத்துக்காட்டு ஏதுமுண்டா?
இப்படிப் பல.

இவ்வித எளிய கேள்விகளுக்கான பதில்கள் அப்பகுதியிலுள்ள செய்தியை வரையறுக்கும்.

இன்னொருவிதக் கேள்விகளுமுண்டு— இப்பகுதி தேவனுக்கு நான் செலுத்தவேண்டிய கடமையைக் குறித்துப் போதிப்பதென்ன? மனிதருக்குச் செய்யவேண்டிய கடமையைக் குறித்துப் போதிப்பதென்ன? தேவனை முழுவதுமாகவும் பிறரை நம்மைப்போலவும் நேசிக்கவேண்டுமென்ற இரு கட்டளைகளில் திருமறை முழுவதுமே அடங்கிவிட்டதென இயேசு போதித்தார் (மத் 22:35-40). இவ்விரு கேள்விகளுக்கான விடையை நமது வாழ்வில் பயிற்சித்தால் வசனமார்க்கத்தாராவோம் (யாக் 1:23).

### *அனுதின மன்னா*

அன்றையப் பகுதியிலிருந்து நீங்கள் கற்றுக்கொள்வதே அந்த நாளுக்குத் தேவன் உங்களுக்குத் தரும் செய்தி என்று விசுவாசியுங்கள். எடுத்துக்காட்டாக, அன்று நீங்கள் சந்திக்கும் பிரச்னையின்போது காலையில் தியானித்த வாக்கை நீங்கள் உரிமைபாராட்டலாம். எப்பொழுதும் எங்கும் மாற்றிக்கொள்ளக்கூடிய காசோலைப் புத்தகமே வேதம். காலையில் தியானித்ததொரு எச்சரிப்பு அந்நாளின் சோதனையில் உங்களைக் காக்கும். தீர்மானமேதும் எடுக்கவேண்டிய வேளையில் அந்த நாளின் தியானப் பகுதி உங்கள் கால்களுக்குத் தீபமாகும்.

அமைதி நேரத்தைக் கிரமமாய்க் கடைபிடிப்போர் மேற்கூறிய அனுபவத்திற்குச் சான்றாய்த் திகழ்கின்றனர். அனுதின தியானமே அனுதின மன்னா (யாத் 16:21). தேவனுடைய கிருபை காலைதோறும் புதியது (புல 3:22,23).

குறிப்பிட்டதொரு பகுதியைத் தினமும் தியானிப்பது தவிர்த்து தினமும் ஐந்து சங்கீதங்களும், நீதிமொழிகளிலிருந்து ஓர் அத்தியாயமும் வாசிப்பது சிறந்ததென பக்தர் பலர் பகர்ந்துள்ளனர். இப்படி இவ்விரு புத்தகங்களையும் மாதமொருமுறை வாசித்து முடித்துவிடலாம். தேவ

னோடுள்ள ஐக்கியத்தைச் சங்கீதங்களும், மனிதரோடுள்ள சகவாசத்தை நீதிமொழிகளும் நமக்குப் போதிக்கின்றன. இவ்விரண்டும் நமது வளர்ச்சியைச் சமநிலைப்படுத்தும்.

### *பொதுப் போதனையும், தனிச் செய்தியும்*

உங்களுக்கு முக்கியமாய்த் தோன்றுகிற சொற்கள், சொற்றொடர்கள், வாக்கியங்களை அடிக்கோடிடுங்கள். வேதம் முழுவதும் தேவ வார்த்தைதான்; ஆனால் அந்த வேளையில் அப்பகுதியில் உங்கள் கவனத்தை ஈர்க்கும் குறிப்பே தேவன் உங்களுக்கருளும் தனிச் செய்தியாகும். பொதுவான வேத வசனத்தை “logos” என்றும், தனிப்பட்ட தேவச் செய்தியை “rhema” என்றும் கிரேக்க மொழியில் அழைப்பார்கள். குறிப்பேடு ஒன்றில் அன்றன்றுள்ள தியானக் குறிப்பை எழுதி வைத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு வரியிலும் தேவன் பேசுகிறாரென்று விசுவாசிப்பதே வேதத்தை விளங்கிக்கொள்ள இலகுவான வழியாகும்.

தியானித்தவற்றை நாள் முழுவதும் அசை போட்டுக்கொண்டிருங்கள். தேவ பக்தியற்றோரின் வழிகளை அகற்றி, ‘‘இரவும் பகலும்’’ வேத வசனங்களைப் பிரியமாய்த் தியானிக்கிறவன் பாக்கியவான் (சங் 1:1,2). இவ்வித மனிதன் தனது செயல்களிலெல்லாம் சித்திபெறுவான் (வச 3). இரவில் படுக்கச் செல்லுமுன் அன்று நடந்துகொண்ட விதத்தைக் காலைத் தியானத்தோடு ஒப்பிட்டுப் பாருங்கள்.

தனி ஊழியரும் நிறுவனத்தார்களும் பல அனுதின தியானப் புத்தகங்களை வெளியிடுகின்றனர். அவற்றில் சில உண்மையாகவே உசிதமானவை. ஆனால் அவையொன்றும் நீங்களாகவே வேதத்தைத் தியானிப்பதற்குப் பதிலாகிவிட முடியாது. தியானத்திற்கு உதவியாகவே அவைகளை வைத்துக்கொள்ளலாம்.

### *(ஆ) ஜெபம்*

வேதத் தியானத்தையடுத்து ஜெபிக்கச் செல்லுகிறோம். ஜெபத் தில் செய்யவேண்டிய நான்கு முக்கிய காரியங்களுண்டு. P-R-A-Y என்ற நான்கு எழுத்துக்களால் அவற்றைக் குறிப்பிடலாம்: Praise (துதியுங்கள்), Repent (மனந்திரும்புங்கள்), Ask (கேளுங்கள்), Yield (ஒப்புக்கொடுங்கள்).

#### *துதியுங்கள்!*

‘‘உமது நாமம் பரிசுத்தப்படுவதாக’’ எனும் துதியோடு இயேசுவின் மாதிரி ஜெபம் துவங்குகிறது. துதியோடு அவரது பிரசன்னத்தில்



நுழையக் கட்டளை பெற்றுள்ளோம் (சங் 100:4). துதிப் பாடலொன்று பாடலாம் (வச 2). பல புதிய துதிப் பாடல்களும் பல்லவிகளும் இப்பொழுது வந்துள்ளன. சத்தத்தை உயர்த்தி தேவனைத் துதிக்கையில் ஆவியில் ஒரு விடுதலையை உணருவீர்கள். தேவன் துதிகளில் வாசம்பண்ணுவதால் அவரது பிரசன்னம் உங்களுக்கு நிசமாகும் (சங் 22:3).

துதிப்பதில் ஆராதனையும் நன்றி செலுத்துதலும் அடங்கும். அவருக்காக அவரைத் துதிப்பது ஆராதனை; அவர் அருளுவதற்காக அவரைத் துதிப்பது நன்றி செலுத்துதல். இரண்டையும் செய்யுங்கள். சிறுவயது முதலே நம்மில் பலருக்கும் சங்கீதம் 103:1,2 மனனமாய்த் தெரியும். முதல் வசனத்தில் ஆராதிக்க அழைக்கப்படுகிறோம். ‘‘என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; என் முழு உள்ளமே, அவரது பரிசுத்த நாமத்தை ஸ்தோத்திரி.’’ இரண்டாம் வசனம் நன்றி செலுத்த அழைக்கிறது: ‘‘என் ஆத்துமாவே, கர்த்தரை ஸ்தோத்திரி; அவர் செய்த சகல உபகாரங்களையும் மறவாதே.’’ ஜெபத்தின் நாடி ஆராதனையென்றும், அதின் இதயம் நன்றி செலுத்துதலென்றும் ஒருவர் சொன்னார்.

வேதத்தின் மூலமாகவே தேவன் பிரதானமாகத் தம்மை வெளிப்படுத்துகிறார். தியானித்த பகுதியில் தேவனைப்பற்றி அறிந்ததைத் துதியாக்குங்கள். அவரைச் சர்வ வியாபகர், சர்வ வல்லவர், சர்வ ஞானி, இப்படி எவ்விதம் காணுகிறீர்களோ அதைச் சொல்லித் துதியுங்கள். அல்லது அவரை சிருஷ்டிகர், இரட்சகர், திரும்பத் தருகிறவர், நேசர், காக்கிறவர், கொடுப்பவர் என்று அப்பகுதியில் கண்டிருப்பீர்கள். அதற்கேற்ற வார்த்தைகளால் அவருக்குப் புகழ்பாடுங்கள்.

தேவனது மீட்பின் நாமங்களைச் சார்ந்தும் உங்கள் துதி எழும்பலாம். யேகோவா-யீரே, தேவையைப் பார்த்துக்கொள்ளும் கர்த்தர். யேகோவா-ரப்பா, குணமளிக்கும் கர்த்தர். யேகோவா-நிசி, வெற்றி தரும் கர்த்தர். யேகோவா-மெக்காடேஷ், பரிசுத்தமாக்கும் கர்த்தர். யேகோவா-ரா, நமது மேய்ப்பராகிய கர்த்தர். யேகோவா-ஷம்மா, நம்மோடிருக்கும் கர்த்தர் (ஆதி 22:14; யாத் 15:26; 17:15; லேவி 20:8; நியா 6:23,24; சங் 23:1; எரே 33:16; எசேக் 48:35).

#### *மனந்திரும்புங்கள்!*

மனந்திரும்புதலை ஜெபத்திலிருந்து பிரிக்க முடியாது. ‘‘தேவனே, என்னை ஆராய்ந்துபாரும்’’ என்று தாவீது ஜெபித்தான் (சங் 139:23,24).

தேவ சமுகத்தில் இருதயத்தை அமைதிப்படுத்தும்போது மறைந்திருப்ப வைகள் மேலே வரும். *''தூய்மை பெற நாடு''* என்றொரு பழம் பாடல் உண்டு. ஆங்கிலத்தில் இது ''தூய்மை பெற நேரமெடு'' என்றிருக்கிறது.

குற்றப்படுத்த அல்ல, சுத்தப்படுத்தவே ஆவியானவர் நம்மை உணர்த்துகிறார். எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாத இயேசு நமக்காகப் பரிந்துபேசி நமக்குதவ கிருபாசனத்தில் வீற்றிருக்கிறார். எனவே அவரிடமிருந்து நமக்கு மன்னிப்பும், வெற்றியும் வருகின்றன (எபி 4:15,16). அவருக்குமுன் நமது இருதயங்களைத் திறக்கும் போது அவரது இரத்தம் அந்நொடியே நம்மைக் கழுவிவிடுகிறது (1 யோ 1:7,9).

தேவனுக்கு விரோதமானது மட்டுமல்ல, மனிதருக்கு எதிரான பாவங்களையும் நமது மனந்திரும்புதல் உள்ளடக்கவேண்டும். ''எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக் கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும்'' என்று ஜெபிக்க இயேசு கற்பித்தார். கோபம், பொறாமை, புறங்கூறல், பகை போன்ற யாவற்றையும் தேவனிடம் அறிக்கையிடுங்கள். செய்யவேண்டியதைச் செய்யாததும் பாவம்; செய்யக்கூடாததைச் செய்வதும் பாவம். ''மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்'' (மத் 6:15). தவறிழைக்கப் பட்டவரோடு ஒப்புரவாகிக் காரியங்களைச் சரிசெய்யுங்கள் (மத் 5:23,24). தாமதம் வேண்டாம்.

மனந்திரும்புதலின் ஆவியில்லாத ஜெபம் வீண். ''என் இருத யத்தில் அக்கிரமச் சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார்'' என்று தாவீது சொன்னது சரியே (சங் 66:18). ''செம்மையானவர் களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்'' (நீதி 15:8).

### ***கேளுங்கள்!***

தேவனைத் துதிப்பதும், நம்மை அலசிப்பார்ப்பதும் அவருக்குமுன் நமது தேவைகளைச் சமர்ப்பிப்பதற்குச் சரியான ஆயத்தங்களாகும். முந்தியதில் அவரது தகுதியையும், அடுத்ததில் நமது தகுதியின்மையையும் அறிக்கையிடுகிறோம். ஓர் அரசனிடம் உதவிக்காகச் செல்கையில் இரண்டையும் செய்வோமல்லவா? தேவனாகிய இராஜாவோ நமது தந்தையுமாயிருக்கிறார்! எனவே நடுக்கத்தோடும், அதே வேளையில்



நமது சிலாக்கியத்தை உணர்ந்தவர்களாகவும், நமது தேவைகளை அவர் முன் கொண்டுவருவோம்.

தேவனிடம் சொல்லுகிற அளவிற்கு முக்கியமானதல்ல என்று ஒன்றுமே கிடையாது. மருத்துவரிடம் சுகமில்லையென்று சொல்லியும் விபரம் சொல்லாத நோயாளியைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்? தினமும் ஜெபிக்கவேண்டிய நான்கு முக்கிய காரியங்களுண்டு.

*1. மனநிலைத் தேவை*

''ஞானமே முக்கியம்'' (நீதி 4:7). சொப்பனத்திலும் என்ன வேண்டுமென்று தேவன் கேட்டபோது ஞானம் வேண்டுமென்றான் சாலொமோன்! (1 இரா 3:5,9,10). நாம் யாவரும் ஞானத்தில் குறைவுள்ளவர்கள். தேவனே ஞானத்திற்குக் காரணமானவர். அவரிடமிருந்து வரும் ஞானமானது சுத்தமானது; இவ்வுலகில் மனிதரோடுள்ள நமது தொடர்புகள் யாவற்றிற்கும் அது போதுமானது (யாக் 1:5,6; 3:17). ஞானத்திற்காக ஜெபிப்பது தேவனுக்கு அதிகப் பிரியமானதால் விசுவாசத்துடன் கேட்கையில் அதை நிறைவாய்த் தருகிறார்.

*2. உடலுக்கடுத்த தேவைகள்*

ஆகாரம், ஆடை, ஆரோக்கியம் ஆகியவை இங்கு இடம்பெறும். அன்றன்றுள்ள அப்பத்திற்காக இயேசு ஜெபிக்கச் சொன்னார். ஒன்றுக்கும் கவலைப்படாமல் இன்றைய நாளையத் தேவைகளுக்காக எல்லா நன்மைக்கும் காரணராகிய தேவனை விசுவாசியுங்கள். இயேசுவானவர் நமது உடலுக்கும் ஆண்டவர். பத்திரமாயிருக்கவும், பாதுகாப்பிற்காகவும் ஜெபியுங்கள். சதையில் ஒரு முள்போல் நெடுநாள் வியாதியேதும் இருந்தால் அதை நீக்கும்படி மன்றாடி ஜெபியுங்கள். ஒரு வேளை உங்களைக் குணமாக்க அவர் சித்தங்கொள்ளாவிடில் போதுமான கிருபையைத் தந்து குறைவிலும் வெற்றியாய் வாழ பலம் தருவார் (2 கொரி 12:7-10). கேட்ட எதையாவது அவர் தராவிடில் அதைவிட மேலாதொன்றைத் தரவிருக்கிறாரென்பதே பொருள்.

*3. ஆன்மீகத் தேவைகள்*

நமது ஆன்மீகத் தேவைகள் ஏராளம்; ஆனால் இங்கு மூன்று தேவைகளைக் குறிப்பாகக் கவனிக்கலாம். முதலாவது, சோதனையில் வெற்றி. ''எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல் தீமையி னின்று இரட்சித்துக்கொள்ளும்'' என்று ஜெபியுங்கள் (மத் 6:13). வெற்றிபெற

வேண்டுமென்ற வெறும் விருப்பம் மட்டும் போதாது. விழித்திருந்து ஜெபிக்கும்போதுதான் வெற்றி நமதாகும் (மத் 26:41). சத்துருவிடம் போராடுவதற்கான வல்லமையைத் தினமும் ஜெபித்துப் பெற்றுக் கொள்ளவேண்டும்.

தேவ சித்தமறிதல் நமது அடுத்த தேவையாகும். தெரிந்தெடுப்புகளும் தீர்மானங்களும் நிறைந்ததே வாழ்க்கை. தீயதைவிட்டு நல்லதைத் தெரிந்துகொள்வது இலகுவாயிருக்கலாம். ஆனால் தேவனோ நாம் நல்ல தைவிட அதிலும் மேன்மையானதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறார். ''கர்த்தாவே, உமது வழிகளை எனக்குத் தெரிவியும்... உம்மை நோக்கி நாள் முழுதும் காத்திருக்கிறேன்'' என்ற தாவீதின் ஜெபத்தை நமதாக்குவோம் (சங் 25:4,5). மெய்மனதாய் அவரது ஆலோசனை நாடுவோர் அவருக்குப் பிரியம்.

மூன்றாவது, இயேசுவுக்குச் சாட்சியாயிருக்க வல்லமைக்காக ஜெபி யுங்கள். நாமே இவ்வுலகிற்கு உப்பும், வெளிச்சமுமாம் (மத் 5:13,14). உப்பு சாரமற்றுப் போகக்கூடாது, வெளிச்சம் மங்கிவிடக்கூடாது. நம்மை வல்ல சாட்சிகளாக நிறுத்துவது ஆவியின் வல்லமையே (அப் 1:8). தம்மிடம் கேட்போருக்குத் தாராளமாய்ப் பிதாவானவர் தூயாவியை அருளுகிறார் (லூக் 11:13). கிறிஸ்துவுக்காய்ச் சாட்சிபகரும்போது கேலிப் பரியாசத்தைச் சந்திக்கவேண்டியது திண்ணம். வெட்கமும் தயக்கமும் இயற்கையானவை. ஆனால் கடவுளுக்குமுன் காத்திருக்கையில் ஆவி யானவர் நமக்குத் தைரியமும் உற்சாகமும் அருளுகிறார் (அப் 4:31).

*4. சமூகத் தேவைகள்*

உற்றார் உறவினர் சுற்றத்தார் ஆகியோர் நம்மை அடுத்துள்ள சமூக வட்டத்தினர். இவர்கள் ஒவ்வொருவரையும் நமது ஜெபம் பாதிக்கமுடி யும். அவர்களது இரட்சிப்பு, பிரச்னைகள், தேவைகள் ஆகியவற்றிற்காக ஜெபியுங்கள். உங்களுக்கே ஏராளம் பிரச்னைகள் உண்டென்று ஒதுங்கிக் கொள்ளாதீர்கள். பிறரது பிரச்னைகளில் கருத்தோடும், கரிசனையோடும் நாம் ஈடுபட்டால் ஆச்சரியமான விதத்தில் தேவன் நமது வாழ்வைப் பொறுப்பேற்பார். இதற்கோர் சிறந்த எடுத்துக்காட்டாக யோபு திகழு கிறான். தனது நண்பருக்காக அவன் ஜெபித்தபோது தேவன் அவன் இழந்தவைகளைத் திரும்பத் தந்தார் (யோபு 42:10).

சமநிலைக் கிறிஸ்தவ வாழ்க்கையைச் சித்தரிக்கும் லூக்கா 2:52 மேற்கூறிய நான்கு தேவைகளையும் வரிசைப்படுத்தியுள்ளது.



அடுத்து, ஜெபத்தின் நான்காம் பகுதிக்கு வருவோம்—

***ஒப்புக்கொடுங்கள்!***

தேவனுக்குமுன் நம்மைத் தாழ்த்த ஜெப வேளை மிகவும் பொருத்த மான நேரமாகும். முழங்காலில் இப்பல்லவியைப் பொருள்படப் பாடும் பரிசுத்தர் பல்லாயிரக்கணக்கானோர்:

*ஜீவனுள்ள தேவனின் ஆவியே வாரும்;*
*நொறுக்கும், உருக்கும், உருவாக்கி நிரப்பும்.*

பெருமை என்பது நம்மோடு பிறந்தது. உண்மையான ஜெபம் இதை நொறுக்கும். இயேசுவின் கெத்செமனே ஜெபம் தேவனுக்கு ஒப்புக் கொடுத்தலுக்கு தலைசிறந்த போதனை. ''என் சித்தமல்ல, உம் சித்தம் ஆகட்டும்!'' (மத் 26:39,42). சாத்தானிடம் போர்புரிகையில், சகலத்தை யும் செய்து முடித்தவர்களாய் ''நிற்க''வேண்டும். தேவனிடம் ஜெபிக்கை யில், சகலத்தையும் சொல்லி முடித்தவர்களாய் ''பணிய'' வேண்டும்!

முதலில் சற்று முயற்சியெடுத்து ஜெபத்தில் இந்நான்கு படிகளையும் நிறைவேற்றுங்கள். நாளடைவில் அது இலகுவான பழக்கமாகிவிடும். ஆனாலும், ஜெபமென்பது சுலபமானதல்ல. பொதுவாக ஜெபத்தில் கீழ்க் கண்ட பிரச்னைகளைச் சந்திப்பீர்கள்—

*1. மயக்கம்*

நாம் முழங்காலில் நிற்கும்போதே சாத்தான் தாலாட்டிவிடுவான். தூக்க மயக்கத்தைத் தவிர்க்க உடற்பாவனையை மாற்றலாம். முழங்காலிடுவது தலை சிறந்ததெனினும், நடந்துகொண்டும் ஜெபிக்கலாம். அல்லது, வாசிக்கவோ பாடவோ துவங்கிவிடலாம்.

*2. விலக்கம்*

கவனத்தைச் சிதறடிக்காத இடத்தைத் தெரிந்துகொள்ளுங்கள். இயேசுவும் அப்போஸ்தலரும் தோட்டங்களுக்கும், மலைகளுக்கும், நதியோரங்களுக்கும் ஜெபத்திற்காய்ச் சென்றனர். கதவையடைத்துக் கொண்டு நாம் ஜெபிக்கவேண்டுமாம் (மத் 6:6). எப்படியாயினும், ஜெப வேளையில் கைபேசியை அணைத்துவிடுங்கள்! தேவையில்லா நினை வுகள் மனதைத் தாக்கும்போது இயேசுவின் நாமத்தில் பிசாசை எதிர்த்து ஜெயமெடுங்கள் (யாக் 4:7). மனதிற்கப்பால் சென்று தொடர்ந்து ஜெபிக் கும்படி நான் பொதுவாக இவ்வித வேளையில் நவநாவுகளில் பேசத் துவங்கிவிடுவேன் (1 கொரி 14:14).

*இ) துக்கம்*

ஜெபிக்கவேண்டும்போல் தோன்றினாலும் தோன்றாவிடினும் ஜெபியுங்கள். கவலைகளைக் கர்த்தர்மீது வைத்துவிடுங்கள். உங்கள் பிரச்னை நிறைந்த சூழ்நிலையைப் பிசாசு சாதகமாக்க விடாதீர்கள் (1 பேது 5:7-9). துதியோடும் நன்றியோடும் எல்லாவற்றையும் தேவனுக்கு அறிவித்து விடுங்கள் (பிலி 4:6).

*சால துக்க துன்பத்தாலே*
*நெஞ்சம் நொந்து சோருங்கால்*
*துன்பம் இன்பமாக மாறும்*
*ஊக்கமான ஜெபத்தால்.*

காலையில் தேவனுக்குமுன் பணிந்து நின்றால் நாள் முழுவதும் எதற்கு முன்பும் நிமிர்ந்து நிற்பீர்கள்!



# 4
# தேவன் எவ்விதம் பேசுகிறார்?

ஊமையான விக்கிரகங்கள் போலல்லாது நமது தேவன் பேசுகிறவராயிருக்கிறார். அவரது பெயரே ''வார்த்தை'' என்றிருக்கிறது (யோ 1:1; வெளி 19:13).

தேவன் அன்று பேசினார், இன்று பேசுகிறார், என்றும் பேசுவார். ஆனால் அவரது குரலை அடையாளங்காண நமக்குத் தெரியவேண்டும். இங்குதான் பிரச்னையெல்லாம்! தேவன் பேசுவதைக் குறித்த தாறுமாறான போதனைகள் இன்று பெருகியுள்ளதால் விசுவாசிகளுக்கு ஒரே குழப்பம். தேவன் பேசுவதைக் கேட்கும் கலையைச் சமநிலைப் பார்வையில் நிதானித்து இவ்வத்தியாயம் விளக்குகிறது.

தேவன் மனிதரோடு பேசுகிறாரெனும் சத்தியம் இழைபோல் எபிரெயர் நிருபத்தில் ஓடுகிறது. ''பூர்வ காலங்களில்... ***பேசி*** தேவன் இந்தக் கடைசி நாட்களில்... ***பேசினார்.***'' இதுவே துவக்க வசனம்! புத்தக முடிவில், ***''பேசுகிறவருக்குச்*** செவிகொடுக்கமாட்டோமென்று விலகாதபடி எச்சரிக்கையாயிருங்கள்'' என்றுள்ளது (12:25). தேவன் பேசும் ஏழு விதங்கள் இந்நிருபத்திலிருந்து பொறுக்கியெடுக்கப்பட்டுள்ளன—

***1. தமது குமாரன் மூலம் (His Son)***

''தேவன், இக்கடைசி நாட்களில் குமாரன் மூலம் நம்மோடு பேசினார்'' (1:1,2).

தேவனது சத்தியத்தைச் சொல்லாலும் செயலாலும் காட்டும் வார்த்தையாக இயேசு வந்தார் (யோ 1:14). அவரது வாழ்வு, உபதேசம், செயல்கள் மூலம் தேவ செய்தி முழுமையாக வெளிப்பட்டது. உடலுருவில் இன்று அவர் உலகில் இல்லாவிடினும் அவர் நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்.

இயேசுவே வழி, அவரைப் பின்செல்வோம். இயேசுவே சத்தியம், அவரிடம் கற்போம். இயேசுவே ஒளி, அவருக்குமுன் நடப்போம். இயேசுவே மேய்ப்பர், அவருக்கு அடங்குவோம். ஆம், இயேசுதான் தேவனின் குரல். அவரைக் குறித்து மோசேயிடம் தேவன், ''உன்னைப்போல் ஒரு தீர்க்கதரிசியை நான்... எழும்பப்பண்ணி, என் வார்த்தைகளை அவர் வாயில் அருளுவேன்'' என்றார் (உபா 18:18).

இயேசுவின் வாழ்வையே நமக்குத் தரமாக தேவன் தந்துள்ளார். இளைஞனாக அல்லது நடுவயதினனாக, வீட்டில் அல்லது வெளியில், மார்க்கவுலகில் அல்லது பொதுவுலகில், நண்பர்களோடு அல்லது எதிரிகளோடு, கொண்டாட்டங்களில் அல்லது சவச் சடங்குகளில், இன்ப துன்ப வேளைகளில் அவர் எவ்விதம் நடந்துகொண்டாரென நாமறிந்து பின்பற்றவே நான்கு சுவிசேஷங்களும் இவற்றை விபரமாய்த் தந்துள்ளன. ''நீங்கள் தமது அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்'' (1 பேது 2:21).

அவரது வாழ்க்கை மட்டுமல்ல, அவரது போதனைகளையும் நம் கண்முன் நிறுத்திக்கொள்ளவேண்டும். ''அந்த மனிதன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசியதில்லை'' என்று இயேசுவைக் கேட்ட சேவகர் சிலர் சாட்சியிட்டனர் (யோ 7:46). ஒருவரும் ஒருக்காலும் இதைவிட உண்மையான சாட்சியையும் சொன்னதில்லை!

இறைமகனின் வாழ்க்கையையும் வார்த்தைகளையும் கருத்தூன்றிக் கவனமாக நாம் படிக்கவேண்டும். அங்குதான் தேவன் வேறெங்கும்விட தொனிப்பாய், தெளிவாய்ப் பேசுகிறார். ''இவர் எனது நேச குமாரன், இவருக்குச் செவிகொடுங்கள்'' என்றழைக்கிறார் விண்ணகத் தந்தையானவர் (மாற் 9:7).

### *2. தமது ஆவியானவர் மூலம் (His Spirit)*

''பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறபடியே: இன்று அவர் சத்தம் கேட்பீர்களாகில்... உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்'' (3:7).



''பரிசுத்த ஆவி... எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார்'' என்று இயேசு தமதருமைச் சீடருக்கு வாக்களித்தார் (யோ 14:26). நாமிருப்பதுதான் அந்த பெந்தெகொஸ்தே யுகம். பிதாவும் குமாரனும் பரத்திலிருக்கின்றனர்; ஆவியானவரோ இகத்துக்கு இறங்கியுள்ளார். ''***ஆவியானவர்*** சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக் கடவன்'' என்பதே ஆசியாவின் ஏழு சபைகளுக்கும் வந்த தேவ செய்தி (வெளி 2:7,11,17,29; 3:6,13,22).

ஏசாயா 11:2இல் சொல்லப்பட்டுள்ள ஆவியானவரின் ஆறு ஊழியங்களில் நான்கு பேச்சுத் தொடர்பை அடுத்தவை: ''ஞானம்... உணர்வு... ஆலோசனை... அறிவு... அருளும் ஆவி.'' 1 கொரிந்தியர் 12:7-10இல் வரிசைப்படுத்தப்பட்டுள்ள ஒன்பது வரங்களில் ஐந்து பேச்சுத் தொடர்பை அடுத்தவை: ''ஞானத்தை போதிக்கும் வசனம்... அறிவை உணர்த்தும் வசனம்... தீர்க்கதரிசனம் உரைத்தல்... பற்பல பாஷைகளைப் பேசுதல்... பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதல்.''

இன்றைக்குள்ள நவீன வசதி ஏதுமில்லாத ஆதிச் சபை ''பலமல்ல-பராக்கிரமமல்ல-ஆவி மட்டுமே'' எனும் தத்துவத்திலேயே தீவிரமாய்ச் செயல்பட்டது. நமது இறையியல் அறிவுச்செருக்கோ ''ஆவியானவர் சொன்னார்'' என அறிக்கையிடத் தயங்குகிறது. ஆனால் அப்போஸ்தலரும், நடபடிகளின் ஆக்கியோனும் தடையின்றி ஆவியின் சத்தத்தைக் கேட்டார்கள்; தயக்கமின்றி அதைச் சொன்னார்கள்.

இதோ சில எடுத்துக்காட்டுகள்: ''ஆவியானவர்: நீ எழுந்து... சந்தேகப்படாமல்... போ... என்று சொன்னார்'' (அப் 10:19,20). ''பர்னபாவையும் சவுலையும்... ஊழியத்துக்காக... பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்த ஆவியானவர் திருவுளம்பற்றினார்'' (13:2). ''கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைக்கப்பட்டிருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதை... அறிந்திருக்கிறேன்'' (20:23). ''ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி...'' (1 தீமோ 4:1).

ஆவியின் வரங்கள் மூலம் தேவன் பேசுகிறார். தரிசனங்கள், சொப்பனங்கள், அடையாளங்களையும் பயன்படுத்துகிறார். கடைசிக் காலத்துக்கு இவையெல்லாம் வாக்களிக்கப்பட்டுள்ளன (அப் 2:16-21). அப்போஸ்தலர் காலம் முடிந்ததும் இவையெல்லாம் நிறுத்தப்பட்டு

விட்டன என்பதற்கு வேதச் சான்று இல்லை. தேவனை மட்டுப்படுத்தா திருப்போம். துர்ப்பிரயோகம் பெருகியுள்ளதென்பது உண்மைதான்; அதற்காக நற்பிரயோகத்தையும் தவிர்ப்பதா?

வரமளிப்பவரும் வரங்களும் பூரணமானவை (யாக் 1:17). வரம் பெறுவோரிடம்தான் பிரச்னை! ''நாம்'' தீர்க்கதரிசனம் சொல்லுதல் குறைவுள்ளது! (1 கொரி 13:9). அதாவது, சொல்லப்படும் தீர்க்கதரிசனம் எதையும் முடிவான வார்த்தையாக எடுத்துக்கொள்ளாமல், அதை நிறுத்து நிதானித்துப்பார்க்கவேண்டும் (1 கொரி 14:29; 1 தெச 5:19-21). தீர்க்க தரிசனத்தை அற்பமாய் எண்ணவும் கூடாது; அதை அப்படியே எடுத்துக் கொள்ளவும்கூடாது. பாதகச் சிந்தை ஆவியானவரை அவிக்கும். ஆசீர் வதிக்கப்பட முடியாத அளவு கவனமாயிருந்துவிடக் கூடாது, கவனம்! கண்முடித்தன எதிர்ப்புகளைக் களைந்தெறியுங்கள்—தயவுசெய்து!

உள்ளில் ஆவியானவர் பேசுவது மீட்கப்பட்டோரின் பெரும் பாக்கியம் (ரோ 8:14,16). இந்தச் சத்தம் தெளிவாய்க் கேட்கவேண்டுமானால் துதியுடனுள்ள ஜெப ஆவியால் நிறைந்திருக்கவேண்டும் (அப் 13:2). மோசே ஆசரிப்புக்கூடாரத்திற்குள் நுழைந்தபோது தேவன் அவனோடு பேசினார் (எண் 7:89). பொறுமையாய்த் தேவனுக்குக் காத்திருக்கும் போது ஆவியானவர் தடுக்கமுடியாத எண்ணங்களை நம் மனதில் ஊன்றுவார்.

அசரீரியாகவே தேவன் எப்பொழுதும் பேசவேண்டுமென எதிர்பார்ப் பது நிச்சயம் வஞ்சகத்திற்கு வழிநடத்தும். கேட்கக்கூடிய சத்தங்கள், பிரகாசமான தரிசனங்கள், உணர்ச்சிவச அனுபவங்கள், இவையெல்லாம் விதிவிலக்கேயன்றி விதிமுறையல்ல. சாத்தான் போலிச்சரக்கு வித்தகன். ஒளியின் தூதனாகத் தன்னை மாற்றிக்கொண்டு திரளானோரை வஞ்சித்து விட்டான் (2 கொரி 11:14). இயற்கைக்கப்பாற்பட்டதெல்லாம் இறை வனது என்பது இழுக்கு. ''வஞ்சிக்கும் ஆவிகளுக்கு'' இடம் கொடுத்து விட்டோர் பலர் (1 தீமோ 4:1). ''அமர்ந்த மெல்லிய சத்தம்'' நமது புலன் களுக்குப் பகட்டாயிருக்காது, ஆனால் பாதுகாப்பானது (1 இரா 19:11-13).

### *3. தமது வசனம் மூலம் (His Scriptures)*

''தேவ வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இரு புறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும்... இருக்கிறது'' (4:12). அப்படியே வசனம் மூலம் வரும் நடத்துதலும் கூர்மையாகவும் வகையறுக்கப்பட்டதாகவும் இருக்கும்!



வேதத்தின் மூலம் தேவன் நமக்கு உபதேசிக்கிறார், நம்மைக் கண்டிக் கிறார், சீர்திருத்துகிறார், படிப்பிக்கிறார் (2 தீமோ 3:16,17). இருளில் திகைக்கும்போது தமது வசனத்தால் நம் பாதையை வெளிச்சமாக்குகிறார் (2 பேது 1:19).

வேதமே தேவனது சத்தம்தான். அரை மணி நேரம் வேதம் வாசிப்பதும், முப்பது நிமிடம் தேவன் பேசக் கேட்பதும் ஒன்றுதான்! தேவனது குரலி லேயே வேதம் நம்மோடு பேசுகிறது என்றார் பக்தன் C.H. ஸ்பர்ஜன் (1834-1892).

முழு வேதமும், அதுவும் பல மொழியாக்கங்களில், பெற்றுள்ள நமக்கு இணையான வேறு தலைமுறை இருந்ததில்லை. ஆனால், தனித்தியா னத்திலோ நாம் முழுச்சோம்பேறிகள். ''வேதத்தையும் சாட்சியாகமத்தை யும்,'' அதாவது உபதேசத்தையும் உதாரணங்களையும், கிரமமாகச் சிரம மெடுத்துத் தியானிக்காவிடில் வாழ்வின் பல்வேறு பகுதிகளில் தேவனது சிந்தையை அறிவதரிது (ஏசா 8:20). தினம் ஒரு மணிநேரத் தியான மெல்லாம் குறைவுதான். சிக்கலான வேளையில் ஏதாவது ஒரு துரும்பு கிடைக்காதாவென வேதத்தை அவசர அவசரமாகப் புரட்டுவது ஆபத்து. வேதம் ஓர் அதிர்ஷ்டச் சீட்டு அல்ல. தவறாது சாப்பிடுவதுபோல் ஒழுங் காக வசனத்தைத் தியானிக்கவேண்டும் (மத் 4:4). வேத வாக்கியங்கள் ''எல்லாம்'' பயனுள்ளவை, ஒன்றையும் ஒதுக்கக்கூடாது.

குழப்பமான சூழலில் மாட்டிக்கொண்டால் அமைதியாய்த் தியானம் செய்யக் கிளம்பிவிடவேண்டும். வேதத்திலிருந்து ஒரு வசனம் அல்லது பகுதியை ஆவியானவர் அழகாக நம்முன் நிறுத்துவார். மேகம் அகலும். கிரமமாக வசனங்களை மனனம் செய்பவர்களுக்கு இக்கட்டான வேளை யில் ஒரு வாக்கு அல்லது தத்துவத்தை ஆவியானவர் மென்மையாய் நினைவுபடுத்தி அபாரமாய் அவர்களை விடுதலைக்குள் நடத்துவார்.

ஒரு சத்தமும் கேட்காது, ஒரு தரிசனமும் காணாது, ஆனால் உத்தமமாய் நெடுகவே வசனத்தோடு நடைபோட்டதால் தங்கள் தலைமுறைகளில் தேவ சித்தத்தை அபாரமாய் நிறைவேற்றி முடித்த தேவ மனிதரால் சரித்திரம் நிறைந்திருக்கிறது. ஆம், வேத வசன நடத்துதலே எல்லாவற் றையும்விடத் திட்டமானது, திடமானது.

### *4. தமது பரிசுத்தவான்கள் மூலம் (His Saints)*

''இன்று என்னப்படுமளவும் நாள்தோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்'' (3:13). ''சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறது போல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்'' (10:25).

ஆவியினாலும், வசனத்தினாலும் நிறைந்திருக்கும் உடன் விசுவாசிகளைப் பெற்றிருப்பது எத்தனை பாக்கியம்! (எபே 5:19; கொலோ 3:16). ஒருவரையொருவர் சந்திக்கும்போது ''ஹலோ'' அல்லது "Praise the Lord" என்பதெல்லாம் போதாது. ஒருவரையொருவர் கட்டியெழுப்புவது நம் கடமை. நவநாவுகள் பேசுதலையும், தீர்க்கதரிசனம் சொல்லுதலையும் 1 கொரிந்தியர் 14இல் ஒப்பிடுகையில் ஒருவரையொருவர் பக்திவிருத்தியடையச் செய்வதையே அப்போஸ்தலன் அழுத்திக் கூறுகிறான்.

நமது சகோதர சகோதரிகளின் ஆலோசனைகளை நாடாததால் எவ்வளவு இழக்கிறோம் தெரியுமா? வயதும் அனுபவமும் நல்லதுதான்; ஆனால் ஆலோசனை தர அது கட்டாயமல்ல. யாரையும் அற்பமாய் எண்ணக்கூடாது. இறையரசில் ஒரு சிறு பையன்கூட முன் நின்று நடத்துவான்! (ஏசா 11:6).

மொர்தெகாய் மூலம் தேவன் எஸ்தரோடு பேசினார்; அவள் கீழ்ப்படிந்தாள்; ஓர் இனம் பாதுகாக்கப்பட்டது (எஸ்தர் 4:13,14). மக்களைக் கணக்கிடவேண்டாமென தாவீதுக்கு யோவாப் ஆலோசனை தந்தான்; தாவீதோ மறுத்தான்; ஓர் இராஜ்யம் பாதிக்கப்பட்டது (2 சாமு 24: 2-4,10). வெளிப்படையான ஆலோசகர் குறைந்துவருகின்றனர். ஆனால், ''மறைவான சிநேகத்தைவிட வெளிப்படையான கடிந்துகொள்ளுதல் நல்லது'' என்பது மாறாத வேத சத்தியம் (நீதி 27:5,6,17).

புண்படுத்திவிடுவோமோ என அஞ்சிப் பண்படுத்தத் தயங்குகிறோம். அப்படியானால் நமது பொறுப்பில் தவறுகிறோமல்லவா? ''நான் என் சகோதரனுக்குக் காவலாளியோ?'' என்று கேட்ட அவன் ஒரு கொலைகாரன் தெரியுமா? ஒருவருக்கொருவர் பொறுப்பாயிருப்பதில் அங்கங்கள் தவறினால் கிறிஸ்துவின் உடல் பேரிழப்படையும்.

''உன் துருத்தியை ஊது'' என்பது உலகத்தார் சொல்வது. ஆனால் தேவனது குடும்பத்திலோ அப்படியல்ல. என் சகோதரன் சோகமாயிருந்தால், நான்தான் அவனைத் தூக்கிவிடவேண்டும் (எபி 10:24). அவன் சோர்பாயிருந்தால் நான்தான் அவனை உற்சாகப்படுத்தவேண்டும். அவன் சோரம்போனால் நான்தான் அவனைத் திருப்பிக் கொண்டுவரவேண்டும் (யாக் 5:19,20).



### *5. தமது ஊழியர் மூலம் (His Servants)*

''தேவ வசனத்தை உங்களுக்குப் போதித்து உங்களை நடத்தினவர்களை நீங்கள் நினைத்து... நான் சுருக்கமாய் உங்களுக்கு எழுதிய இந்தப் புத்திமதியான வார்த்தைகளை நீங்கள் பொறுமையாய் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்'' (13:7,22).

''நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக்கொள்; கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார்'' என்று தீமோத்தேயுவுக்குப் பவுல் அறிவுறுத்தினான் (1 தீமோ 2:7). தனது வாழ்வினாலும் வார்த்தையினாலும் பவுல் தேவனுக்கு வாயாக இருந்தான். தன்னைத் தங்களுக்கு மாதிரியாகக் கொள்ளும்படி எபேசு மூப்பருக்கும் விசுவாசிகளுக்கும் பவுல் சவாலிட்டான் (அப் 20:35). அப்படியே, ''நீங்கள் என்னிடம் கற்றும் அடைந்தும் கேட்டும் கண்டும் இருக்கிறவைகளெவைகளோ, அவைகளையே செய்யுங்கள்'' என்று பிலிப்பியருக்கு எழுதினான் (பிலி 4:9).

வெளிப்படுத்துதலில் சபையின் தலைவர்களை யோவான் ''நட்சத்திரங்களாகக்'' கண்டான் (வெளி 1:20). நடத்தும் நட்சத்திரங்கள்! எனவேதான், ''நாங்கள் தேவனால் உண்டானவர்கள்; தேவனை அறிந்தவன் எங்களுக்குச் செவிகொடுக்கிறான்'' என்று நிருபத்தில் தைரியமாய் எழுதினான் (1 யோ 4:6).

பரிசுத்தவான்களைப் படிப்பிப்பதும், பக்திவிருத்தியடையச் செய்வதும், பணியாளராக்குவதுமே சபையின் ஐவகை ஊழியங்களின் நோக்கமாகும் (எபே 4:11-13). *அப்போஸ்தலன்* தனது அதிகாரத்தினாலும், அப்பாலுள்ள இடங்களுக்குச் செல்லும் தரிசனத்தினாலும் உங்களை உந்தித்தள்ளுவான்; *தீர்க்கதரிசி* தனது ஊடுருவும் கண்ணோட்டத்தாலும் துணிவாலும் உங்களை உயிர்ப்பிப்பான்; *சுவிசேஷகன்* தனது உற்சாகத்தாலும் ஆத்தும பாரத்தாலும் உங்களை உலுக்குவான்; *மேய்ப்பன்* தனது அன்பினாலும் அரவணைப்பினாலும் உங்களை உருவாக்குவான்; *போதகன்* தனது தெளிவினாலும் நிதானத்தினாலும் உங்களை உறுதிப்படுத்துவான்.

இன்றோ விசுவாசிகன் பெரும்பாலும் சுவிசேஷகர் அல்லது மேய்ப்பர் இவர்களோடு மட்டும் தொடர்புகொண்டுள்ளனர். அப்போஸ்தலர் அல்லது தீர்க்கதரிசிகளைக் கேட்க அல்லது அவர்களோடு பழக வாய்ப்பின்றி யிருக்கின்றனர். இதனால்தான் சபையில் பெரும்பாலானோருக்கு திசை யில்லை, தசையில்லை, விசையில்லை! விசுவாசிகள் அடிக்கடி மிஷனரிச் சரிதைகளையும் வாசிக்கவேண்டும். இவற்றை வாசித்தபின் அநேகர் தங்கள் வாழ்க்கைக்குரிய தேவ சித்தத்தைத் தெரிந்துகொண்டிருக் கின்றனர்.

மூப்பர் மூலம் மட்டுமல்ல, சபையின் முதியோர் மூலமும் தேவன் பேசுகிறார். ஊழியரும் மூத்த விசுவாசிகளிடம் ஆலோசனை கேட்டு, அன் னாரது பழுத்த அனுபவங்களால் பயனடையவேண்டும். இதை அசட்டை செய்வோர் அழிந்தேபோயிருக்கின்றனர். தேவன் முகமுகமாய் மோசே யோடு எத்தனையோ காரியங்களைக் குறித்துப் பேசினார். ஆனால் வேலையையும் பொறுப்பையும் பகிர்ந்துகொடுக்கும் எளிய தத்துவத்தை அவன் தனது மாமனாரிடமிருந்துதான் கற்கவேண்டியிருந்தது (யாத் 18:13-24). இவ்வித ஆலோசகரை மோசே வெகுவாய் மதித்தான். பின்பு அவனது மைத்துனன் தனது இடம் நோக்கிச் செல்ல விரும்பியபோது, ''நீ எங்களை விட்டுப்போகவேண்டாம்... நீ எங்களுக்கு (வழிகாட்டும்) கண் களைப்போல் இருப்பாய்'' என்று சொல்லி மோசே அவனைத் தடுத்து நிறுத்தினான் (எண் 10:29-31). ரெகோபெயாமின் சரிதையோ நமக்கு எச்சரிப்பாயுள்ளது. அவன் முதியோரின் ஆலோசனையைத் தள்ளினான். இராஜ்யம் உடைந்தது (1 இரா 12:8,16).

ஆன்மீகக் காரியங்களுக்குத்தான் ஊழியரால் ஆலோசனை தரமுடி யுமேயன்றி, வர்த்தக அல்லது பொதுவுலகுக் காரியங்களைப் பற்றி அவர் களுக்கு என்ன தெரியுமென நாம் பல முறை எண்ணுவதுண்டு. ஆம், தொழில் நுணுக்க ஆலோசனைகளை ஒரு மேய்ப்பனோ அப்போஸ்த லனோ தர முடியாவிட்டாலும், தனது உட்பார்வை அல்லது அகத்தூண்டு தலிலிருந்து பொதுவான ஆலோசனைகளைக் கொடுக்க முடியுமே. கப்பற் பயணத்தின்போது ''நூற்றுக்கதிபதி பவுலினால் சொல்லப்பட்டவைகளை விட மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினான்.'' முடிவு வருத்தமும் சேதமும்தான் (அப் 27:11,21).



### *6. சூழ்நிலைகள் மூலம் (Situations)*

பார்வோனிடமிருந்து மீதியான் தேசத்துக்கு ஓட சூழ்நிலைகளே மோசேக்குக் காரணமாயிருந்தன (யாத் 2:11-15). நிருப ஆக்கியோனோ இதை மோசேயின் விசுவாசச் செயல் என்றழைக்கிறான் (எபி 11:24-27). ஆம், தேவன் சூழ்நிலைகள் மூலம் பேசுகிறார்.

சவுலை இராஜாவாக அபிஷேகித்தபின் சாமுவேல் அவனிடம், ''இந்த அடையாளங்கள் உனக்கு நேரிடும்போது, சமயத்துக்கு ஏற்றபடி நீ செய்; தேவன் உன்னோடே இருக்கிறார்'' என்றான் (1 சாமு 10:7). தேவனே இயற் கைக்கு ஆண்டவர் என்றும், எல்லாச் சம்பவங்களையும் கட்டுக்குள் வைத் திருக்கிறவர் என்றும் நாம் விசுவாசித்தால் நம்மைச் சுற்றி நடப்பவைகளி லிருந்து நிச்சயம் தேவனது மனதைப் புரிந்துகொள்ளலாம். ''பகலுக்குப் பகல் வார்த்தைகளைப் பொழிகிறது, இரவுக்கு இரவு அறிவைத் தெரிவிக் கிறது'' (சங் 19:2). ''காணப்படாதவைகளாகிய அவரது நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினால், உலகமுண்டானது முதல் தெளிவாய்க் காணப்படும்'' (ரோ 11:20). ''காலங் களின் அடையாளங்களை'' நிதானிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம் (மத் 16:3).

சூழ்நிலைகளால் தேவ மனதைப் புரிந்துகொள்வதில் பவுலுக்கு நம்பிக்கை இருந்தது. விரைவாய் எங்கும் சென்றுகொண்டிருக்கையில் ஆசியாவிலும் பித்தினியாவிலும் அவனது குழுவுக்கு ஆவியானவர் கதவடைத்தார். எனவே துரோவாவுக்கு வந்தனர். அங்கே தரிசனத்தில் மக்கெதோனியன் ஒருவன் தோன்றிப் பவுலைத் தனது பகுதிக்கு அழைத் தான். இவையெல்லாவற்றையும் சேர்த்துப்பார்த்து மக்கெதோனியா வுக்குத் தங்களைக் கர்த்தர் அழைத்தாரென்று ''நிச்சயித்துக்கொண்டு'' அப்போஸ்தலர்கள் புறப்பட்டார்கள் (அப் 16:6-10). முதல் ஐரோப்பிய கனி அங்குதான் சபைக்குக் கிடைத்தது.

சூழ்நிலைகளைக் கண்டும் காணாமலும் இருக்கக்கூடாதென இரு நேர்த்தியான வசனங்கள் நமக்குச் சொல்லுகின்றன. நீதிமொழிகள் 3:6, ''உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.'' ரோமர் 8:28, ''அவரது தீர்மா னத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடம் அன்புகூறுகிறவர் களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக் கிறோம்.''

அதே வேளையில், சூழ்நிலைகளை மட்டுமே வழிகாட்டியாய் எடுத்துக் கொள்ள முடியாது. உனக்கொரு குமாரன் பிறப்பானென்று தேவன் ஆபிர காமுக்கு வாக்களித்தார். அவனுக்கும் சாராளுக்குமோ வயது ஓடிக்கொண் டிருந்தது. வேலைக்காரியோடே சேரும் என்று மனைவியே சொல்லி விட்டாள். சூழ்நிலையை மட்டும் பார்த்த ஆபிரகாம் தடம் புரண்டான்.

### *7. பாடுகள் மூலம் (Sufferings)*

''என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே... என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லி யிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள்'' (12:5,6).

அனைத்தும் அறிந்த ஆண்டவர் துன்பத்தின் அப்பத்தையும் உபத் திரவத்தின் தண்ணீரையும் நமக்குத் தரத் தீர்மானிக்கலாம். இவ்வித வேளைகளிலும் ''உன் ***போதகர்கள்*** இனி ஒருபோதும் மறைந்திருக்கமாட் டார்கள்; உன் கண்கள் உன் போதகர்களைக் காணும்... ***வழி*** இதுவே, இதிலே நடவுங்கள் என்று... சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்'' எனும் வாக்குண்டு (ஏசா 30:20,21).

ஏன் தேவன் தம் மக்களைப் பசியினால் வருத்திப் பின்னர் மன்னா அருளினார்? மனிதன் அப்பத்தினால் மட்டுமல்ல, கர்த்தரின் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பானென்று அவர் களுக்கு உணர்த்தும்படிக்கே! இதைச் சிட்சையினால் வந்த போதனை என்று மோசே குறிப்பிடுகிறான் (உபா 8:3,5).

துன்பத்தில் துவளும்போது தேவ சத்தம் கேட்க அவரை நோக்கி நாம் விரையாவிடில் தேவன் அங்கலாய்ப்பார். தேவனது துக்கத்தை எரேமியா இவ்விதம் புலம்புகிறான்: ''நான் உங்கள் பிள்ளைகளை அடித்தது விருதா; சிட்சையை ஏற்றுக்கொள்ளாமல் போனார்கள்'' (எரே 2:30). நமது கவனத் தைப் பெறவே தேவன் பிரம்பைக் கையாளுகிறார். இன்னும் கவலையீன மாக நடந்து, சிட்சையின் நோக்கை வீணடிப்போமானால், நிலைமை இன் னும் மோசமாகும். தாவீதின் வாழ்வில் பாடுகள் நிறைந்திருந்தன. ஆனால் அவன் அவைகளின் படிப்பினைகளைப் பற்றிக்கொண்டான். ''நான் உபத் திரவப்பட்டது எனக்கு நல்லது; அதினால் உமது பிரமாணங்களைக் கற்றுக் கொள்ளுகிறேன்'' என்று சாட்சியிட்டான் (119:71). உருக்கப்படுமுன் உருவாக்குதல் எங்கே?



கண்ணீரின் பள்ளத்தாக்கில்தான் எக்காலத்துப் பரிசுத்தரும் முத்தான சத்தியங்களைக் கற்றுக்கொண்டனர். யாராவது ஏதாவது சொல்லிவிட மாட்டார்களா என்று உடனடி விடுதலை நாடி சவுலைப் போல் குறி காரரைத் தேடியலைவதைவிட்டு, நமது வழிகளை ஆராய்ந்துபார்த்து தேவனது கரங்களிலேயே விழுந்துவிடவேண்டும். தேவனது அமைதியை நாம் கேட்பது பேராசீர்வாதம்!

### ***சாராம்சம்***

தேவன் பேசும் இந்த ஏழு முறைகளும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவை. தனியாக ஒன்றை மட்டும் பொதுவாக தேவன் பயன்படுத் துவதில்லை. தனது தந்தை பண்டிதர் ஆஸ்வால்டு ஸ்மித்திடமிருந்து (1889-1986) உன்னத அனுபவப் பாடங்களைக் கற்றுக்கொண்ட பண் டிதர் பால் ஸ்மித் ஒரு புத்தகத்தில் இப்படி எழுதியுள்ளார்: ''ஒரு வேளை கேட்கும்படி சத்தமாகவும், அடிக்கடி அடையாளங்கள் மூலமாகவும், சில வேளை பிறர் மூலமாகவும், பொதுவாகச் சூழ்நிலைகள் மூலமாகவும், எப்பொழுதும் வசனம் மூலமாகவும் தேவன் பேசுகிறார்!'' இவ்வார்த்தைகள் இவ்வத்தியாயத்தின் சாராம்சத்தை அழகாகக் கூறுகின்றன.

# 5
# கேட்பதும் வாசிப்பதும்

சபைச் சரித்திரத்தில் என்றுமில்லாத அளவு இன்று பிரசங்கங்களைக் கேட்கிறோம். மேடைகள், பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி போன்றவை பிரசங்கங்களைக் கொட்டிக்கொண்டிருக்கின்றன. ''எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும்'' என்கிறது திருமறை (லூக் 12:48). பொறுப்பின்றி சிலாக்கியமேது?

''நீங்கள் கேட்கிற ***விதத்தைக்*** குறித்துக் கவனியுங்கள்'' என்றார் இயேசு (லூக் 8:18). சத்தியங்கள் புதையல்களாம். அவை தேவனது இரகசியங்கள். நாம் உண்மையுள்ள உக்கிராணக்காரராக இருப்போமென எதிர்பார்த்து தேவன் அவற்றை நம்மிடம் ஒப்படைக்கிறார் (1 கொரி 4:1,2). நம்மை நம்பி நம்மிடம் தரப்பட்டதில் கவலையீனமாயிருந்தால் தண்டனைக்குத் தப்போம் (மத் 25:24-30).

பிரசங்கிக்கப்பட்ட அல்லது எழுதப்பட்ட அருட்செய்திகளிலிருந்து பெருமளவு நன்மை பெற இதோ ஏழு படிகள்:

### *1. அங்கீகரியுங்கள்! (Receive!)*

சிறப்பாக உங்களுக்கென்றே வரும் தேவ செய்தியாய்ப் பிரசங்கத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். தமது சீடரில் ஒருவனே தம்மைக் காட்டிக்கொடுப்பானென்று இறுதி விருந்தின்போது இயேசு குறிப்பிட்டார். அவர்கள் உடனே கேட்ட கேள்வி என்னவோர் அறிய படிப்பினை! ''ஆண்டவரே, நானோ, நானோ? என்று ஒவ்வொருவராகக் கேட்கத் தொடங்கினார்கள்''



(மத் 26:21,22). யூதாசாக இருக்குமோவென பேதுரு யூகிக்கவில்லை. தோமாவாக இருக்குமோவென யோவான் சந்தேகிக்கவில்லை. இல்லை, ஒவ்வொருவரும் தன்னைக் குறித்தே கேட்டார்கள். பிரசங்கம் கேட்கும் போது எத்தனை முறை இது இன்னொருவருக்கேற்ற செய்தி என்று முடிவு கட்டிவிடுகிறோம்! இவ்வித மனப்பான்மையால் நாம் இழப்பது எவ்வளவு தெரியுமா?

அடுத்து, விசுவாசத்தோடு வசனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள். ''கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியால்... வசனம் அவர்களுக்குப் பயன்படவில்லை'' என்று இஸ்ரவேலரைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது (எபி 4:2). இஸ்ரவேலிலேயே மிகப்பெரிய தீர்க்கன்தான் அவர்களது பிரசங்கி (உபா 34:12). ஆனாலும் பயனில்லை. அவிசுவாசமே காரணம். மோசே போன்ற தீர்க்கதரிசியாக இயேசுவைத் தேவன் அனுப்பினார். அவரது வார்த்தையைத் தேவ செய்தியாக ஏற்காது நாசரேத் ஊரார் அவரது அதிகாரத்தைக் கேள்வி கேட்டனர். பெரிய அற்புதங்கள் செய்யக்கூடாதவாறு அவர்களது அவிசுவாசம் இறைமகனின் கரங்களைக் கட்டிற்று (மாற் 6:1-6).

''எல்லா சாந்தத்தோடும் வசனத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்'' (யாக் 1:21). வசனத்திற்கு ''நடுங்குகிறவர்கள்'' தேவனுக்கு அலாதிப் பிரியம் (ஏசா 66:1,2). ஆண்டவருக்கு ஆமாம் சாமிகளாவோம். இன்னொருமுறை வலை வீசுவது பேதுருவுக்கு அனாவசியமாகவே தோன்றிற்று; ஆனாலும் கீழ்ப்படிந்தான். ஏனென்றால், செய்யச் சொன்னவர் இயேசுவன்றோ? அடிபணிவோர் வாழ்வில் ஆண்டவரின் வசனம் அற்புதங்களைச் சோனாமாரியாய்ப் பொழியும்.

### *2. அசைபோடுங்கள்! (Ruminate!)*

இதுதான் தியானித்தல் என்பது. மிருகமானது அசைபோடுவதுபோல் நாமும் கேட்டதைத் திரும்பத் திரும்பச் சிந்திக்கவேண்டும். வேலைகள் மிகுதியாவதால் மனிதர் இக்கலையை இக்காலத்தில் மறந்துவருகின்றனர். ''நவீன கால மனிதன் சிந்திக்கமாட்டான்'' என்றார் இந்நூற்றாண்டின் ஞானி ஒருவர்!

''அந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்தில் வைத்துச் சிந்தனைபண்ணினாள்'' என்று மரியாளைக் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது (லூக் 2:19). ஒரு முறை இயேசு சொன்ன வார்த்தைகள்

அவளுக்கும் யோசேப்புக்கும் விளங்கவில்லை. ஆனாலும் அவள் அவற்றைத் ''தன் இருதயத்தில் வைத்துக்கொண்டாள்'' என்று எழுதப் பட்டிருக்கிறது (வச 50,51).

சபையினரில் பெரும்பாலோர் வழியருகே விதைக்கப்பட்டவர்கள் தான். இதோ இயேசு தரும் விளக்கம்: ''ஒருவன் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும்போது, பொல்லாங்கன் வந்து, அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதைப் பறித்துக்கொள்ளுகிறான்'' (மத் 13:19). கேட்பதிலிருந்து உணர்வதற்கு வழிநடத்துவது தியானம்தான்.

''தேவன் ஒரு தரம் விளம்பினார், இரண்டு தரம் கேட்டிருக்கிறேன்'' என்றான் தாவீது (சங் 62:11). கேட்பதை அடுத்துவரும் தியானத்தையே இங்கு குறிப்பிடுகிறான் எனக் கொள்ளக்கூடாதோ?

பரம தரிசனத்திற்குப் பேதுரு மறுப்பு தெரிவித்தான். அவனது யூதப் பாரம்பரியம் ஆண்டவருக்கு மும்முறை இல்லை என்றது. ஆனாலும் அந்தத் தரிசனத்தை நினைத்துக்கொண்டேயிருந்தான். அது பயனளித்தது. அப்பொழுதுதான் ஆவியானவர் அவனோடு மறுபடியும் பேசினார். தயக்க மிருந்தாலும் கீழ்ப்படிந்தான் (அப் 10:9-19). தியானமானது இருதயத்தைக் கீழ்ப்படிதலுக்கு நேர்த்தியாய் ஆயத்தப்படுத்துகிறது.

ஒரு சத்தியம், வசனம் அல்லது பகுதியைக் குறித்த தியானம் நாள் முழுவதும் நீடிக்கலாம். வேலைக்கு வெளியே செல்லும்போதும், காலை யில் வேதத்திலிருந்து வாசித்ததை இருதயத்தில் சுமந்துசெல்லுங்கள். தனக்கு வேலை மிகுதியாயிருந்தும் தாவீதின் அனுபவம் அதுவே: ''உமது வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுதும் அது என் தியானம்'' (119:97). வசனத்தை இரவும் பகலும் தியானிக்கிறவன் பாக்கியவான் (சங் 1:2).

### *3. ஆராய்ந்து பாருங்கள்! (Refer!)*

ஒரே பிரசங்கத்தில் எல்லாம் சொல்லிவிட முடியாது. தெசலோனிக்கே யருக்கும், பெரோயாவிலுள்ளோருக்கும் எவ்வளவு வேறுபாடு எனக் கவனியுங்கள். முதலாமவர் வசனத்தை ஏற்றுக்கொண்டதோடு சரி. அடுத்தவரோ ''காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்யங்களை ஆராய்ந்து பார்த்ததினால்'' ஓரடி கூடுதல் முன்சென்றார் கள். இதனால் தெசலானிக்கேயரைவிட நற்குணசாலிகளெனப் பெயர் பெற்றனர் (அப் 17:1-5,10,11).



வேத வாக்கியங்களை ''ஆராய்ந்து பாருங்கள்'' என்றார் இயேசு (யோ 5:39). கர்த்தருடைய புத்தகத்திலே ''தேடி'' வாசிக்கவேண்டுமாம் (ஏசா 34:16). கேட்பதையும் வாசிப்பதையும் ஆராய்ச்சி தொடராவிடில் சத்தி யத்தில் தெளிவுபெறுவது சாத்தியமில்லை.

வசனத்தை வசனத்தோடு ஒப்பிட்டுப் படிக்கவேண்டும். ஒரு பகுதி யை இன்னொரு பகுதி விளக்கும். ஒத்துவாக்கியங்களை எடுத்து வாசிப் பதால் சத்தியம் கூடுதல் விளங்கும். ''இவைகளில் ஒன்றும் ஜோடில்லா திராது; அவரது வாய் இதைச் சொல்லிற்று; அவரது ஆவி அவைகளைச் சேர்க்கும்'' (ஏசா 34:16).

ஆராய்ச்சி வேதங்களுக்காகவும் விளக்கவுரைகளுக்காகவும் தேவ னைத் துதிப்போம். *NKJV Study Bible, NIV Study Bible, ESV Study Bible* போன்றவை மிகவும் பயனுள்ளவை. சொல்லகராதிகளும் *Treasury of Scripture Knowledge* எனும் நூலும் இன்றியமையாதவை. பாதுகாப்பான ஆராய்ச்சி நூல்களைத் தெரிந்தெடுப்பதற்கு *Unless someone guides me...* என்ற எனது குறுநூல் சிறந்த கையேடாகும்.

வேதமே வேதத்திற்கு பிரதான விளக்க நூல் என்றார் பக்தன் D.L. மூடி (1837-1899). புதிய ஏற்பாடு பழையதை விளக்குகிறது. நடபடிகள் நூலின் பின்னணியோடு படித்தால் நிருபங்கள் தெளிவாக விளங்கும். தானியேல் புத்தகமும் வெளிப்படுத்துதல் புத்தகமும் சேர்த்துப் படிக்கப்படவேண் டும். இணையான ஒத்துவாக்கியங்கள் அத்தனையையும் தெளிவாக ஆராய்ந்து படிக்காவிடில் சத்தியம் எதுவும் ''திருப்பிப்போடாத அப்ப மாகவே'' இருக்கும். சாதாரண காரியங்களை அளவுக்குமீறி வலியுறுத்தும் சமநிலை தவறிய பிரசங்கிகளுக்குத் தப்ப இது ஒன்றே வழி.

### *4. அப்பியாசியுங்கள்! (Reform!)*

வெறும் அறிவு இறுமாப்பை உண்டாக்கும். அறிவு அனுபவமாக வேண்டும். சத்தியம் அப்பியாசிக்கப்படவேண்டும். இயேசுவில் வார்த்தை மாம்சமானது. வேத வியாக்கியானமெல்லாம் கீழ்ப்படிதலுக்கு நம்மை நடத்தவேண்டும். வாழ்வு அழகு பெறவேண்டும்.

யோவான் மனந்திரும்புதலைப் பிரசங்கித்தான். கேட்டோர் குறிப்பாக எதிரொலித்தனர். யோர்தான் நதியோரத்தில் முக்குழுவினரைச் சந்திக் கிறோம். முதலில் சாதா மக்கள். தாங்கள் என்ன செய்யவேண்டுமென யோவானைக் கேட்டனர். ''தர்மம் செய்யுங்கள், எளியோர்க்கு உதவுங்கள்''

என்றான். அடுத்து வரிக்காரரிடம், ''உங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிற தற்கு அதிகமாய் ஒன்றும் வாங்காதிருங்கள்'' என்றான். மூன்றாவது குழுவாகிய போர்ச்சேவகருக்கு, ''ஒருவருக்கும் இடுக்கண் செய்யாமலும், பொய்யாய்க் குற்றஞ்சாட்டாமலும், உங்கள் சம்பளமே போதுமென்று இருங்கள்'' என்ற பதில் வந்தது (லூக் 3:10-14). ஒவ்வொருவருக்கும் ஏற்ற நடைமுறை ஆலோசனை கிடைத்தது. ஆனால் அதற்கு முன் அவர்கள், ''நாங்கள் அப்படியானால் என்ன செய்யவேண்டும்?'' எனக் கேட்க வேண்டியிருந்தது. வேதத்தின்படி ''நடக்க'' வேண்டும். இல்லையேல் படித்துப் பயனென்ன?

நமது சபைகளில் பிரசங்க ரசிகர் ஏராளம். ரசித்தால் போதாது, ருசிக்க வேண்டும், அதன்படி வசிக்கவேண்டும்! ''நீங்கள் உங்களை வஞ்சியாத படித் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மட்டுமல்ல, அதின்படிச் செய்கிறவர்களாயும் இருங்கள்'' (யாக் 1:22).

''உமது வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது'' என்றாள் மரியாள் (லூக் 1:38). கேட்பது, வாசிப்பது, தியானிப்பது ஆகியவற்றிலிருந்து தெளிவான கட்டளைகள் உண்டா என்று கவனியுங்கள். கீழ்ப்படியத் தாமதம் வேண்டாம். ஒவ்வொரு கீழ்ப்படிதலும் புதிய வெளிப்பாடுகளைக் கொண்டுவரும். ''உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்'' (லூக் 8:8).

### *5. அகற்றுங்கள்! (Remove!)*

வசனமென்பது விதையாகும். நமது வாழ்வே நிலமாகும். நாம் கனி நிறைந்திருக்கவேண்டுமென்பது தேவனது விருப்பம். ஆனால் அகற்றப் படவேண்டிய தடைகள் உண்டு. இல்லையேல் பெற்றுக்கொண்டேயிருப் போம், பெற்றெடுக்கவோ மாட்டோம்.

வசனத் தியானத்தின் மேன்மையைச் சித்தரிப்பதில் சங்கீதப் புத்தகத் திற்கு நிகரில்லை. இப்புத்தகத்தின் முதல் அத்தியாயமே கனி கொடுத் தலைப்பற்றித்தான். அவிசுவாசிகளின் ஐக்கியமே முதல் தடையெனக் குறிப்பிடப்பட்டுள்ளது (வச 1). தியானத்திலிருந்து பேராசீர்வாதம் பெற தீர்க்கன் எரேமியா இத்தத்துவத்தைப் பின்பற்றினான். ''உமது வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்... நான் பரியாசக்காரர் கூட்டத்தில் உட்கார்ந்து களிகூர்ந்ததில்லை'' (எரே 15:16,17).



கனி கொடுக்கவிடாதபடி உலகச் சிந்தையும் பொருளாசையும் வச னத்தை நெருக்குகின்றன (மத் 13:22). இதுதான் முள்ளுள்ள நிலம். வசன நேசமும் உலக சிநேகமும் ஒன்றுக்கொன்று எதிரானவை (1 யோ 2:14-17). சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு கொடுத்த ''அப்பம், ரசம்'' இரண்டிலும் திருப்தியடைந்த ஆபிரகாம் சோதோமின் ராஜா கொடுத்த வற்றை ஏற்க மறுத்தான் பாருங்கள் (ஆதி 14:18-24). பணத்திற்குப் பின்னால் செல்வோர் வசன வாழ்வில் அவ்வளவாய்த் தேறுவதில்லை. விசுவாசத்தில் செல்வந்தரான பெரும்பாலானோர் உலகில் தரித்திர ராயிருப்பது ஏன் என்று புரிகிறதா? (யாக் 2:5).

உறவுப் பிரச்னைகள் கனி வாழ்விற்கு மூன்றாவது தடையாகும். ''சகல துர்க்குணத்தையும்... புறங்கூறுதலையும் ஒழித்துவிட்டு... திருவசன மாகிய களங்கமில்லா ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்'' (1 பேது 2:2,3). பிறரோடுள்ள உறவுகளில் கர்த்தர்போல் ''தயையுள்ளவராய்'' இருக்கவேண்டும் (வச 1). மென்மையும், இணக்கமுமே நமது அலங்கார மாயிருக்கவேண்டும். இறுகிய தரையில் செடி வளருமோ?

### *6. அறிவியுங்கள்! (Relate!)*

பிரசங்கங்களில் கேட்பதையும், புத்தகங்களில் வாசிப்பதையும் பிற ருடன் பகிர்ந்துகொள்ளுங்கள். தேக்கம் வேண்டாம். கொடுக்கவே பெறு கிறோம். ''உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சு கிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும். தானியத்தைக் கட்டி வைக்கிறவனை மக்கள் சபிப்பார்கள்; விற்கிறவன் தலைமீது ஆசீர்வாதம் தங்கும்'' (நீதி 11:25,26).

திருவசனச் சத்தியங்களை எடுத்துரைக்க மேய்ப்பர், போதகர், பிரசங்கி களுக்கு மட்டுமே உரிமையுண்டென்று எண்ணுவது மடமை. பழைய ஏற்பாட்டு ஆசாரியத்துவம் அகற்றப்பட்டுள்ள இப்புது உடன்படிக்கையின் நாட்களில் சத்தியத்தைப் பகிரும் சிலாக்கியமும் பொறுப்பும் ஒவ்வொரு விசுவாசிக்கும் உண்டு. ''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்... பரிபூரண மாய் வாசமாயிருப்பதாக... ***ஒருவருக்கொருவர்*** போதித்துப் புத்தி சொல்லி...'' (கொலோ 3:16).

அநேகரைவிட அதிகம் கூட்டங்களில் பங்குபெற்று, ஏராளம் சத்தியம் கேட்கும் சிலாக்கியம் நம்மில் சிலருக்குண்டு. வாய்ப்பற்றோருக்காய்க் கரிசனை கொள்ளவேண்டும். நெகேமியா புத்தகத்தில் அழகான வசன

மொன்றுண்டு: ''நீங்கள்... புசித்து... குடித்து, ஒன்றுமில்லாதோருக்குப் பங்குகளை அனுப்புங்கள்'' (8:10).

பகிர்வது பிரசங்க வாயிலாகவே இருக்கவேண்டுமென எண்ணக் கூடாது. உரையாடல்கள், கடிதங்கள், குழுக்கூடுகைகள் போன்றவை மூலம் சத்தியங்களைக் கடத்தலாம். வயல் வெளியில் நடக்கும்போதும், பயண வேளைகளிலும் அல்லவா இயேசு அதிவுன்னத சத்தியங்களில் பெரும்பாலானவற்றைப் பகிர்ந்துகொண்டார்!

''கொடுங்கள், கொடுக்கப்படும்.'' சத்தியத்தைப் பகிர்ந்துகொள்ளும் காரியத்தில் இத்தத்துவம் அபாரமாகச் செயல்படுகிறது.

### *7. ஆராதியுங்கள்! (Revere!)*

வசன அறிவு யாவும் நம்மைத் தொழுகைக்குள் நடத்தவேண்டும். வசனத்தின் தேவனை அறிவதே தேவனது வசனத்தை ஆராய்வதின் நோக்கமாகும். இந்த அறிவினால் ஆராதனை சிறப்பாகும். ''நான் பணிந்து... உமது நாமத்தைத் ***துதிப்பேன்...*** உமது ***வார்த்தையை*** நீர் மகிமைப்படுத்தியிருக்கிறீர்'' என்றான் தாவீது (138:2).

இயேசுவே வேதத்தின் மையக் கருத்தானவர். புத்தகந்தோறும் அவரைச் சந்தியுங்கள். ஆதியாகமத்தில் அவர் பெண்ணின் வித்து. யாத்திராகமத்தில் பஸ்கா ஆட்டுக்குட்டி. லேவியராகமத்தில் பிரதான ஆசாரியன். இப்படி. தீர்க்கதரிசன நூல்களில் அவர் சமாதானப் பிரபு. சுவிசேஷங்களில் அவர் இறைமகன், மனுமகன். நடபடிகளில் அறுவடையின் ஆண்டவர். நிருபங்களில் சபையின் ஆண்டவர். வெளிப்படுத்துதலில் அவர் நாடுகளின் ஆண்டவர்.

வேதத்தின் ஒவ்வொரு சத்தியமும் தேவனது குறிப்பிட்டதொரு குணாதிசயத்தைச் சுற்றிச் சுழலுகிறது. அச்சத்தியத்தைப் புரிந்து அதற்குக் கீழ்ப்படிவதோடு நின்றுவிடாது, அச்சத்தியம் குறிப்பிடும் தேவனது குணநலனுக்காக அவரைத் தொழுதுகொள்ளவேண்டும். பிரசங்கிப்பதின் நோக்கம் தேவனை மகிமைப்படுத்தவே என்றிருப்பதுபோல் கேட்பதின் நோக்கமும் அவரை ஆராதிக்கவே என்றிருக்கவேண்டும். ஒவ்வொரு பிரசங்கமும் நமது தொழுகைக்கு ஒரு பரிமாணம் கூட்டட்டும். அதுவே இவ்வுலகில் கிட்டும் அவ்வுலக அனுபவமாகும்!



### *ஒரு வாக்குத்தத்தம்*

இந்த ஏழு படிகளைப் பின்பற்றினால் ஏசாயா 55:10,11 நமது வாழ்வில் பலிக்கும்: ''என் வாயிலிருந்து புறப்படும் வசனம்... வெறுமையாய்த்... திரும்பாமல்... நான் அதை அனுப்பின காரியம் ஆகும்படி வாய்க்கும்!''

# 6
# கேளுங்கள், தேடுங்கள், தட்டுங்கள்!

''கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்!'' (மத் 7:7).

இதோ, தேவன் நம்மை **ஜெபிக்க** அழைக்கிறார். ஜெபமென்றால் கேட்பது, பதிலென்றால் பெறுவது. ஜெபமென்றால் தேடுவது, பதிலென்றால் கண்டடைவது. ஜெபமென்றால் தட்டுவது, பதிலென்றால் நுழைவது.

மத்தேயு 5 முதல் 7 அத்தியாயங்களை ''ஜெபப் பிரசங்கம்'' என்றால் தவறில்லை. வேறு எதையும்விட நமதாண்டவர் இங்கு ஜெபத்தையே விரிவாகப் போதித்துள்ளார். கர்த்தருடைய ஜெபம் இப்பிரசங்கத்தில் இதயம்போல் அமைந்துள்ளது (6:9-13). ஜெபத்திற்குக் கர்த்தர் நம் வாழ்வில் விரும்பும் முக்கியத்துவம் இணையற்றது. இப்பிரசங்கத்திலுள்ள ஜெப வசனங்களைச் சுருக்கமாய்த் தியானிப்பது பெருக்கமான ஆசீர் அருளும்.

*r 5:6, ''**நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள்** பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்.''*

ஜெபத்தைப்போல் நம்மைத் துவைத்து வெளுப்பது வேறொன்றுமில்லை. பாவம் செய்துகொண்டிருப்பவன் ஜெபிப்பதை நிறுத்துவான்; ஜெபித்துக்கொண்டிருப்பவன் பாவம் செய்வதை நிறுத்துவான். மனந்திரும்புதல் ஜெபத்தில் இரண்டறக் கலக்கும் (2 நாளா 7:14). தனிப்



பரிசுத்தத்திற்காகவும், செயலில் நீதியாயிருக்கவும் முக்கியமாய் ஜெபிக்க வேண்டும். உடற்பசி, தாகத்தைவிட நீதியை அதிகமாய் வாஞ்சிக்கவேண்டும். ''ஜெபமும் தூய வாழ்வும் ஒன்றிணைந்தது; ஒன்றில்லாமல் ஒன்றில்லை'' என்றார் பக்தன் E.M. பவுண்ட்ஸ் (1835-1913). பரிசுத்தத்திற்காக ஜெபிக்கையில் நம்மீது புனித நீர் கொட்டும். ''அவர்கள் திருப்தியடைவார்கள்!''

*r 5:8, ''இருதயத்தில் **சுத்தமுள்ளவர்கள்** பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்.''*

கவனமின்றி ஜெபிக்கத் துவங்கிவிடக்கூடாது. பொல்லாங்கு நம்மில் உண்டோவெனக் காண இதயமும் மனதும் அமைதிப்படவேண்டும். ''தேவனே, என்னை ஆராய்ந்துபாரும்'' என்றே ஜெபம் துவங்கவேண்டும். மறைக்கப்பட்ட பாவங்கள் ஜெபத்தை மலடாக்கும். அவை தேவனது முகத்தை மறைக்கும் (ஏசா 59:2). தண்ணீர் அமரும்போதுதான் அழுக்கு மேலே மிதக்கும். ஜெபிக்கச் செல்லும்போதெல்லாம் இரத்தத்தால் இன்னொரு முறை கழுவப்பட நாடுங்கள். தெரிந்ததும் வெளிப்படையானதுமான பாவங்களைவிட தெரியாத பாவங்கள்தானே அதிகம்!

*r 5:23,24, ''நீ பலிபீடத்தினிடத்தில் உன் காணிக்கையைச் செலுத்த வந்து, உன் பேரில் உன் சகோதரனுக்குக் குறை உண்டென்று அங்கே நினைவுகூறுவாயாகில்,... முன்பு உன் சகோதரனுடன் **ஒப்புரவாகி**, பின்பு வந்து உன் காணிக்கையைச் செலுத்து.''*

ஜெபமென்பது ஒரு பலிபீடம். ஆபேலோடு ஒப்புரவாகும்வரை தேவன் காயீனின் காணிக்கையை ஏற்றுக்கொள்ளார். ஒப்புரவாகுதலைப்பற்றிப் பேசும்போது தவறு யார் பக்கம் என விவாதிப்பது தகாது. பலிபீடத்திற்கு வரும் நபரே ஒப்புரவாக முதற்படி எடுத்துவைக்க வேண்டும். தேவனோடும் மனிதரோடும் சரியாயிருப்பதே நல்மனச்சாட்சியாம். ஒன்றில்லாது அடுத்தது சாத்தியமில்லை (1 யோ 4:20). கோபத்தையும் கசப்பையும் களைந்து ஆகாதவரை அணைத்துக்கொள்வோம். பெருமையும் கவுரவமும் தேவாசீர்வாதத்தைத் தடுத்துவிடவேண்டாம். ''முன்பு'' ஒப்புரவாகுங்கள்!

*r 5:44, ''உங்களை **நிந்திக்கிறவர்களுக்காகவும்**, உங்களைத் **துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும்** ஜெபம்பண்ணுங்கள்.''*

கிறிஸ்தவ வாழ்வு ஒரு புறம் களிப்பு, மறுபுறம் களைப்பு. கீழ்ப்படிந்தால் களிப்பு, மறுத்தால் களைப்பு. கிறிஸ்துவின் கட்டளைகள் அநியாயமா னவைளோ, சாத்தியமற்றவைகளோ அல்ல. நம்மை விரோ திப்போருக்காக ஜெபிக்கத் துவங்கியதும் அவர்களை நேசிக்கத் தேவையான தேவ அன்பு நம்மீது பொழியும். வேண்டுமென்றே தேவன் நம்மைக் கடினமான சில ரோடு வைக்கிறார். தப்ப இயலாது. பயிற்சியில் அது ஒரு முக்கிய பாடம். எதிர்ப்பும் புரியாமையுமுள்ள சூழலுக்குப் போதுமான கிருபையை ஜெபிக்கும்போது பெறுகிறோம். ''முள்ளை'' தேவன் எடுத்துவிடமாட்டார் (2 கொரி 12:7-9).

> r *6:5,6, ''நீ ஜெபம்பண்ணும்போது **மாயக்காரரைப்** போலிருக்க வேண்டாம்; மனிதர் காணும்படி... ஜெபம்பண்ண விரும்புகிறார் கள்... நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் நுழைந்து, உன் கதவைப் பூட்டி, **அந்தரங்கத்திலிருக்கிற** உன் பிதாவை நோக்கி ஜெபம் பண்ணு.''*

பிற ஆன்மீகப் பழக்கங்களைவிட ஜெபத்தை மிக எளிதாக வெளிப் பகட்டுக்காக செய்துவிடமுடியும். தினமும் இத்தனை மணி நேரம் ஜெபிக் கிறேன் எனச் சொல்லித் திரிவது பரிசேயத்துவம். மனிதப் புகழ் நாடினால் வேறொன்றும் கிடைக்காது. ஜெப வாழ்வு பொருட்காட்சியாகிவிடக் கூடாது. இரகசியமாய் ஜெபிப்பதே ஜெபிப்பதின் இரகசியமாம்! ஜெபிப் பதற்காகச் சந்தடியற்றதோர் ஒதுக்கிடம் தேவை என்பதையும் இப்பகுதி வற்புறுத்துகிறது. மற்றபடி ஆவியானவரின் மெல்லிய குரலை கேட்க முடியாது. அறைக்குள் சென்று ஜெபிப்பது அவசரமில்லாமல் ஜெபிப்பதை யும் குறிக்கிறது. அந்தரங்க ஜெபம் நமது அந்தரங்க வாழ்வை ஆசீர் வதிக்கும். காலைதோறும் தேவன் உங்களைத் தொடும்வரை ஜெப அறையை விட்டு வெளியே வர வேண்டாம்.

> r *6:7,8, ''நீங்கள் ஜெபம்பண்ணும்போது, அஞ்ஞானிகளைப் போல் வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள்... உங்கள் **பிதாவை** நோக்கி நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு முன்னமே உங்க ளுக்கு இன்னது தேவை என்று அவர் **அறிந்திருக்கிறார்**.''*

தேவனுக்குத் தெரியாததை அவருக்குத் தெரிவிப்பதல்ல ஜெபம். மாறாக, அது நமது உணர்வுகளைத் தந்தையிடம் குழந்தைபோல் கொட்டுவதாகும். எளிய ஜெபங்கள் மகிமையானவை. நமது இருதயத்தை



அவர்முன் ஊற்றும் அதே வேளையில் தேவனுக்குப் புரியாததை அவருக்கு விளக்கிச் சொல்லுகிறோம் என்று நினைத்துவிடக்கூடாது! தெய்வத்தைக் குறித்த அஞ்ஞான நினைவுகளைக் களைய வேண்டும். முதலும் முடிவுமாக, ஜெபமென்பது தந்தை குழந்தையின் உரையாடலே. குழந்தையின் தேவையனைத்தும் தந்தைக்கு நன்றாகத் தெரியும். ஆனா லும் குழந்தை கேட்பது அவருக்கு மனக்குளிர்ச்சி. அதுதான் உறவுக்கு உயிரூட்டுகிறது. சேய்க்குப் பால் கொடுக்கவேண்டிய வேளையைத் தாயறிவாள். ஆனாலும் அழுகுரல் கேட்டதும் அனைத்தூட்டுவாள் அல்லவா?

> r *6:9-13, ''நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய **விதமாவது**: பர மண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உமது நாமம் பரிசுத்தப் படுவதாக. உமது இராஜ்யம் வருவதாக; உமது சித்தம் பரமண்டலத் திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட் படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள் ளும். இராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம் முடையவைகளே, ஆமென்.''*

இதிலும் மேலான ஜெபமுண்டா? பிதாவின் சித்தத்தைப் பூரணமாய் அறிந்திருந்த ஜெப வீரன் இயேசுவின் புனித வார்த்தைகள்! சில சபை களில் இந்த ஜெபத்தைக் கிளிப்பிள்ளைபோல் அர்த்தமற்றுச் சொல்லி விடுவதால் மற்றவர்கள் இதை அறவே அகற்றிவிட்டனர். துர்ப்பிரயோகத் திற்குப் பரிகாரம் அப்பிரயோகமா? குடும்ப ஜெபங்களில் இந்த ஜெபத் தைச் சொல்லுவது பேராசீர்வாதம். இந்த ஜெபம் காரியங்களை முக்கியத் துவ ரீதியில் வரிசைப்படுத்துகிறது. முதலாவது அவர் நாமம், அவர் இராஜ்யம், அவர் சித்தம்; அடுத்து நமது உடலுக்கடுத்த தேவைகளும், பிறரோடுள்ள உறவும்; மூன்றாவது, சோதனையை மேற்கொள்ள ஒவ் வொரு நாளும் ஜெபிக்கவேண்டும். உள்ளம் உற்சாகமாயிருந்தாலும் உடல் பலவீனமானது.

> r *6:14,15, ''மனிதருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால் உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்... நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்.''*

பாவ மன்னிப்பு நிபந்தனையுள்ளது. இயேசு இங்கு கூறுவது வெறும் வார்த்தைகளல்ல. மன்னியாமையின் ஆவியைப் பேணுவது நமக்குத்தான் பாதகம். நாம் அறிக்கையிட்ட, அல்லது அறிக்கையிடத் தவறிய, மறந்த, அத்தனையையும் ஆண்டவர் தயாளராய் மன்னித்துவிட்டாரே. பிறர் மீது நாம் இதே மனப்பான்மை கொள்ளவேண்டாமா? மன்னிப்பது கடினம் தான். ஆனால் நாம் முதற்படி எடுத்தால் தேவன் உதவுவதைக் காண்போம்.

r *6:16-18, ''நீங்கள் **உபவாசிக்கும்போது** மாயக்காரரைப்போல்... இராதேயுங்கள்... அப்பொழுது, **அந்தரங்கத்தில்** பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாய்ப் பலனளிப்பார்.''*

தமது மக்கள் தவறாது உபவாசிப்பார்கள் என்று இயேசு எடுத்துக் கொண்டார். உபவாசம் தேவையா இல்லையா என்று அவர் விவாதிக்க வில்லை. நாம் உபவாசத்தை அதிகரிக்கவேண்டும். நமது இரகசிய உப வாசம் தேவனுக்குப் பிரியம். அதின் பலனை வெளிப்படையாய் வாழ் விலும் பணியிலும் காண்போம்.

r *6:25-33, ''என்னத்தை உண்போம்... குடிப்போம்... உடுப்போம் என்று **கவலைப்படாதிருங்கள்.** இவைகளையெல்லாம் அஞ்ஞானி கள் நாடித் தேடுகிறார்கள்;... **முதலாவது** தேவ இராஜ்யத்தையும் அவரது நீதியையும் **தேடுங்கள்**, அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.''*

ஜெபமானது உடலுக்கடுத்த, உலகத் தேவைகளையே சுற்றிவரக் கூடாது. எடுத்துக்காட்டாக, கர்த்தரது ஜெபத்தைக் கவனியுங்கள். அதி லுள்ள ஏழு விண்ணபங்களில் உடலுக்கடுத்தது ஒன்றுதான். அனுதின ஆகாரத்திற்காக ஜெபிக்கவேண்டும். ஆனால் அதுவே நமக்குப் பிரதான மாகிவிடக்கூடாது. நித்திய காரியங்கள் அதைவிட முக்கியமானவை. இறையரசு தனது நீதியோடு எங்கும் நிறுவப்படுவதே நமது நாட்டமா யிருக்குமானால், படை வீரருக்கு உணவு, உடை அளிப்பது அரசனின் பொறுப்பன்றோ? மிஷனரிப் பணியும், நற்செய்தி ஊழியமுமே உங்கள் கவலையாயிருக்கட்டும். சபைக்காகவும் சமுதாயத்திற்காகவும் ஜெபி யுங்கள். நாட்டுத் தலைவர்கள், உலகத் தலைவர்களுக்காக ஜெபியுங்கள். பரத்திலிருந்து எழுப்புதல் அனுப்பப்பட ஜெபியுங்கள்.

r *7:7, ''கேளுங்கள் அப்பொழுது உங்களுக்குக் **கொடுக்கப்படும்**; தேடுங்கள், அப்பொழுது **கண்டடைவீர்கள்**; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் **திறக்கப்படும்**.''*



ஜெபத்திற்கு பதில் நிச்சயம். ஜெபத்திற்குப் பதிலளிப்பதே தேவனின் சுபாவம். கேட்பது நிச்சயம் கிடைக்கும். தேடுவதை நிச்சயம் காணுவோம். தட்டுவது நிச்சயம் திறக்கும். தேவனைச் சந்தேகிக்கவேண்டாம். அறிவு பெருத்த இந்நாட்களில் எளிய விசுவாசம் எளிதல்ல. ஆனால் வேறு வழி யில்லை. கேட்கவும், தேடவும், தட்டவும் அழைப்பதே அவர்தானே. எதற்கு? பதில் கொடுக்கத்தானே? நாம் கேட்பது அவருக்கு ஆனந்தம்; அதற்குப் பதிலளிப்பது அவருக்குப் பேரானந்தம்.

r *7:8, ''கேட்கிறவன் **எவனும்** பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிற வன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.''*

தேவனிடம் பட்சபாதமில்லை. அனைவரும் அவருக்கு அருமை யானவர்கள். பிறரது ஜெப உதவி நமக்குத் தேவை; ஆனால் சிபாரிசு தேவையில்லை. தேவனிடம் நேரே செல்லலாம். ஜெபத்திற்குப் பதில் பெறும் ''வரம்'' என்று ஒன்றில்லை. தமது சொந்தப் பிள்ளைகளிடம் தேவன் பாரபட்சம் காட்டுவாரோ? எலியா ''டீலக்ஸ்'' மனிதன் கிடையாது. அவன் ''நம்மைப்போல்'' சுபாவமுள்ளவன். அவன் ஜெபித்தான், தேவன் பதில் தந்தார். ''எந்த'' நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதலும் மிகுந்த பலனுள்ளது (யாக் 5:16-18). நாம் கிறிஸ்துவில் நீதிமான்களாக்கப்பட்டிருக் கிறோம். தயக்கங்களைத் தகர்த்தெறிந்து தைரியமாய் ஜெபியுங்கள்.

r *7:9-11, ''எந்த மனிதனானாலும் தன்னிடம் அப்பம் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?... பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு **நல்ல ஈவுகளைக்** கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடம் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவை களைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா?''*

நாம் கேட்பதையே தேவன் கொடுப்பார். அவர் நல்லவர். நல்லவை களையே கொடுப்பார். அப்பம், முட்டை, மீன்! எதிர்மறைச் சிந்தனைகளை அகற்றுங்கள். ''சோதிகளின் பிதாவிடமிருந்து'' வரும் அத்தனை நன்மை யும் பூரணமானது (யாக் 1:17). ''நன்மையானவைகள்'' என்பதற்குப் பதிலாக லூக்கா தனது நற்செய்தியில் ''பரிசுத்த ஆவி'' என்று எழுதியுள் ளான் (லூக் 11:13). இதுதான் வரங்களிலெல்லாம் மேலானது! பிதாவின் வாக்குத்தத்தம்! தினமும் புதிதாய் ஆவியினால் நிரப்பப்பட ஜெபியுங்கள். ''நாம் வேண்டுவதற்கும் நினைப்பதற்கும் மிகவும் அதிகமாய்'' அவர் செய்ய வல்லவராகையால் ஆவியை அளவில்லாமல் நம்மீது கொட்டு வார்! (எபே 3:20).

ஜெப வாழ்வில் பலப்பட கீழ்வரும் ஆலோசனைகளைப் பின்பற்றுங்கள்—

1. ''கேட்கவும் தேடவும்'' தினம் குறைந்தது ஒரு மணி நேரம் தேவனோடு ஜெபத்தில் செலவழியுங்கள்.
2. வாரத்தில் ஒரு முறையாவது உபவாசித்து ஜெபியுங்கள். அதிக வேலையில்லாத ஒரு நாளை இதற்குத் தெரிந்தெடுங்கள்.
3. வாரந்தோறும் ஒரு மணி நேரமாவது ஒரு சில விசுவாசிகளோடு கூடி ஜெபியுங்கள். உங்கள் மனதில் தோன்றும் விசுவாசிகளோடு கலந்தாலோசித்து வசதியான நேரத்தைக் குறித்துக்கொள்ளுங்கள். நேரத்தை மாற்றாதீர். வரவர எண்ணிக்கை குறைந்தாலும் ஜெபத்தைத் தொடருங்கள்.
4. இந்தியாவில் 28 மாநிலங்களும், 7 யூனியன் பிரதேசங்களும் உண்டு. தினமும் ஒவ்வொன்றுக்காக ஜெபித்தால் மாதந்தோறும் அத்தனைக்காகவும் ஜெபிக்கலாம். உங்கள் ஜெப அறையில் இந்திய தேசப்படத்தையும், உலகப் படத்தையும் தொங்கவிடுங்கள்; அல்லது வேதத்தில் சிறிய படமொன்றை வைத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு இடத்தையும் உங்கள் ஜெபமென்னும் சுத்தியால் ''தட்டுங்கள்.''
5. ஏதாவதொரு நாள் ஒரு மணி நேரம் ஜெபிக்க முடியாதுபோனால் அந்த வாரயிறுதியில் கூடுதல் நேரம் ஜெபித்து, அதை நிறைவேற்றிவிடுங்கள். இது நியாயப்பிரமாணம்போலத் தோன்றலாம். ஆனால் முழங்காலில் இவ்வளவு பின்வாங்கிய நமக்கு இதுதான் நியாயம்!
6. ஜெபத்தைக் குறித்து நிறைய புத்தகங்களை வாசியுங்கள். எந்தப் புத்தகத்திலும் புதிய ஜெபப் பாடங்கள் கிடைக்கும்.
7. முடிந்த அளவு உபவாச ஜெபங்கள், ஜெப முகாம்கள், ஜெப மாநாடு கள் ஆகியவற்றிலெல்லாம் பங்குபெற்று ஜெப ஆவியைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# 7
# வென்றவர் மூலம் வெல்லுவோம்!

''நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்!'' (1 கொரி 15:57).

கிறிஸ்துவே தளபதி. நாம் படை வீரர். நம்முடையவை அணு, இரசாயன அல்லது விஷவாயு ஆயுதங்களல்ல, ஆனால் ஆன்மீகப் படைக்கலன்கள். அவைகளால் நாம் எதிரியின் தளவாடங்களைத் தகர்த்தெறிகிறோம் (2 கொரி 10:4,5). அண்டசராசரத்திலும் மிகப்பெரிய வல்லரசு நாம்தான். கிறிஸ்துவிடமிருந்து இயற்கைக்கப்பாற்பட்ட வல்லமையைப் பெற்றிருக் கிறோமல்லவா? நாம் உன்னதங்களில் வீற்றிருக்கிறபடியால் ஆகாயப் படையில் நம்மை மிஞ்சுவது யார்? (எபே 2:6).

ஆனாலும் சத்துருவைக் குறைவாய் எடைபோட்டுவிடக்கூடாது. அவன் அங்குமிங்குமாயல்ல, குறிவைத்துக் கிரமமாய்த் தாக்குவான். அவனது போர் முறையும் தத்துவமும் யுகாயுகமாய்ப் பரிசுத்தவான்களோடு அவன் நடத்திவரும் யுத்த அனுபவத்தின் அடிப்படையிலானது. இன்னும் தனக்குக் கொஞ்சக்காலம் மட்டும் உண்டென்று அறிந்து அவன் எப்பொழுதையும்விட இன்று அதிகமாய்ச் சீறுகிறான் (வெளி 12:12). ஆனாலும், வெற்றி வேந்தர் மூலம் வெற்றி நமதே!

வெற்றி பெறும் முறை இதோ—

### *1. கிறிஸ்துவின் மாதிரி மூலம்*

பெத்லகேம் துவங்கிக் கல்வாரி வரை பிசாசு இயேசுவை விட்டா னில்லை. அவன் அவரைச் சோதிக்காத பகுதியே இல்லை. கிறிஸ்துவோ ஒருமுறைகூட விட்டுக்கொடுக்கவில்லை (எபி 4:15). அவரது தொடர்ந்த, முழு வெற்றிக்கான இரகசியங்களை வேதம் வெளிப்படுத்துகிறது.

முதலாவதாக, கிறிஸ்து தம்மைப் பிதாவின் ஆளுகைக்கு முற்றிலும் அர்ப்பணித்திருந்தார். உலகிற்குள் நுழைகையில், பிதாவை நோக்கி, ''தேவனே, உமது சித்தத்தின்படி செய்ய, இதோ, வருகிறேன்'' எனச் சமர்ப்பணம் செய்தார் (எபி 10:5-7). இதில் பின்திரும்பவே இல்லை. அதிகாரத்திற்கு அடிபணிவோரே அதிகாரம் செலுத்த முடியும். இயேசுவில் இத்தத்துவத்தை அப்படைத்தலைவன் தெளிவாய்க் கண்டான். தந்தை யின் கட்டளையின்படியே அவர் செயல்பட்டுக்கொண்டிருந்ததை நன் குணர்ந்தான். எனவேதான் கட்டளை வார்த்தை ஒன்று போதும் என்றான் (மத் 8:8,9). ''தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்'' என்று யாக்கோபு எவ்வளவு தெளிவாய்ச் சொன்னான்! (யாக் 4:7).

அடுத்து, ஜெபத்தின் மூலம் கிறிஸ்து எப்பொழுதும் விழிப்பாயிருந் தார். விடியுமுன்பும், இருட்டிய பின்பும் தாக்குவதே சிறந்தது என்பது சரித்திரச் சான்று! கவலையீனமாக, சோம்பேறித்தனமாக, எதிர்பாராது இருக்கும் வேளையில்தான் பிசாசு நம்மைப் பெரிதும் தாக்குவான். மனிதர் தூங்குகையில்தானே சத்துரு களைகளை விதைத்துச் சென்றான்! (மத் 13:25). விழித்திருந்து ஜெபியுங்களென்பது வெறும் வறட்டுச்சொற் களல்ல. உற்சாக ஆவியைக்கொண்டு பலவீன மாம்சத்தை மேற்கொள்ள அது ஒன்றே வழி (மத் 26:41). விட்டுக்கொடுக்க எதிரி இன்னும் மறுத்தால் ஜெபத்தோடு உபவாசத்தைக் கூட்டிக்கொள்ளவேண்டும் (மத் 17:21).

பொதுவாகப் பிசாசு பார்க்க நன்றாகவே இருப்பான்! அவன் பெரிய தந்திரசாலி. இயேசுவை உயர்த்துவதில் கரிசனை கொண்டவன்போல் வனாந்தரத்தில் அவரிடம் வந்தான் (மத் 4:5-10). நாற்பது நாள் ஜெபத்தில் பெற்ற ஆன்மீகக் கூர்மை கொண்டு அவர் அவனது முகமூடியைக் கிழித் தெறிந்தார். இன்னொரு முறை பிசாசு இயேசுவின் நலம் நாடுபவன்போல் வேடமணிந்து வந்தான். ஜெபத்தில் பெற்ற விழிப்பினால் அப்பொழுதும் இயேசு அவனை அடையாளங்கண்டார் (மத் 16:21-23). ஜெபமே பர லோக ஒலியலைகளைச் சரியாய்ப் பிடிக்கும்.



இயேசு இதைச் சொல்லுவாரா? அவர் இதைச் செய்வாரா? அவர் இதை ஆமோதிப்பாரா? சத்துருவின் சதித்திட்டங்களுக்கு நம்மைத் தப்புவிப் பவை இக்கேள்விகளுக்கான பதில்களே. சுவிசேஷங்களை அடிக்கடி படித்தால்தான் கிறிஸ்து எவ்விதம் சத்துருவை முறியடித்தாரெனக் கற்றுக் கொள்ள முடியும்.

### *2. கிறிஸ்துவின் இரத்தம் மூலம்*

கிறிஸ்துவின் மரணத்தைப்போல் அந்தகாரத்தின் ஆதிக்கங்களுக்கு இடியடி கொடுத்தது வெறொன்றுமில்லை. கிறிஸ்துவின் இரத்தமென்றால் பிசாசுக்கு ஒரே நடுக்கம். சிவப்புக்கயிற்றின் பக்கமே வரமாட்டான். கதவின் நிலைகளில் இரத்தத்தைப் பார்த்தால் அங்கு நிற்கவேமாட்டான்.

குற்றஞ்சாட்டுவதே பிசாசின் தொழில். அதில் ஓயவே மாட்டான். தேவ மக்கள்மீது பழிசாட்டுவதென்றால் அவனுக்கு அவ்வளவு பிரியம். ஆனால் இரத்தத்தால் அவனைத் தோற்கடிக்கலாம் (வெளி 12:11). சத்துருவின் குற்றச்சாட்டுகளைத் துச்சமென இகழ்ந்த பவுல், ''ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர்...'' எனச் சவாலிட்டான் (ரோ 8:34).

பிசாசு நமது மனச்சாட்சியில் குற்றவுணர்வை விதைத்து நம்மை மன மடிவாக்குகிறான், கல்வாரியில் கிறிஸ்து முடித்துவிட்டதை நாம் மறக்கச் செய்கிறான். கண்டனத்தீர்ப்புக்கும் பாவவுணர்வுக்குமுள்ள வேறுபாட்டை நன்கறியவேண்டும். ஆவியானவர் தருவது பாவ உணர்வு; பிசாசோ மனதை கண்டனவுணர்வினால் வாதிக்க முயலுகிறான். நமது மனச் சாட்சியைச் சுத்திகரிக்கும் கிறிஸ்துவின் இரத்தத்தைப் பற்றிய நிச்சயத்தில் உறுதியாயிருப்போம் (எபி 9:14).

கர்த்தருடன் திறந்து வாழும்போது இம்மானுவேலின் இரத்த ஊற்றி னால் இடையறாது கழுவப்படுவோம் (1 யோ 1:7). உணர்வுகள் மாறிக் கொண்டேயிருக்குமாதலால், நாம் அவைகளைச் சார்ந்திருக்கக்கூடாது. மாறாத உண்மையாவது—

*வல்லமையுண்டு, உண்டு, அற்புத வல்லமை*
*இயேசுவின் இரத்தத்தால்;*
*வல்லமையுண்டு, உண்டு, அற்புத வல்லமை*
*ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்!*

''தண்ணீரினாலும் இரத்தத்தினாலும்'' வந்த இயேசு மீதுள்ள விசுவாசமே உலகை வெல்லும் வெற்றி (1 யோ 5:4-6). கிறிஸ்துவின் மரணத்தோடு நம்மை அடையாளப்படுத்திக்கொள்ளுதல் நம்மைப் பாவத்தினின்றும், அதின் அடிமைத்தனத்தினின்றும் விடுவிக்கும் (ரோ 6:6,7). அடுத்த முறை பிசாசு உங்களது பழைய பாவமொன்றை நினைவுபடுத்தினால், ''அதெல்லாம் சிலுவையில் முடிந்தது, சும்மா வாயை மூடு'' என்று ஓங்கிச் சொல்லுங்கள்!

கிறிஸ்துவின் ஒரு சொட்டு இரத்தம் வானம் பூமியிலும் விலையுயர்ந்தது என்றார் D. L. மூடி (1837-1899).

### *3. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் மூலம்*

''கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்'' (1 கொரி 15:17). ஆனால், அல்லேலூயா, கிறிஸ்து எழுந்தார்; எனவே நமக்கு வெற்றியுண்டு!

உயிர்த்தெழுந்த கிறிஸ்து நம்மில் வாழுகிறார் (கலா 2:20). நமது அதிபதியாகிய அவர் உலகிலிருப்பவனிலும் பெரியவர் (1 யோ 4:4). ''நான் உலகை வென்றேன்'' என அவர் முழங்கினார்! யுத்தக்களத்திலிருக்கும் சேவகருக்கு என்னே உற்சாக வார்த்தைகள்! மட்டுமல்ல, ''இதோ சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவின் சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரம் கொடுக்கிறேன்; ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது'' என்றும் உறுதி கூறினார் (லூக் 10:19). இதுதான் தரைப்போர் என்பது. இதிலும் எதிரியை முறியடிப்போம்.

உயிர்த்தெழுந்தபடியால் கிறிஸ்துவுக்கு, ''எல்லா நாமத்திற்கும் மேலான நாமம்'' தரப்பட்டுள்ளது (பிலி 2:9; அப் 2:32,36). *இயேசென்னும் நாமத்தில் ஜெயம் நமக்குண்டு!* ''கர்த்தர் நாமம் பலத்த துருகம்; நீதிமான் அதற்குள் ஓடி சுகமாயிருப்பான்'' (நீதி 18:10). அதி வேக ஏவுகணை எதுவும் அந்த அரணைத் தகர்க்க முடியாது. ஒன்று தவறாமல் எதிரியின் ஏவுகணைகள் அத்தனையையும் வழிமறித்து நாசமாக்குவதே இயேசுவின் நாமமெனும் எதிர் ஏவுகணையாம்! கோலியாத்தைத் தாவீது எச்சரித்தது நினைவிருக்கிறதா? ''நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடம் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலின் இராணுவங்களின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் நாமத்தில்



உன்னிடம் வருகிறேன்!'' (1 சாமு 17:45). இயேசென்னும் நாமத்தில் பேய்கள் பறந்தோடும்! (மாற் 16:17).

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவுக்குமுன் சிறைக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ''சிறைப்பட்டோரைத் தமக்குச் சிறையாக்கினார்!'' (எபே 4:8-10). பின்பு அவர் எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறிப் பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்தார். எப்பொழுது வேண்டுமானாலும் உதவி பெற இக்கிருபாசனத்திடம் நாம் தைரியமாய் வரலாம். நமது போராட்டங்களில் அவர் நமக்காகப் பரிதபிக்கிறார்; நமக்குக் கரங்கொடுக்கிறார். நமது வெற்றியே அவர் நோக்கு. வரங்களைத் தவறாது நமக்கு அனுப்பிக்கொண்டேயிருந்து எல்லாப் போராட்டத்திலும் நம்முடன் வாசமாயிருப்பதை மெய்ப்பிக்கிறார் (சங் 68:18). நாம் அசையோம், ஈஸ்டரின் வல்லமையால்!

### *4. கிறிஸ்துவின் ஆவி மூலம்*

''வெள்ளம்போல் சத்துரு வரும்போது கர்த்தரின் ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்'' (ஏசா 59:19). இறையரசின் வல்லமை பரிசுத்த ஆவியானவரில் இருக்கிறது (மத் 12:28).

ஆவியின் கனியானது மாம்சத்தின் செயல்களை அதமாக்கும். ஆவியின் கனிக்கு ''விரோதமான'' சட்டமோ சத்துவமோ கிடையாது (கலா 5:19-23).

நம்மில் வாழும் ஆவியானவர் வைராக்கிய வாஞ்சையால் நம்மைப் பாதுகாக்கிறார் (யாக் 4:5). சமரசப் பேச்சுக்கே இடம் தரமாட்டார் (வச 4). பொல்லாங்கனோடு நாம் எவ்வித உடன்பாடும் கொள்ள அவர் சகிக்கமாட்டார். ஆவியான வர் நம்மைப் பற்றிப்பிடித்துக்கொண்டிருக்கிறார். ஆபிரகாமின் குமாரனுக்கு நம்மை மணமுடிக்கப் பரம வீட்டிற்கு அழைத்துச்செல்லும் வழியில் யாரும் நம்மைத் தொடவிடார்! பணி முடியும்வரை கூடவே இருப்பார். ''ஆவியும் மணவாட்டியும்!'' (வெளி 22:17, வேதத்தின் இறுதிப் பக்கம்!).

நமது உடலே ஆவியானவரின் ஆலயம். மாட்டேன் என்று இச்சையான சோதனைகளுக்கு உடனடி மறுப்பு தெரிவிக்கச் செய்வது இந்த அறிவே (1 கொரி 6:18,19). நமது உடல் பலவீனமுள்ளதுதான், சாவுக்குரியதுதான். ஆனால், எதிரியின் தாக்குதல்களுக்கு எதிர்த்து நிற்க ஆவியானவர் உயிரும் உரமும் தருகிறார் (ரோ 8:9-11). யுத்தம் வலுக்க வலுக்க தூயாவியெனும் எரிபொருளால் திரும்பத்திரும்ப நம்மை நிரப்பிக்கொள்ளவேண்டும்.

மனதின் பிரமாணத்திற்கும் அவயவங்களின் பிரமாணத்திற்கும் இடையிலான போராட்டத்தில் பவுல் போர்க் கைதியானான். ''யார் என்னை விடுதலையாக்குவார்?'' எனக் கதறினான். ஒன்றும், ஒருவரும் உதவ முடியவில்லை. இறுதியில் கிறிஸ்து இயேசுவின் ஜீவனுள்ள ஆவியானவர் அவனை விடுவித்தார்! (ரோ 7:23,24; 8:2). இந்த ''மகிமையான சுயாதீனத்தை'' எப்பொழுதும் பாடி மகிழ்ந்தான் (8:20). ''நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம்'' என வெற்றி முரசு கொட்டினான் (வச 37).

### *5. கிறிஸ்துவின் வசனம் மூலம்*

''திரும்பத் திரும்ப தேவ வசனத்தைத் தியானிக்காதவன் படுதோல்வியடைவது திண்ணம்; வலிமையும் அனுபவமும் மிகுந்த எதிரியோடு போராட ஆயுதமணியாது செல்வது எத்தமை மடமை?'' என்றார் பக்தன் மெட்கேல்ப் என்பவர்.

வசனமே வாள். அதுவே துப்பாக்கி. தலைச்சீரா, வார்க்கச்சை, காலணி யாவுமணிந்து, ஆனால் துப்பாக்கியில்லாது களம் செல்லும் படைவீரனைக் கற்பனை செய்து பாருங்கள்! பத்திரமாய்த் திரும்பி வருவதா வெற்றி? எதிரியை அடித்துத் துரத்தவேண்டாமா? விசுவாசியின் படைக்கலன்களில் தாக்குவதற்கான ஆயுதம், ''தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்'' ஒன்றே (எபே 6:10-17). எப்படித் தாக்கவேண்டுமென 2 கொரிந்தியர் 10:4-6 வரிசைப்படுத்துகிறது: அரண்களை அதமாக்குவோம்; தர்க்கங்களைத் தகர்ப்போம்; சிந்தனைகளைச் சிறைபிடிப்போம்; தவறுகளைத் தண்டிப்போம்!

பாக்கெட்டில் புதிய ஏற்பாடு, தலையணைக்கடியில் வேதம், இதெல்லாம் போதாது. வசனம் உள்ளில் வேரூன்றவேண்டும். முதல் நூற்றாண்டில் ஒரு சில வாலிபருக்கு இந்த ஆழ்ந்த அனுபவமிருந்தது. அவர்களுக்குத்தான் அப்போஸ்தலன் யோவான், ''வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருப்பதினாலும், தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதியிருக்கிறேன்'' எனக் குறிப்பிட்டான் (1 யோ 2:14). லூசிபரின் சதித்திட்டங்களையும், நரித்தந்திரங்களையும் ஒன்றுமில்லாதாக்குவது திருவசன நிறைவே.

திருவசனத்திலுள்ள தேவ தீர்மானங்களுக்கு முன்னர்தான் சத்துரு நிபந்தனையின்றி சரணடைவான். ''எழுதியிருக்கிறதே'' என்றதும் வேறு



வழியின்றி ஓட்டம்பிடிப்பான் (மத் 4:3-11). வசனத்தைத் தினமும் தியானிப்பதே ஆன்மீகத் தசைகளைத் தினமும் திடமாக்குவதாம். அது நமது மனதைக் கத்திபோல் கூர்மையாக்குகிறது. வசனம் உள்ளிலிருந்தால் வெற்றிதான் (சங் 119:11). இந்த இரகசியத்தை நாம் அறியவேண்டுமென தேவன் எவ்வளவாய் விரும்புகிறார்! ''ஆ, என் ஜனம் எனக்குச் செவி கொடுத்தால்... நலமாயிருக்கும்! நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்தி, என் கையை அவர்கள் சத்துருக்களுக்கு விரோதமாக திருப்புவேன்'' (81:13,14).

வசனமெனும் ஆயுதத்தை நாமும் களையக்கூடாது. சத்துருவும் அதைக் கைப்பற்ற முடியாது. ''தேவ வசனம் கட்டப்பட்டிருக்கவில்லை!'' (2 தீமோ 2:9ஆ). ஒவ்வொரு சூழலுக்கும் ஏற்ற புதிய கட்டளைகள், வாக்குகளைச் சேனைகளின் கர்த்தர் தந்துகொண்டிருப்பார். விசுவாசமானது அவ்வாக்குத்தத்தங்களை எடுத்துக்கொண்டு இராஜ்யங்களை ஜெயிக்கவும், சிங்கங்களின் வாய்களை அடைக்கவும், அக்கினியின் உக்கிரத்தை அவிக்கவும், பட்டயக்கருக்குக்குத் தப்பவும், அன்னிய சேனைகளை முறியடிக்கவும் யுத்தக் களத்திற்கு கம்பீர நடைபோட்டுச் செல்லும்! (எபி 11:33,34).

### *6. கிறிஸ்துவின் சபை மூலம்*

''என் சபையைக் கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை'' என்றார் இயேசு (மத் 16:18). சபையானது ஒரு ''மலை,'' அதை அசைக்க முடியாது. அது ஒரு ''நகர்,'' அதை அழிக்கமுடியாது. அதைச் சுற்றி ஆயிரம் பதினாயிரம் தூதருண்டு, அவர்களை அரட்ட முடியாது. அது பரலோகில் பேரெழுதப்பட்ட முதற்பேறானவர்களின் சர்வ சங்கம் (எபி 12:22,23).

பரிசுத்தவான்களின் ஐக்கியத்திலுள்ள பலத்தையும் பாதுகாப்பையும் குறிப்பிட்டு சாலொமோன், ''ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம்... ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம்'' என்றான் (பிர 4:9,12). பாலிய இச்சைகளுக்கு விலகி ''ஓடுவதைத்'' தொடர்ந்து, உத்தம விசுவாசிகளோடு ''ஒட்டிக்கொள்ள'' வேண்டுமென வாலிபன் தீமோத்தேயுவுக்குப் பவுல் அறிவுறுத்தினான் (2 தீமோ 2:22). கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையிலுள்ள உடன் அங்கங்களின் அனுதின அறிவுரைகளால் வஞ்சகனின் வலைகளுக்குத் தப்பலாம் (எபி 3:13).

நாசமோசமோ, பட்டயமோ கிறிஸ்துவின் அன்புக்கு மிஞ்சியதல்ல (ரோ 8:35). பரிசுத்தர் கூட்டத்தின் நடுவில்தான் இவ்வன்பின் நான்கு பரிமாணங்களையும் நன்கு புரிய முடியும் (எபே 3:18). சபையின் அடித்தளத்திற்கு நிகரில்லை. திரித்துவ தேவன் சபையில் குடியிருக்கிறார் (எபே 2:19-22). ‘‘தேவன் நடுவிலிருக்கிறார், அது அசையாது’’ (சங் 46:5).

பிற விசுவாசிகளிடமிருந்து தன்னைப் பிரித்துக்கொள்வதைப் போன்று அபாயமானது வேறில்லை. ஆனாலும் பலர் ‘‘நானும்-என்-தேவனும்’’ எனும் தத்துவத்தை மேற்கொண்டு, கர்ச்சிக்கும் சிங்கத்திற்குப் பலியாகியுள்ளனர். தனித்துப் போக மனதில் எழும் எண்ணங்களுக்கு எச்சரிக்கை!

உலகெங்குமுள்ள மீட்கப்பட்டோரின் கூட்டணிப்படைதான் சபையாகும். மக்களை இருளின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க அது யுத்தக்களத்தில் குதித்துள்ளது. பிசாசு அவ்வளவு எளிதில் மக்களைப் போகவிடமாட்டான். ஆனால் நமது பெரும்படைகளுக்குமுன் தாக்குப்பிடிக்க முடியாது கரம் தூக்கிவிடுவான் (2 இரா 6:16). நமது ‘‘குதிரைகளும் அக்கினி இரதங்களும்’’ அவனைக் குழப்பிவிடும்! நமது சேனைத்தலைவர் தோல்வியறியார்!

*ஜெயக் கிறிஸ்து முன் செல்கிறார்,*
*ஜெயமாக நடத்திடுவார்,*
*ஜெயக் கீதங்கள் நாம் பாடியே*
*ஜெயக் கொடியும் ஏற்றிடுவோம்;*
*ஜெயம் அல்லேலூயா அவர் நாமத்திற்கே!*

### *7. கிறிஸ்துவின் வருகை மூலம்*

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையே முடிவான வெற்றி! சத்துரு சங்காரமாவான்! அதுவரை போர் நிறுத்தம் இல்லை.

‘‘பின்பு பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது. அதின் மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமும் உள்ளவர் எனப்பட்டார்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம் பண்ணுகிறார்... பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரம் தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகள் மேல் ஏறி, அவருக்குப் பின்சென்றார்கள்... அவரது வாயிலிருந்து கூர்மையான பட்டயம் புறப்படுகிறது... ராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர் எனும் நாமம்



அவரது வஸ்திரத்தின் மேலும் அவரது தொடையின் மேலும் எழுதப்பட்டிருந்தது’’ (வெளி 19:11-16).

*‘‘உன்னதமானவரின் பரிசுத்தவான்கள் இராஜரீகத்தைப் பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் இராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்!’’ (தானி 7:18).*

# 8
# வரங்களை அறிந்துகொள்ளுங்கள்!

கிறிஸ்துவின் ஆளுகைக்கும், வேதத்தின் அதிகாரத்திற்கும் தங்களை அர்ப்பணித்து, கிறிஸ்துவின் மாபெரும் நற்செய்திக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வாழும் விசுவாசிகளைப் பெந்தெகொஸ்தே அனுபவ விசுவாசிகளென்றும், பெந்தெகொஸ்தே அனுபவமில்லா விசுவாசிகளென்றும் இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஆவியின் அபிஷேகம், வரங்களின் வெளிப்பாடு ஆகியவைபற்றிய அபிப்பிராய அல்லது அனுபவ வேறுபாடுகளே இதற்குக் காரணம். முதற்குழுவில் சில காரியங்கள் வரம்பை மீறிவிடுகின்றன என எண்ணும் இரண்டாம் குழுவினர் அதிக எச்சரிப்பாய் ஒதுங்கி நிற்பர். உலகில் கிறிஸ்துவின் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால் இரு குழுவினரும் ஒருவரையொருவர் நேசித்து, பாராட்டி, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொண்டு வளரவேண்டுமெனத் திட்டமாய் நம்புகிறேன்.

நான் உயர் ஆங்கிலிக்கன் பாரம்பரியத்தில் பிறந்து வளர்க்கப்பட்டேன். 1962ஆம் ஆண்டு சில கல்லூரி மாணவருடன் ஜெபிக்கையில் ஆவியின் அபிஷேகம் பெற்றேன். கடந்த ஆண்டுகளிலெல்லாம் பெந்தெகொஸ்தே சபைகளிலும், பிற சபைகளிலும் பிரசங்கித்தும், இரு ஓரங்களிலுமுள்ள விசுவாசிகளோடு ஐக்கியப்பட்டும் வந்திருக்கிறேன். இந்தச் சூழலில் ''ஆவியின் வரங்கள்'' பற்றி 1 கொரிந்தியர் 12,13,14ஆம் அத்தியாயங்களிலிருந்து நான் கற்றவற்றை இங்கு வரிசைப்படுத்தியுள்ளேன்.



1. தேவப் பிள்ளைகள் எவரும் ஆவிக்குரிய வரங்களைக் குறித்து அறியாமலிருப்பது பேரிழப்பு (12:1).
2. தேவ மக்கள் இயேசுவைக் கர்த்தரென்று தொழுதுகொள்ள வழி நடத்துவதே தேவ ஆவியானவரின் பிரதான ஊழியமாகும் (12:2,3).
3. தேவன் தம் மக்களிடத்திலும், தேவ மக்கள் தேவனிடத்திலும் பேச்சுத் தொடர்புகொள்ள பரிசுத்த ஆவியானவர் ஏதுவாயிருக்கிறார் (ஊமையான விக்கிரகங்கள் மாறானவை) (12:2,3).
4. பிதாவாகிய தேவன் ஊழியங்களைக் (அல்லது ஆளுகைகளைக்) கிறிஸ்துவின் மூலமாகவும், வரங்களை ஆவியானவர் மூலமாகவும் செயல்படுத்துகிறார். ஊழியங்கள் அல்லது ஆளுகைகள் தேவனது அதிகாரத்தையும், வரங்கள் அவரது வல்லமையையும் வெளிப்படுத்துகின்றன (12:4-6).
5. வரங்கள் ஏதுக்களாகும்; ஊழியங்கள் மனிதராவர்; கிரியைகள் செயல்முறைகள் ஆகும். ஏதுக்களும், மனிதரும், செயல்முறைகளும் தங்களுக்குள்ளும் ஒன்றோடொன்றும், தேவத்துவத்தின் திரித்துவ ஒருமைப்பாட்டின் அழகிய பாணியிலேயே, வேற்றுமையில் ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றன (12:4-6).
6. ஆவியானவர் தமது வரங்களை ஒவ்வொருவர் மூலமாகவும் வெளிப்படுத்துகிறார் (12:7,11).
7. ஒவ்வொரு விசுவாசிக்கும் பிற விசுவாசிகளுக்கு ஊழியம் செய்யும் கடமையுண்டு (12:7).
8. ஆவியின் வரங்களே ஆவியின் அனுக்கிரகம் அல்லது வெளிப்பாடு ஆகும். அதாவது வரங்களின் மூலமாக ஆவியானவர் கேட்கக்கூடிய, காணக்கூடிய, உணரக்கூடியவராகிறார் (12:7-10).
9. விசுவாச வரத்தை அனைத்து வரங்களையும் இயக்கும் அடிப்படை வரமாகப் பொதுவாக்கினால், மற்ற எட்டு வரங்களும் நான்கு ஜோடிகளாக அமையும். அவையாவன: (அ) ஞானத்தை போதிக்கும் வசனமும், அறிவை உணர்த்தும் வசனமும்; (ஆ) குணமாக்கும் வரங்களும், அற்புதங்களைச் செய்யும் சக்தியும்; (இ) தீர்க்கதரிசனமும் ஆவிகளைப் பகுத்தறிதலும்; (ஈ) பற்பல பாஷைகளைப் பேசுதலும், வியாக்கியானம் பண்ணுதலும். (இவை வேதத்தில் கொடுக்கப்பட்டுள்ள வரிசையிலேயே உள்ளன) (12:8-10).

10. ''என்ன'' என்பதற்கு அறிவும், ''எப்படி'' என்பதற்கு ஞானமும் பதில் தரும் (மத் 22:15-22; அப் 15:25-28). மனிதருக்குள் அதிகமாக விரும் பப்படும் அற்புதங்கள் தெய்வீக சுகங்களே (அப் 4:30). தீர்க்கதரிசனம் சொல்லுவதற்கு ஊடுருவிப் பார்க்கும் பகுத்தறிதல் அடிப்படையான தாகும் (1 கொரி 14:24,25,29,30). வியாக்கியானம் இல்லாது சபையில் பேசப்படும் பற்பல பாஷைகள் பயனற்றவை (14:27,28).

11. 1 கொரிந்தியர் 12:8-11இல் நான்கு முறை வலியுறுத்தப்படுவது ''அதே ஆவியானவர்'' என்பது. இதன் படிப்பினை: எல்லா வரங்களின் தன்மை அல்லது சாரம் ஒன்றே. எனவே மாம்சீகப் போட்டி மடமை.

12. தேவையான வரத்தையும், அதை வெளிப்படுத்தவேண்டிய நபரை யும் ஆவியானவர் தமது சித்தம் அல்லது விருப்பப்படி தெரிந்தெடுக் கிறார் (12:11). உற்சாகமும் கீழ்ப்படிதலுமுள்ளவனே பொதுவாகத் தெரிந்தெடுக்கப்படுகிறான் (14:12,37). அந்தந்த சூழ்நிலையின் குறிப்பான தேவையானது தகுதியான வரத்தைத் தீர்மானிக்கிறது (14:19,26).

13. உடலின் அவயவங்கள் ஒன்றுக்கொன்று வேறுபட்டிருந்தாலும் இணைந்து செயல்படுவது போல, ஆவியின் வரங்களும் சக சார்புத் தன்மையில், அதாவது ஒன்றையொன்று சார்ந்து, ஒருவர் அல்லது பலர் மூலமாக வெளிப்படும். ஒரு வரத்திற்கு அடுத்த வரம் தேவை (10வது குறிப்பைக் கவனிக்க) (12:12,15-21).

14. இரு தேற்றரவாளரின் ஊழியங்களும் ஒன்றையொன்று சார்ந்து நிறைவாக்குபவை. இரண்டாம் தேற்றரவாளன் (பரிசுத்த ஆவியா னவர்) நம்மை முதலாம் தேற்றரவாளனுக்குள் (இயேசு கிறிஸ்து) ஞானஸ்நானம் பண்ணுகிறார். அடுத்து, முதலாமவர் இரண்டாமவ ருக்குள் ஸ்நானப்படுத்துகிறார். முதற்செயல் (கிறிஸ்துவுக்குள்) நமக்கு அதிகாரத்தையும், இரண்டாம் செயல் (ஆவியானவர் மூலம்) நமக்கு வல்லமையையும் அருளுகிறது (12:13).

15. தேவ மக்களின் ஒருமனப்பாட்டிற்குத் தடையானவற்றையெல்லாம் ஆவியானவர் தகர்க்கிறார் (12:13).

16. எல்லா வரங்களும் ஒருங்கே விருத்தியடைய நாம் முயற்சிக்கவேண் டும். சில வரங்களில் தனிக் கவனமும் தேர்ச்சியும் அவசியம்தான்; ஆனால் மற்றவற்றை விட்டுவிட்டு அப்படிச் செய்யக்கூடாது (12:17,19).



17. ''பலவீனமுள்ளவைகளாய்'' அல்லது ''கனவீனமாய்க்'' காணப்படு கிற வரங்களை அற்பமாய் எண்ணவோ அசட்டை செய்யவோ கூடாது (12:21-24).

18. குறிப்பிட்ட ஒரு சில வரங்களை மட்டும் அளவுக்குமீறி முக்கியப் படுத்துவது நிச்சயமாய்ப் பிரிவினைகளை உண்டாக்கியே தீரும் (12:25).

19. ஒருவருக்கொருவர் கவனிப்பும், ஊக்குவிப்பும் காணப்பட்டால் வரங்கள் விருத்தியடையும் (12:25-27). எடுத்துக்காட்டாக, தீர்க்கதரி சனம் சொல்லுகிறவன் பற்பல பாஷைகளைப் பேசுகிறவனையும், அல்லது, ஞானவரத்தை வெளிப்படுத்துகிறவன் பகுத்தறிகிறவனை யும், இப்படியாக ஊக்குவிக்கவேண்டும்.

20. ஒரு நபர் ஏதாவதொரு வரத்தை வெளிப்படுத்துகையில் அதில் குறைவோ குற்றமோ இருப்பின், நியாயந்தீர்த்துவிட அல்ல, ஆனால் கரிசனையோடு உதவி செய்ய பிற அங்கத்தினர்கள் அவரைச் சந் தித்துப் பேசவேண்டும். அப்படியே, ஒருவன் ஒரு வரத்தை வெளிப் படுத்தும்போது, மகிமையாய் வெற்றி காணும்போது, மற்ற அங்கத் தினர்கள் எவ்விதத்திலும் பொறாமைக்கு இடங்கொடாமல் அவ னோடு களிகூரவேண்டும் (12:26).

21. சபைகளுக்கிடையேயுள்ள ஊழியத்திற்கும், வெளியுலக ஊழியத் திற்கும், உள்ளூர்ச் சபைக்குள் உள்ள ஊழியத்திற்கும் தேவன் சபை யில் ஏதுக்களைத் தந்துள்ளார். நமக்கு மூவகைக் கடமைகளுண்டு: (அ) நமது சொந்த உள்ளூர்ச் சபையின் அங்கத்தினருக்கு ஊழியம்; (ஆ) மற்ற சபைகளின் அங்கத்தினருக்கு ஊழியம்; (இ)சபைக்கு வெளியேயிருக்கும் திரளுக்கு ஊழியம். இக்கடமை அல்லது பொறுப்பின் அளவும் தன்மையும் எல்லாருக்கும் ஒன்றுபோலிராது (12:28-30).

22. எல்லாரும் அப்போஸ்தலரல்ல, ஆனால் எல்லாரும் அப்போஸ்த லரைத் தாங்கவேண்டும்; எல்லாரும் குணமாக்கும் வரங்களு டையவரல்ல, ஆனால் எல்லாரும் இத்தகைய நற்செய்தி ஊழியரை ஊக்குவிக்கவேண்டும்; எல்லாரும் சபையில் ஆளுகிறவர்களல்ல, ஆனால் எல்லாரும் இவ்விதத் தலைவரோடு ஒத்துழைக்கவேண்டும் (12:26-30).

23. தேவனிடம் இரண்டாந்தர அல்லது மூன்றாந்தர வரங்கள் கிடையா. ''முக்கியமான'' வரங்கள் என்பது அந்தந்த சூழ்நிலைக்கு ''மிகப் பொருத்தமான'' வரங்களைக் குறிக்கும்.

24. ஆவிக்குரிய வரங்களைச் செயல்படுத்துவதில் அடிப்படை நோக்கம் அன்பாக இருக்கவேண்டும். இங்கு ''அன்பு'' என்பது பிறருக்குப் பணி செய்யும் கரிசனையாகும். இதுவே ''அதிக மேன்மையான வழி'' என்பது (12:31; 14:6,12).

25. பிறருக்குப் பணி அல்லது ஊழியம் செய்து அவர்களுக்கு பக்தி விருத்தி உண்டாக்கும் உண்மையான வாஞ்சையின்றி பற்பல பாஷைகள், தீர்க்கதரிசனம், ஞானம், அறிவு, விசுவாசம் போன்ற ஆவிக்குரிய வரங்களை வெளிப்படுத்துவது சாத்தியம். தேவன் நியமித்துள்ள பூரண பலனை வரங்களினால் பெறவேண்டுமானால் சுய நாட்டத்தை அறவே ஒழிக்கவேண்டும் (13:1,2; 14:12).

26. அன்னதானம் பண்ணுதல், இரத்தசாட்சியாய் மரித்தல் போன்ற தியாகச் செயல்களையும், மக்களுக்குப் பணி செய்யும் அல்லது தேவனை மகிமைப்படுத்தும் நோக்கின்றி, தற்புகழுக்காக மேற்கொள்ள முடியும். ஆனால் இப்படிப்பட்டவர்களுக்குத் தேவன் பலனளிப்பதில்லை. இப்படி, ஆவிக்குரிய வரங்கள் மட்டுமல்ல, சமூக நலச் சேவைகளும் தவறான நோக்குடையவையாய் இருக்க முடியும் (13:13).

27. வரங்களை அன்புடன்—அதாவது பிறருக்குத் தொண்டு செய்யும் கரிசனையுடன்—செயல்படுத்தும்பொழுது, நாம் சாந்தமாக, தயவாக, பாராட்டுகிறவர்களாக, கண்ணியமாக, சுயநலமின்றி, பொறுமையாக, சத்தியத்தை நேசிக்கிறவர்களாக, ஆத்திரமின்றி, நிதானமாக நடந்துகொள்ளுவோம் (13:4-6).

28. சகிப்புத்தன்மை, சந்தேகமின்மை எனும் நிலத்தில்தான் ஆவியின் வரங்கள் செழித்தோங்கும் (13:7).

29. தீர்க்கதரிசனம், பற்பல பாஷைகள் பேசுதல், அறிவு ஆகியவை தற்காலிகமானவை, அல்லது இகத்துக்கடுத்தவை. அதாவது, பரலோகத்தில் இவை நமக்குத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக, பரலோகில் என்ன தீர்க்கதரிசனம் உரைப்போம்? யாவும் நிறைவேறியிருக்குமே! ஆனால் அன்போ நித்தியமானது. பரலோகில் ஒன்றித்து வாழ எல்லா விசுவாசிகளுக்கும் அது தேவைப்படும்! (13:8).



30. புதிய வானம், புதிய பூமி எனும் நிறைவான நிலை வரும்போது நமது தற்போதைய குறைந்த அறிவும், நாம் குறைவாய்த் தீர்க்கதரிசனம் சொல்லுதலும் ஒழிந்துபோகும். எடுத்துக்காட்டுகள்: (அ) குழந்தைப் பருவம்—புருஷத்துவம்; (ஆ) கண்ணாடியில் நிழல்—முகமுகப் பார்வை (13:9-12).

31. பரிசுத்த ஆவியானவரில் நாம் மூழ்கியிருக்கும்போது, அவர் நம்மை விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவற்றில் கட்டியெழுப்புகிறார். இன்றைக்கான விசுவாசம், நாளைக்கான நம்பிக்கை, என்றைக்குமான அன்பு! (13:13; யூதா 19-21).

32. சபையில் ஆவியின் வரங்களை வெளிப்படுத்த வாஞ்சிக்கும்போது, அன்பினால் உந்தப்படுவோமானால், அன்னிய பாஷையில் பேசுவதைவிடத் தீர்க்கதரிசனம் சொல்லவே நாடுவோம். ஏனெனில், தீர்க்கதரிசனம் சொல்லுதல் சபைக்குப் பக்திவிருத்தியுண்டாக்கும்; அந்நிய பாஷையோ அர்த்தஞ்சொல்லப்படா விட்டால் பேசுபவருக்கு மட்டும் பக்திவிருத்தியுண்டாக்கும் (14:1,4,5).

33. அந்நிய பாஷை தேவனை நோக்கியதாகும். எனவே அது ஜெபத்திலும் துதியிலும் சேரும்; தீர்க்கதரிசனமோ சபையாரை நோக்கியதால் பிரசங்கத்தோடும் அல்லது புத்தி சொல்லுதலோடும் சேர்ந்து வரலாம் (14:2,3).

34. அந்நிய பாஷையானது ஒருவரும் அறியமுடியாத இரகசியங்களை உள்ளடக்கியுள்ளது; தீர்க்கதரிசனமோ பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் நிறைந்த நேரடிச் செய்திகளை மனிதருக்குக் கொண்டு வருகிறது (14:2,3).

35. அந்நிய பாஷை சுய பக்திவிருத்திக்கு மிக ஆசீர்வாதமான ஏது; எனவே அது எல்லாருக்கும் தேவை. தீர்க்கதரிசனமானது சபைக்குப் பெரிதும் பக்திவிருத்தியளிப்பதால் ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யும்படி யாவரும் அதை நாடவேண்டும் (14:4,5,31).

36. அர்த்தம் சொல்லுதலோடுள்ள அந்நிய பாஷையானது சபைக்குப் பக்திவிருத்தி உண்டுபண்ணுவதில் கிட்டத்தட்ட தீர்க்கதரிசனத்தைப் போலமைகிறது (14:5).

37. சபையினருக்குத் தேவ ஊழியர் ஆசீர்வாதமாயிருக்கவேண்டு மானால், அவர்கள் திட்டவட்டமான வெளிப்பாடு, அறிவு, தீர்க்க தரிசனம் அல்லது போதக வார்த்தைகளுடன் சபையாருக்கு ஊழியம் செய்யவேண்டும். 1 கொரிந்தியர் 12:28இல் சொல்லப்பட்டுள்ள மூன்று ஊழியருக்கு முறையே இவை அடிப்படை வரங்களாகும். ஞானத்தாலும் அறிவாலும் அறியப்படுபவர் அப்போஸ்தலர்; தீர்க்க தரிசிகள் தீர்க்கதரிசனம் சொல்லுவர்; போதகர் போதிப்பர். இம் மூவரும் பொதுவாக சபைகளுக்கிடையே பணி செய்யும் சலன ஊழியராவர். (''நான் உங்களிடத்தில் வந்து'' எனும் பவுலின் வார்த்தைகளைக் கவனிக்க) (14:6).

38. அர்த்தம் சொல்லுதல் இல்லாத அந்நிய பாஷைகள் வித்தியாசம் காட்டாவிட்டால் மக்களைக் குழப்பும் புல்லாங்குழல், சுரமண்டலம், எக்காளம் போன்றவையாகும். படைக்கா, பந்திக்கா? எதற்கு ஆயத்தப் படவேண்டுமெனத் தெரியாமல் மக்கள் திகைப்பர்! (14:7-11).

39. தனிமையில் ஜெபித்தலையும், ஸ்தோத்திரம் செய்தலையும், துதித்தலையும், தொழுதலையும் அந்நிய பாஷை மேம்படுத்தும் (14:14-18).

40. அர்த்தம் சொல்லப்படுமானால் அந்நிய பாஷையில் ஜெபித்தலும் பாடுதலும் சபையில் அனுமதிக்கப்படும். அந்நிய பாஷையில் பேசுகிறவர் அல்லது கேட்டுக்கொண்டிருக்கும் ஒருவர் அர்த்தம் சொல்லலாம். அர்த்தம் சொல்லுதலுக்காக ஜெபிக்கவேண்டும் (14:13,15,27,28).

41. ஏசாயாவின் தீர்க்கதரிசனத்தில் முன்னுரைக்கப்பட்டதும் (28: 7-14), பெந்தெகொஸ்தே நாளன்று நடந்ததும்போல, சத்தியத்தை எதிர்க்கும் அவிசுவாசிகளுக்கு எச்சரிப்பின் அடையாளமாக தேவன் சில வேளை களில் அந்நிய பாஷைகளைப் பயன்படுத்துவார். தீர்க்கதரிசனம் உரைத்தலோ முக்கியமாக விசுவாசிகளுக்கே பயனளிக்கிறது. தீர்க்க தரிசனம் உரைத்தலால் வெளிப்படையாய் உணரப்படும் தேவப் பிரசன்னத்தால் விசுவாசிகள் ஓர் அறையில் பக்திவிருத்தியடைந்து கொண்டிருக்கையில் இரட்சிப்பையோ ஆவியின் வரங்களையோ அறியாத ஒருவன் அறைக்குள் நுழைய நேரிட்டால், அவன் மெய் சிலிர்க்கும் தேவப் பிரசன்னத்தால் தாக்கப்பட்டு அவர்முன் அறிக்கையோடு நொறுங்கி விழுந்து அவரைத் தொழுதுகொள்ளு வான் (14:22-25).



42. புதிய ஏற்பாட்டுச் சபைக் கூடுகையில், அங்கத்தினர் ஒவ்வொரு வரும் சபையின் பக்திவிருத்திக்காக, ஒரு சங்கீதம், போதனை, அந்நிய பாஷை, வெளிப்பாடு, அல்லது வியாக்கியானம் மூலம் உற்சாகமாய்ப் பங்கேற்க வேண்டும் (14:26).

43. சபை கூடிவரும்போது ஒவ்வொரு அங்கத்தினரும் தீவிர ஈடுபாடு கொள்ளும்படி சாதகச் சிந்தையோடு தேவ ஊழியர் சபையினரை ஊக்குவிக்கவேண்டும். பாதகச் சிந்தையும், எதிர்மறை வார்த்தை களும் மக்களைக் கொல்லும் (14:26,5,31,39).

44. சபை கூடுகையில் ஆவியின் வரங்கள் தகுதியான சமநிலையில் செயல்படவேண்டும். எடுத்துக்காட்டாக, நேரம் முழுவதும் அந்நிய பாஷையிலோ அல்லது தீர்க்கதரிசனத்திலோ செலவழித்து விடக்கூடாது. இருவர் அல்லது மூவர் பற்பல பாஷைகளில் பேசலாம்; இருவர் அல்லது மூவர் தீர்க்கதரிசனம் சொல்லலாம். பாஷைகள் வியாக்கியானம் செய்யப்படவேண்டும்; தீர்க்கதரிசனம் நிதானிக் கப்படவேண்டும் (14:27-29).

45. ஆவியின் வரங்களது பூரண ஆசீர்வாதங்களைப் பெற்றனுபவிக்க குழுச்சிந்தை அத்தியாவசியம். எடுத்துக்காட்டாக, அடுத்த விசு வாசியும் பகிர்ந்துகொள்ள ஏதாவது இருப்பதாக நான் உணருவே னானால், எனக்குத் தோன்றும் எல்லா ஏவுதல்களையும் முழு மூச்சாய்ப் பேசித் தீர்த்துவிடவேண்டுமென்று நான் எண்ணக்கூடாது. இருக்கும் நேரத்தில் எவ்வளவு அதிகமான பேருக்குச் செயல்பட வாய்ப்பு கொடுக்கமுடியுமோ அவ்வளவு என்பதே சட்டமாயிருக்க வேண்டும் (14:29-31).

46. ஆவியின் வரங்கள் செயல்படுவதின் இறுதி விளைவு கற்றலும் தேறுதலுமே (Learning and Comfort). அதாவது, அறிவும் ஆறு தலுமே. கிறிஸ்து இயேசு சத்தியமாகவும் தேவனது முதல் தேற்ற வாளனாகவும் வந்தார்; பரிசுத்த ஆவியானவர் சத்திய ஆவியாகவும், இரண்டாம் தேற்றரவாளனாகவும் அனுப்பப்பட்டார் (14:31; யோ 14:16).

47. ஆவியின் வரங்களின் வெளிப்பாடு ஒருபோதும் மனிதக் கட்டுப் பாட்டுக்கு மீறியதல்ல. வரங்கள் விருத்தியடைய நமது ஒத்துழைப்பு எப்படித் தேவையோ, அப்படியே வரங்களின் ஒழுங்கான கிரமமான

செயல்பாட்டிற்கும் வேத வசன ஒழுங்குகளின்படியான நமது கட்டுப்பாடு அவசியம் (14:32-40).

48. வரங்கள் இயற்கைக்கப்பாற்பட்டு உன்னத ரீதியில் செயல்பட்டாலும், நாம் தேவ வழிநடத்துதலுக்கு முழுவதும் இசைந்து அவரோடு இணங்கிச்செல்வோமானால் எவ்விதக் குழப்பமும் ஏற்படாது (14:33).

49. வரங்களின் செயல்பாட்டில் சபையினரைத் தெய்வீக ஒழுங்கின்படி, தேவன் தங்களுக்குத் தரும் வழிநடத்துதலால், கிரமமாய் அவர்களை முதிர்ச்சிக்கு நடத்திச்செல்லும் பெரும் பொறுப்பு சபைத் தலைவர்களுக்குண்டு (14:37,20).

50. ஆவிக்குரிய வரங்களைக் குறித்த போதனைகள் தங்களுக்கு வேண்டாமென்று தள்ளி அறியாதிருக்கும் சிலருண்டு. நாம் அவர்களுக்கு ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் அவர்கள் சபையில் எவ்விதத் தலைமைக்கும் பொறுப்புக்கும் வருவார்களானால் மிகுந்த சேதம் விளைவிப்பர் (12:1; 14:37,38).



# 9
# வரங்களை அப்பியாசியுங்கள்!

உலகெங்கும் ஆன்மீக வரங்களில் காணப்படும் புத்தார்வம் தேவன் தமது சபையை ஆதிநிலைக்கு விரைவாய் எடுத்துச்செல்லுகிறார் என்பதை நிரூபிக்கிறது. பின்மாரி வாக்குகளெல்லாம் நிறைவேறிவருகின்றன (யோவேல் 2:23-29). பூவுலகில் அவரது பணியை முடிக்க தேவன் தரும் ஏதுக்களே வரங்களாகும். நாம் அவற்றைப் பயன் படுத்தாவிடில் அவரது திட்டம் பாதிக்கப்படும்.

### *வரங்களின் பட்டியல்கள்*

புதிய ஏற்பாட்டில் குறைந்தது ஆறு இடங்களில் வரங்களின் பட்டியல் உண்டு.

அ) மாற்கு 16:17,18, ''விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினால் பிசாசுகளைத் துரத்துவார்கள்; நவமான மொழிகளைப் பேசுவார்கள்; சர்ப்பங்களை எடுப்பார்கள்; சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது; வியாதியுள்ளோர்மீது கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சுகமாவார்கள்.''

ஆ) ரோமர் 12:6-8, ''நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியால், நம்மில் தீர்க்கதரிசனம் சொல்லுகிற வரமுடையவன் விசுவாசப்பிரமாணத்திற்கேற்றதாகச் சொல்லட்டும். ஊழியம் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன்

போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கட்டும்; பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கட்டும்; தலைவனானவன் கவனத்தோடிருக்கட்டும்; இரக்கம் செய்கிறவன் உற்சாகத்துடன் செய்யட்டும்.''

இ) 1 கொரிந்தியர் 12:7-10, ''ஆவியின் வெளிப்பாடு அனைவருடைய பயனுக்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினால் ஞானத்தை போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவி யினாலேயே குணமாக்கும் வரங்களும், வேறொருவனுக்கு அற்புதங் களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்கு பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்கு பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.''

ஈ) 1 கொரிந்தியர் 12:28, ''தேவனானவர் சபையில் முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங் களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளை யும் ஏற்படுத்தினார்.''

உ) எபேசியர் 4:7-11, ''கிறிஸ்துவின் ஈவின் அளவிற்கேற்ப நம்மில் ஒவ்வொருவனுக்கும் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது... அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவி சேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.''

ஊ) ''அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர் போல, ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள். ஒருவன் போதித்தால் தேவ வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவி செய்தால் தேவன் தந்தருளும் பலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக'' (1 பேது 4:10,11).

இந்த ஆறு வேதப் பகுதிகளையும் கவனித்துப் பார்க்கும்போது சில குறிப்புகள் தெளிவாகின்றன—



### *1. ஒவ்வொருவருக்கும் வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன!*

வரம் பெற்றோர் என்று விசுவாசிகளுக்குள் சிறப்புக்கூட்டம் ஒன் றில்லை. தேவப் பிள்ளைகள் அனைவரும் வரம் பெற்றோரே. வரமில்லாத விசுவாசியே கிடையாது.

சபையென்பது கிறிஸ்துவின் உடலாகும். ஒவ்வொரு விசுவாசியும் அதில் ஓர் அங்கம் (1 கொரி 12:27). இந்த அங்கங்களை மனிதவுடலின் உறுப்புகளுக்கு வேதம் ஒப்பிடுகிறது (1 கொரி 12:14-27). ஒவ்வொரு உறுப்புக்கும் ஒரு குறிப்பிட்ட திறன் உண்டு. கண்களுக்குப் பார்க்கும் வரமுண்டு; காதுகளுக்குக் கேட்கும் வரமுண்டு; நாக்குக்கு ருசிக்கும் மற்றும் பேசும் வரமுண்டு; மூக்குக்கு முகரும் வரமுண்டு; தோலுக்குத் தொடுதலை உணரும் வரம். அப்படியே உள்ளுருப்புகளும் குறிப்பிட்ட வேலைகளைச் செய்யும் வரம் பெற்றுள்ளன. இருதயத்திற்கு இரத்தத்தை எங்கும் சுற்றும் வரம்; நுரையீரலுக்குச் சுவாசிக்கும் வரம்; ஈரலுக்கு நச்சு அகற்றும் வரம்; இரைப்பைக்குச் செரிக்கும் வரம்; இப்படி ஏராளம்.

தாலந்துகளின உவமையில் ஒவ்வொரு வேலைக்காரனுக்கும் ஒன்று அல்லது கூடுதல் தாலந்துகள் கொடுக்கப்பட்டதைக் காண்கிறோம் (மத் 25:14,15). ஒன்றும் பெறாதவன் இல்லை!

### *2. வரங்களின் வகையும் அளவும் வேறுபடும்!*

''விசுவாச அளவு'' என்பது நபருக்கு நபர் வேறுபடும் (ரோ 12:3). ''அருளப்பட்ட கிருபைக்கேற்ப'' வரங்கள் இருக்கும் (ரோ 12:6; 1 பேது 4:11). ஆவியானவர் ஒவ்வொருவனுக்கும் ''பகிர்ந்து கொடுக்கிறார்'' (1 கொரி 12:11). ஒரே நபர் மீது அத்தனையையும் கொட்டிவிடுவதில்லை. அவர் பகிர்ந்துகொடுக்கிறார்! ''கிறிஸ்துவின் ஈவின் அளவுக்குத்தக்கதாக'' நம்மில் ஒவ்வொருவருக்கும் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது (எபே 4:7).

தாலந்துகளின் உவமையை மறுபடியும் கவனியுங்கள். ஒருவனுக்கு ஐந்து தாலந்தும், அடுத்தவனுக்கு இரண்டும், மற்றவனுக்கு ஒன்றும் கொடுக்கப்பட்டன. அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, அதாவது, ஒவ்வொருவனும் எவ்வளவு செய்வானென்று எஜமானுக்குத் தெரிந்தபடி, தாலந்துகள் பகிர்ந்தளிக்கப்பட்டன (மத் 25:15). வேலையின்மையு மில்லை, வேலைக் குறைவுமில்லை.

### *3. வரங்கள் ஏற்கனவே கொடுக்கப்பட்டாயிற்று!*

''தேவன் பகிர்ந்த...'' (ரோ 12:3). ''நாம் வெவ்வேறான வரங்கள் உள்ளவர்களானபடியினாலே...'' (ரோ 12:6). ''ஆவியின் அனுக்கிரகம் அளிக்கப்பட்டிருக்கிறது'' (1 கொரி 12:7). ''தேவனானவர் சபையிலே... ஏற்படுத்தினார்'' (1 கொரி 12:28). ''நம்மில் அவனவனுக்குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது'' (எபே 4:7). ''அவனவன் பெற்ற வரத்தின்படியே'' (1 பேது 4:10).

கிறிஸ்துவை விசுவாசித்து பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளும்போது, குறிப்பிட்ட பணிகளோடும் தகுந்த வரங்களோடும் நாம் கிறிஸ்துவின் உடலாகிய சபையில் வைக்கப்படுகிறோம் (1 கொரி 12:18). அவ்வரங்களைப் பயன்படுத்தி, பணிகளை நிறைவேற்றுவது நமது கடமை (ரோ12:6). நம்மில் ஒவ்வொருவருக்குள்ளும் பயன்படுத்தப்படாது உறங்கிக்கிடப்பது ஏராளம் என்பது எத்தனை துக்கம்! நமக்குள் இருக்கும் ''தேவ வரத்தை அனல்மூட்டி எழுப்பி''விடுவோம் (2 தீமோ 1:6,7). பவுலோடு அவ்வளவு நெருங்கியிருந்த தீமோத்தேயுவுக்கும் இந்த நினைவூட்டுதல் தேவையாயிருந்தது!

வரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவது நமது விருப்பத்தின்படியல்ல, தேவ சித்தத்தின்படியே. ''தமது சித்தத்தின்படியே பகிர்ந்துகொடுக்கிறார்.'' ''தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்'' (1 கொரி 12:11,18). இல்லாததை நாடுவதல்ல, இருப்பதை வெளிப்படுத்தவேண்டுமென்பதே ஆன்மீக வரங்களை ''விரும்புங்கள்'' என்பதின் பொருளாகும் (1 கொரி 14:1). அதே வசனத்தில் ''அன்பை நாடுங்கள்'' என்று பவுல் எழுதினான். இதற்குப் பொருள் அன்பைத் தேடுங்கள் என்பதல்ல, அன்பைக் காட்டுங்கள் என்பதே!

குறிப்பான பொறுப்புகளில் தேவன் நம்மை நியமிக்கையில் அதற்குத் தேவையான வரங்களையும் கூடவே தந்துவிடுகிறார். அப்போஸ்தலராகப் புறப்பட்டுச் செல்ல சீடரில் பன்னிருவரை இயேசு அழைத்தபோது குணமாக்கும் வரங்கள் மற்றும் அற்புதங்கள் செய்யும் சக்தியை அவர்களுக்களித்தார் (மத் 10:1-5). அப்படியே தீமோத்தேயுவும் மூப்பர்களால் குறிப்பிட்டதொரு பணிக்காக நியமிக்கப்படுகையில் அதற்குரிய வரத்தைப் பெற்றான் (1 தீமோ 4:14). படைக்கலன் கொடுக்காது தனது படைவீரரைப் படைக்கு எந்த படைத்தலைவனாவது அனுப்பிவைப்பானா?



### *4. இன்னும் மற்ற வரங்களுமுண்டு!*

இந்த வரங்களின் பட்டியல்களை ஒன்றோடொன்று ஒப்பிடுகையில், இப்பட்டியல் ஒன்றும் முழுமையானது அல்ல, எடுத்துக்காட்டுகளாகத்தான் தரப்பட்டவை என்பது தெளிவாகும். இந்தப் பட்டியல்களில் நேரடியாகச் சொல்லப்பட்டிராத வரங்கள் எத்தனையோ உண்டு என்பது நிச்சயம். இதோ சில எடுத்துக்காட்டுகள்—

அகத்தூண்டுதலான பாடல்களை இயற்றவும், குயில்போல் பாடவும், இனிமையாய் இசைக்கவும் தம் பரிசுத்தர் பலருக்கு தேவன் வரமளித்துள்ளார். இவ்வித அசாதாரண வரம் பெற்றதில் தாவீது ஒருவன். ''அபிஷேகம் பெற்று... இன்பமாய்ப் பாடின தாவீது!'' (2 சாமு 23:1).

பிறந்து ஆறு வாரங்களில் காய்ச்சலினால் பார்வையிழந்த அந்த ஃபேன்னி கிராஸ்பி (1823-1915) என்ற அம்மையார் 95 வயதில் மரித்தார்கள். ஒருநாளும் பழைமையாகாத ஆயிரக்கணக்கான பாடல்களை இயற்ற தேவன் அவர்களை அற்புதமாய்ப் பயன்படுத்தினார். *"Blessed assurance, Jesus is mine"* என்பது அவர்களது பாடல்களில் ஒன்று!

தமது புகழைப் பாடுவதிலும், பறைசாற்றுவதிலும் தேவன் கலையை வெகுவாய்ப் பயன்படுத்தி வந்திருக்கிறார். ஆராதனைக்கூடத்திற்கு ''சகலவித வேலைகளையும் யூகித்துச் செய்கிறதற்கும் வேண்டிய ஞானமும் புத்தியும் அறிவும்'' உண்டாக தேவன் பெசலெயேலை ஆவியினால் நிரப்பினார் (யாத் 31:1-5). நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சகோதரன் நவநீதர் இதற்கோர் நவீன எடுத்துக்காட்டு. அவரது ஓவியங்கள் அநேகரைக் களங்களுக்குத் துரத்திவிட்டுள்ளன.

மிஷனரிகளும் வேத மொழியாக்கர்களும் புதிய மொழிகளைக் குறுகிய காலத்தில் கற்றுக்கொள்ள முடிந்தது தேவனருளிய வரத்தினாலேயே. இல்லையேல், அத்தனை இந்திய மொழிகளில் வேதத்தை மொழிபெயர்க்க வில்லியம் கேரிக்கு (1761-1834) எவ்விதம் முடிந்திருக்கும்? தேவன் வரமளித்தார்; அவரும் உழைத்தார்.

தேவன் சர்வ வல்லவர். அவரது ஐசுவரியம் அளவிட முடியாதது. தனது வாளியைக் கொண்டு சமுத்திரத்தையே காலியாக்கிவிட சிறுவனொருவன் முயன்றானாம். மொத்தமே ஒன்பது வரங்கள்தான் என்று நாம் சாதித்தால் நாமும் அவனைப்போன்ற அறிவாளிதான்!

பாடுதல், வரைதல், மொழி பயிலுதல் போன்றவையெல்லாம் தாலந்துகள்தானே ஒழிய வரங்களல்ல என ஒருவேளை வாதாடலாம். ஆனால் தாலந்துகள் எனப்படுபவைகளைக் கொடுப்பதும் தேவன்தானே? தேவன் ஈவாகத் தரும் எதுவும் ஈவு அல்லது வரம் எனப்படும். 1 கொரிந்தியர் 4:7 இதை விளக்குகிறது. ''உன்னை விசேஷித்தவனாகும்படிச் செய்கிறவர் யார்? உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றுக்கொள்ளாதவன் போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?'' இயற்கையான தாலந்துகள் என அழைக்கப்படுபவை தேவனது பரம திட்டங்களுக்குப் பயன்படும்படி அவரது பலிபீடத்தில் படைக்கப்படவேண்டும்.

எல்லா விசுவாசிகளுக்கும் வரமுண்டு என அறிந்துகொண்ட நாம் இப்போது ஒவ்வொருவரும் தனது வரங்களை அடையாளங்கண்டு அப்பியாசிப்பது எப்படி எனக் காண்போம். கீழ்க்கண்ட நான்கு கேள்விகளைக் கவனியுங்கள்—

### *1. உங்கள் விருப்பம் எங்குள்ளது?*

ஊழியத்தில் எப்பகுதி உங்களை அதிகமாய்க் கவருகிறதெனப் பாருங்கள். தேவனே ''விருப்பத்தையும் செய்கையையும்'' உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார் (பிலி 2:13).

பந்தி பரிமாறுவதில் ஏற்பட்ட சிக்கலைத் தீர்க்க இதற்கென்றே ஏழு பேர் தெரிந்தெடுத்து நியமிக்கப்பட்டனர். ஆனல் இந்த எழுவர் குழுவில் முதல் இருவரான ஸ்தேவானுக்கும் பிலிப்புவுக்கும் நாட்டமெல்லாம் நற்செய்திப் பணி நோக்கியே இருந்தது. ஸ்தேவான் தனது மாநாட்டை எருசலேமிலேயே துவங்கிவிட்டான். பிலிப்பு சமாரியாவுக்கு விரைந்தான். நற்செய்திப் பணியோடு இணைந்த குணமாக்கும வரங்களும், அற்புதங்களும் இருவர் மூலமும் வெளிப்படத் துவங்கின (அப் 6:5,8; 8:5-7).

குணமாக்குதலும் அற்புதங்களைச் செய்தலும் பிரதானமாக நற்செய்திப் பணி மற்றும் மிஷனரி ஊழியத்திற்கடுத்த அடையாள வரங்களாகும். தமது சீடரை ஊர் ஊராகச் செல்லும் மிஷனரிகளாக அனுப்பும்போது இவ்வரங்களை இயேசு அவர்களுக்களித்தார் (மத் 10:7,8). நற்செய்திப் பேராணையோடு இவ்வரங்களை இணைத்துச் சொன்னார் (மாற் 16:15,17,18). தனது மிஷனரிப் பயணங்களில் எவ்வாறு தேவன் ''அற்புத அடையாளங்களை'' நிகழ்த்தினார் என்று பவுல் எழுதினான் (ரோ



15:18,19). தொலைந்துபோனோருக்கு நன்மை செய்ய இயேசு புறப்பட்டுச் சென்றபோது ஆவியின் அபிஷேகம் இயேசுவின் மூலம் சுகமளித்தலிலும் விடுவித்தலிலும் வெளிப்பட்டது (அப் 10:38). உங்களது வாஞ்சையும் சந்திக்கப்படாதோரைச் சந்திப்பதில் இருக்குமானால் இதே வரங்களை உங்கள் ஊழியத்திலும் நீங்கள் எதிர்பார்க்கலாம்.

### *2. உங்கள் திறமை எதிலுள்ளது?*

எந்தவொரு ஊழியப்பகுதியிலும் உங்களுக்கு சிறப்பானதோர் விருப்பம் இல்லாவிடில், பிற பகுதிகளைவிட எப்பகுதியில் நீங்கள் நன்றாய்ச் செயல்படுகிறீர்களெனக் கண்டுகொள்ள முயற்சியுங்கள்.

எடுத்துக்காட்டாக, பிறருக்கு ஓர் உதவியாளராய் இருப்பதில் நீங்கள் சிறந்து விளங்கலாம். 1 கொரிந்தியர் 12:28இலுள்ள வரங்களின் பட்டியலில் குணமாக்கும் வரங்களுக்கடுத்து உடனே ''உதவிகள்'' என்ற வரம் கொடுக்கப்பட்டுள்ளது. இன்று அதிகம் தேவையான, ஆனால் அதிகம் விரும்பப்படாத வரங்களில் இது ஒன்று. எவ்வளவுதான் வரம் பெற்றிருந்தாலும் உத்தம உதவியாளரின்றி எந்தத் தலைவனும், பிரசங்கியும் தனது பணியை நிறைவேற்ற முடியாது. இவர்கள் தான் மேடைப்பகட்டை விரும்பாது மறைவில் நின்றுகொண்டு தேவன் வெளியுலகில் பயன்படுத்தும் தாசருக்கு உதவியாயிருப்பார்கள். இவர்களை மாலை சூடா மாணிக்கங்கள் என்றொருவர் வர்ணித்தார்!

நீங்கள் நன்றாய்ச் செய்யக்கூடிய ஊழியப் பகுதியில் உங்களை முழுவதுமாய் ஊற்றிவிடும்போது அதில் வளருவதைக் காண்பீர்கள். ''உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப் பற்றி அசதியாயிராதே. நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி இவைகளையே சிந்தித்துக்கொண்டு, இவைகளிலே நிலைத்திரு'' (1 தீமோ 4:14.15). கொஞ்சத்தில் உத்தமமாயிருப்பவர்களைத் தேவன் உயர்த்துவார் (மத் 25:21).

### *3. உங்கள் பொறுப்பு என்ன?*

உங்கள் கரங்களில் தேவன் ஒப்படைத்திருக்கும் வேலைக்கு உங்களை முற்றும் கொடுத்துவிடுங்கள். ''அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்'' (ரோ12:11). அப்பொழுது தேவையான வரங்கள் தானாகவே வெளிப்படும்.

வசனத்தைப் பிரசங்கிக்கவோ, போதிக்கவோ அழைக்கப்பட்டி ருந்தால், அதை உத்தமமாய், ஊக்கமாய் செய்துகொண்டேயிருங்கள். ஞான வசனம், அறிவு வசனம், தீர்க்கதரிசனம், போதித்தல் (ரோ 12:7ஆ) போன்ற வரங்கள் தனித்தோ சேர்ந்தோ நீங்கள் செய்தி கொடுக்கும்போது செயல்படுவதைக் காண்பீர்கள்.

நீங்கள் ஓர் ஆலோசகராக அழைக்கப்பட்டிருந்தால், பகுத்தறிதல், ஞான வசனம், அறிவு வசனம், தீர்க்கதரிசனம், புத்தி சொல்லுதல் (ரோ12:8அ), ஆறுதல்படுத்துதல் (அப் 4:36) போன்ற வரங்கள் வெளிப்பட எதிர் பார்க்கலாம்.

ஆளுகைகள் (1 கொரி 12:28), (ஜார்ஜ் முல்லர், 1805-1898, போன்று துணிந்து காரியங்களில் இறங்கும்) விசுவாசம், கவன நிறைவு (ரோ 12:8ஆ) போன்ற வரங்கள் தலைமைப் பணிக்கு முக்கியம்.

மிஷனரிகளாகப் புறப்பட்டுச் செல்வோர் பலவிதமான வரங்கள் தங்களுக்கருளப்படுவதைக் காண்கின்றனர். விசுவாச வரமானது அவர்கள் வசதிகளைத் தியாகம் பண்ணி, வாழ்வைப் பணயம் வைத்து, களங் களுக்குப் புறப்பட்டுச்சென்று, திரும்பிவராதிருக்கச் செய்கிறது (எபி 11:8,17,15). *Peace Child* என்ற சரிதை ஞான வசன வரத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. குழப்பமான கலாச்சார சூழலில் நற்செய்தியை விளக் கும்போது எழும் விநோதப் பிரச்னைகளைத் தீர்க்க அறிவு வசன வரம் உதவும். புறவினத்தாரிடையே மிஷனரிப்பணி செய்தபோது உருவாகிய தோர் பிரச்னையைத் தீர்க்க இந்த வரத்தை அப்போஸ்தலன் யாக்கோபு வெளிப்படுத்தினான் (அப் 15:13-22). தன் கையைக் கவ்விக்கொண்ட விரியனை அலட்சியமாய்ப் பவுல் உதறியெறிந்தான் (அப் 28:3-5). இது மாற்கு 16:18இன் நிறைவேறுதலாம். விஷப் பூச்சிகளிலிருந்து அற்புத மாய்த் தப்பியதைக் குறித்த சாட்சிகள் காடு மலைகளில் பணியாற்றும் மிஷனரிகளுக்கு ஏராளம். பணிக்களங்களில் குடிநீர் வசதி மிகவும் குறைவு. எல்லாவிதத் தண்ணீரையும் மிஷனரிகள் குடிக்கவேண்டிய நிலையுண்டு. அவர்கள் மாற்கு 16:18ஐ உரிமைபாராட்டிப் பத்திரமாயிருக்கிறார்கள்.

எளியவர் பராமரிப்பு, நிவாரணப்பணிகள், அனாதைகளுக்கு உதவி போன்ற பொறுப்புகளுக்கு சிலர் அழைக்கப்படுகின்றனர். ''உற்சாகத் துடன் இரக்கம் செய்தல்'' எனும் வரம் இவர்களுக்கு இன்றியமையாதது (ரோ 12:8ஆ). பொறுமையிழக்கச் செய்யும் வேளைகளிலும் இப்பணிகளி லுள்ள சகோதர சகோதரிகளின் முகங்களில் காணப்படும் புன்முறுவலே



அவர்கள் வரத்திற்கு நிரூபணம்! இவ்வித ஊழியத்திற்கு ''வஞ்சனை யில்லாமல் கொடுத்தல்'' என்பது தேவையான இன்னொரு வரமாகும் (ரோ 12:8அ). ''ஊழியம்'' அல்லது பணிவிடை எனும் வரமின்றி இவ்விதப் பொறுப்புகளை நிறைவேற்றுவது சாத்தியமில்லை (ரோ 12:7அ).

குறிப்பிட்டதொரு சூழலில் எந்த வரம் செயல்படுகிறது என்று துல்லிய மாக வகையறுக்க அவசியமில்லை. அப்படியே வரமொன்று வெளிப்படு முன் அதற்கு அறிவிப்பெல்லாம் தேவையில்லை! மனித உடலின் உறுப்பு களைப் போலவே, வரங்கள் இசைவாய், இயற்கையாய், இயற்கைக்கப் பாற்பட்டு செயல்படும்.

### *4. தேவை எங்கே?*

தேவையுள்ள இடங்களுக்கும் மக்களிடமும் விரையுங்கள். மக்களின் தேவைகளால் தேவன் மனதுருகும்போது தமது வரங்களை வெளிப் படுத்துகிறார்.

நோயாளிகள் இருக்குமிடத்தில்தான் வைத்தியர் இருக்கவேண்டும். ''தேவனாகிய கர்த்தர் மனிதருக்குள் வாசம்பண்ணும்பொருட்டு, துரோகி களாகிய மனிதருக்காகவும் வரங்களைப் பெற்றுக்கொண்டீர்'' என்று ஆவி யானவர் மூலம் கிறிஸ்து பொழிந்தருளிய வரங்களைக் குறித்து தாவீது தீர்க்கதரிசனம் உரைத்தான் (சங் 68:18,19).

பெரும்பாலும் கிறிஸ்தவர்களே பங்குபெறும் கூட்டங்களில் அற்புதங் கள் குறைவு. மாறாக, கிறிஸ்தவரல்லாதோரிடையே நடக்கும் நற்செய் திப்பணிகளில் குணமாகுதலும், அற்புதங்களும் சாதாரணம். இரகசியம் என்ன? இதோ ஏசாயா தரும் பதில்: ''என்னைத் தேடாதவர்களாலே கண்டறியப்பட்டேன்... இஸ்ரவேலரைக் குறித்தோ: கீழ்ப்படியாதவர் களும் எதிர்த்துப் பேசுகிறவர்களுமாயிருக்கிற ஜனங்களிடத்திற்கு நாள் முழுதும் என் கைகளை நீட்டினேன்'' (ரோ 10:20,21).

கிறிஸ்து உதித்தார், உயிர்கொடுத்தார், உயிர்த்தெழுந்தார் என்று பெயர்க்கிறிஸ்தவர்களுக்கு ஏற்கனவே தெரியும். அவர்களுக்கு வேண் டியது சுவிசேஷ அற்புதங்களல்ல, தீர்க்கதரிசன எச்சரிப்புகளே! (மத் 12:38,39). மனந்திரும்ப மறுக்கும், வணங்காக் கழுத்துள்ள, கிறிஸ்தவ சமுதாயங்களுக்குத் திரும்பத் திரும்ப அற்புதங்களைச் செய்ய கிறிஸ்து விரும்புவதில்லை. கானாவூர், கோராசின், கப்பர்நகூம் ஆகிய இடங்களி லுள்ளோர் இதயக் கடினத்தை இயேசு கடிந்துகொண்டார் (யோ 4:46-48; மத் 11:20-24).

கிறிஸ்துவின் பெயரே சொல்லப்பட்டிராத பிராந்தியங்களுக்குச் செல்லுங்கள். தாழ்த்தப்பட்டோரைச் சந்திக்கக் கிராமங்களுக்குப் புறப்படுங்கள். வெள்ளம், பஞ்சம், இன்னும் இதுபோன்றவற்றால் பாதிக்கப்பட்டு நலிந்துகிடப்போரைச் சந்திக்க விரையுங்கள். தொன்றுதொட்டு மூடப் பழக்கங்களுக்கும் பயங்களுக்கும் அடிமைப்பட்டுக் கிடக்கும் ஆதிவாசிகளைச் சந்திக்கக் காடுமலைகளுக்குள் ஊடுருவுங்கள். இவ்விதம் ''தரித்திரருக்கு'' அதாவது சந்திக்கப்படாதோர், சிந்திக்கப்படாதோர் ஆகியோருக்கு நீங்கள் சுவிசேஷம் அறிவிக்கையில் அற்புத வரங்கள் செயல்படும்! (லூக் 7:22; 4:18,19).

### *வரங்களும் ஆன்மீக நிலையும்*

வரங்கள் அருளப்படுவது நமது தகுதியைப் பொறுத்ததல்ல என்பது உண்மையாயினும், வரங்களை அப்பியாசிப்பதில் நமக்கு ஆன்மீகப் பொறுப்பு அதிகமுண்டு. படைவீரர் காலைதோறும் உடற்பயிற்சி செய்வர். அது எவ்வேலைக்கும் அவர்களை ஆயத்தமாயிருக்கச்செய்யும். நாமும் பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி நம்மை உறுதியாய்க் கட்டியெழுப்ப வேண்டும் (யூதா 20). அவியாத அக்கினி நமது தியான பலிபீடத்தில் எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கவேண்டும் (லேவி 6:12,13). ''வெளியே'' வந்து மக்களை ஆசீர்வதிக்குமுன் மோசே ''உள்ளே'' சென்று தேவனை ஆராதித்தான் (லேவி 9:23). வரங்கள் ஆயுதங்கள் போன்றவை. ''ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும்'' அவைகள் எண்ணெய் பூசி கூர்மையாய் வைக்கப்பட்டிருக்கவேண்டும் (மத் 17:19-21). கிரமமான வேதத் தியானத்திற்கும், ஆராய்ச்சிக்கும் போதுமான நேரம் செலவழிக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் வரங்களைச் சரியாய்ப் பயன்படுத்தவும், தவறாய்ப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும் ஞானம் பெறுவோம்.

*எப்படி வரங்களைப் பயன்படுத்தக்கூடாது? (How not to operate Gifts)* என்ற தலைப்பில் நான் கொடுத்துள்ள 10 தொலைக்காட்சிச் செய்திகளின் தொகுப்பு 5 மணி நேரம் ஓடக்கூடிய இரட்டை ஒளித்தட்டுகளில் உண்டு.



# 10
# பெந்தெகொஸ்தேயின் நோக்கம்

ஆவியின் அபிஷேகம் ஏதாவதொரு சபையினருக்கு மட்டும் உரியது என்ற காலமெல்லாம் மலையேறிவிட்டது. இவ்வனுபவத்தை எதிர்ப்போரின் எண்ணிக்கையும் குறைந்துவருகிறது. பெந்தெகொஸ்தே சத்தியத்தை ஏற்றுக்கொள்ளாத தலைவர்கள், இறையியல் வல்லுநர் பலர் தாங்களே இப்புது திராட்சரசத்தை ருசித்துவிட்டதால் தங்கள் கோட்பாடுகளை மாற்றிக்கொண்டனர். ஆவியின் அபிஷேகக் கூட்டத்தாரிடையேதான் திருச்சபை வளர்ச்சி அதிகம். அருள்மாரியின் கடைசி நாட்களின் கடைசியில் வேறெப்படி இருக்க முடியும்?

ஆனாலும் கவனிக்கவேண்டிய, கவலைக்கிடமான ஒரு காரியமுண்டு. அதாவது, பெந்தெகொஸ்தேயின் நோக்கத்தை நாம் இன்னும் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. அபிஷேகத்தின் சுற்றுவட்ட நன்மைகளேயே பெரிதுபடுத்தி, மையக்கருத்தையோ விட்டுவிட்டோம். முக்கியமானதை இதர ஆசீர்வாதங்கள் கிரகணம்போல் மறைத்துவிட்டன. இந்தியாவைப் பொருத்தவரை பெரும்பாலான பெந்தெகொஸ்தே வட்டாரங்களில் இது மறுக்க முடியாதது.

பெந்தெகொஸ்தேயின் பிரதான நோக்கத்தைக் கிறிஸ்து பரமேறுமுன் தெள்ளத்தெளிவாய் இப்படிக் கூறினார்: ''பரிசுத்த ஆவி உங்கள் மீது வரும்போது நீங்கள் வல்லமை பெற்று... பூமியின் எல்லை முடிவு வரை எனக்குச் ***சாட்சிகளாயிருப்பீர்கள்***'' (அப் 1:8). இதைச் சரிவரப் புரிந்துகொள்வோம்.

கிறிஸ்துவுக்குச் சாட்சியாயிருக்க வல்லமை அருளுவதே பெந்தெ கொஸ்தேயின் முதல் நோக்கம். பிற யாவும் பின்னரே.

பாவம், நீதி, நியாயத்தீர்ப்பு ஆகியவை குறித்து உலகைக் கண்டித் துணர்த்தவே ஆவியானவர் வந்திருக்கிறார் (யோ 16:8). பாவத்தைப் பாவிகள் அருவருத்து நீதியை அரவணைத்துக்கொள்ள அவர் ஆசிக்கிறார். வரவிருக்கும் நியாயத்தீர்ப்பை அறிவித்து எச்சரிக்கிறார். சபைதான் அவரது வாயாகும். ஜீவத் தண்ணீருக்கு அழைப்பு எனும் அவரது செய்தியைச் சொல்லால் அறிவிப்பது விசுவாசிகளே. ''ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள்... தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்'' (வெளி 22:17).

பெந்தெகொஸ்தேயின் பெரிய அற்புதம் வான் சத்தமோ, பலத்த காற்றோ, அக்கினி நாவுகளோ, அந்நிய பாஷைகளோ அல்ல. இவை யெல்லாம் முன்னுரைதான். 3000 பேர் திருமுழுக்கு பெற்றதுதான் அந்நாளின் சிகரம்! நரலோகைச் சூரையாடிப் பரலோகை நிரப்புவதுதான் பெந்தெகொஸ்தே!

120 ''விசுவாசிகள்'' பெந்தெகொஸ்தே வல்லமை பெற்றபோது 3000 ஆத்துமாக்களைக் பெற்றெடுத்தனர். பெந்தெகொஸ்தே அனுபவம் பெற்றிருக்கிறோமெனக் கூறும் பெரிய ''சபைகள்'' சென்னை நகரில் மட்டும் குறைந்தது 120 உண்டு. அந்தோ, ஒரே நாளில் ஒரு 1000 பேர் திருமுழுக்கு பெறுவதைக்கூட இந்நகர் இன்னும் காணவில்லையே! பிரச்னை எங்கே? நற்செய்தியைப் பொதுவிடங்களில் பறைசாற்றவே பெந்தெகொஸ்தே வல்லமை! ''அப்பொழுது பேதுரு பதினொரு வரோடுங்கூட நின்று... உரத்த சத்தமாய்... '' (அப் 2:14). கிறிஸ்தோரே, எழுந்திருங்கள்! எடுத்தியம்புங்கள்!

உன்னத வல்லமையால் நிறையும்வரைதான் காத்திருப்பு! அடுத்து உடனே அவரது நாமத்தில் மனந்திரும்புதலையும் பாவ மன்னிப்பையும் பிரசங்கிக்கக் கால்கள் விரையவேண்டும் (லூக் 24:47-49). தமது சீடர்மீது இயேசு ஆவியை ஊதியதேன்? அனல் கொடுத்து அகமகிழச் செய்யவா? இல்லை! தமது மன்னிப்பு ஊழியப் பிரதிநிதிகளாக அவர்கள் எங்கும் செல்லவே ஆவியை ஊதினார் (யோ 20:22,23).

கோழைகளைப் பெந்தெகொஸ்தே தைரியசாலிகளாக்குகிறது. பெந்தெகொஸ்தேக்கு முன்னரும் பின்னரும் பேதுருவைக் கவனியுங்கள்.



பேதமை, படிப்பறிவின்மை, ஆனால் பயமின்மை! (அப் 4:13). நம் மிலுள்ள தேவ வரத்தை அனல் மூட்டி எழுப்பிவிடுவோம். ''தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்'' (2 தீமோ 1:6-8). அந்த கார ஆதிக்கங்களுக்கெதிராகப் பலமாய்ப் போராடி சாட்சி பகர! மாளும் மாந்தருக்கு அன்புடன் சாட்சிபகர! துன்பத்தில் துவளுவோருக்குத் தெளிந்த புத்தியுடன் சாட்சிபகர!

பதுக்கலுக்குப் பெந்தெகொஸ்தே பரம எதிரி! அது தன்னலத்தைத் தகர்க்கிறது. அதின் முதற்கனியே அன்புதானே? (கலா 5:22). இல்லா தோரோடு பகிர அது பணப்பையைத் திறக்கிறது. ''விசுவாசிகளெல்லாரும் ஒருமித்திருந்து, சகலத்தையும் பொதுவாய் வைத்து அனுபவித்தார்கள். உடைமைகளையும் சொத்துக்களையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத் தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள்'' (அப் 2:44,45; 4:34,35). எனவேதான் பந்தி விசாரணைத் தலைவர்களும் ''பரிசுத்த ஆவியால் நிறைந்தவர்களாய்'' இருக்கவேண்டி யிருந்தது! (அப் 6:3).

''எனக்கு அக்கறையுண்டு!''—இதுவே பெந்தெகொஸ்தே விசுவாசியின் முழக்கமாயிருக்கவேண்டும். எளியோருக்கு நற்செய்தி அறிவிக்க அவன் செல்லவேண்டும். இதயம் உடைந்தோருக்குத் தைலம் எடுத்துச் செல்லவேண்டும். தேம்பியழுவோரைத் தேற்றவேண்டும். அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்திற்குப் பதிலாக ஆனந்த தைலத்தையும் கொடுக்கவேண்டும். ஒடுங்கிய ஆவிக் குப் பதிலாக அவர்களுக்கு துதியின் உடையை அணிவிக்கவேண்டும் (ஏசா 61:1-3).

தொழுகையானது பெந்தெகொஸ்தேயில் புதுப்பிறப்படைகிறது (அப் 2:11). அப்படியே தொழுகையானது சாட்சிபகருதலைப் பிறப்பிக்க வேண்டும். அபிஷேகம் பெற்ற சீடர் ''தேவனைத் துதித்து (அத்துடன்) மக்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார்கள்'' (வச 47). தொழுகை யில்லா சாட்சி அகமற்றது; சாட்சியில்லா தொழுகை அர்த்தமற்றது. சொல் லப்போனால், சாட்சிபகருதலே தொழுகையின் ஒரு வெளிப்பாடுதான். அது இருளிலிருப்போருக்குத் தேவனது மகத்துவங்களை அறிவிப்பதாம் (1 பேது 2:9,10).

ஆதிநிலையேகும் முயற்சிப் பணி இயக்கங்கள் தொழுகையில் தனிக் கவனம் செலுத்துகின்றன, நல்லது. தாவீதின் கூடாரத்தைத் திரும்ப எடுப்பித்தலைக் குறித்த பிரசங்கங்களும் ஏராளம், பிரமாதம். ஆனால், ஆதிநிலையேகுதலும் திரும்பக் கட்டுதலும் ஏன்? ''மற்ற மனிதரும், என் நாமம் தரிக்கப்படும் சகல இனத்தாரும் கர்த்தரைத் தேடும்படி!'' (அப் 15:15-17). தேவப்புகழ் பாடுவதைத் தேவப்புகழ் பறைசாற்றுதலிலிருந்து பிரித்தல் கூடாது (ரோ 15:9-11). மேல்நோக்கிய, சமதள, ஆகிய இவ்விரு பரிமாணங்களில் ஒன்றில்லாவிட்டாலும் இன்னும் நமது பெந்தெ கொஸ்தே சரியாக ''வரவில்லை'' என்றுதான் சொல்லவேண்டும்!

வேதத்தைப் பாதி விசுவாசிப்போர் அற்புதங்களின் காலம் கடந்துவிட் டதென்பர். தேவனது மீந்த மக்களோ இவர்களுக்குச் செவிமடுக்காது, ஆவியின் வரங்களைக் குறித்து வேதத்தை ஆராய்ந்து படிக்கின்றனர். இதவாதிகளெனும் வெட்டுக்கிளிகளும், பச்சைப் புழுக்களும் அழித்துப் போட்டவைகளைத் தேவன் சபைக்குத் திரும்பத் தந்துகொண்டிருக்கிறார். இங்கும் நாம் வரங்களின் நோக்கத்தை மறந்து விடக்கூடாது. மனிதனின் சுய நன்மையெனும் பீடத்தில் தேவனின் உன்னத நோக்கு பலமுறை பலியாகிறது.

வரங்களின் குறுகிய பட்டியலொன்றை இயேசு மாற்கு 16:15-18இல் தந்தார். அது நற்செய்திப் பணியையே மையமாய்க் கொண்டது. ''நீங்கள் உலகமெங்கும் போய்ச் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கி யுங்கள்... விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன...'' பெந்தெகொஸ்தேயை அடுத்த முதல் அற்புத சுகம் சீடரின் எண்ணிக் கையை 5000 எனப் பெருக்கியது. ஆடவர் மட்டும் அத்தனை பேர்! (அப் 4:4). நற்செய்திப் பிரசங்கத்தை உறுதிப்படுத்துவதே அடையாள வரங் களின் பிரதான நோக்கம் (மாற் 16:20). ''அடையாளங்களினாலும் அற் புதங்களினாலும்... பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன்தாமே சாட்சி கொடுத்த இவ்வளவு பெரிய இரட்சிப்பு!'' (எபி 2:3,4).

வரங்களைப் போதிக்கும் கருத்தரங்குகள், வரங்களைப் பயிற்சிக்க வேண்டிய களங்களுக்குப் பங்குபெறுவோரை விரையச் செய்யத் தவறினால் அது பெரும் தோல்வி. களங்களிலல்லவா கயவனின் கட்டுக் குள் கோடிகள் கலங்கி நிற்கின்றன? சில ஆதிவாசிக் கிராமங்களில் ஒருவர் விட்டு ஒருவருக்குப் பிசாசு பிடித்திருக்கிறது; பிசாசுகளைத் துரத்த அங்கு படையெடுங்கள். மருத்துவ வசதியேதுமின்றி கற்கால மனிதர்போல்



ஆயிரங்கள் வியாதிகளில் சாகின்றன; குணமாக்கும் வரங்களை அங்கு போய்ப் பயிற்சியுங்கள். அறிவாளிகளையும் திக்குமுக்காடச் செய்யும் சூழல்கள் மிஷனரிக்களங்களில் ஏராளம்; ''அறிவை உணர்த்தும் வசனம், ஞானத்தை போதிக்கும் வசனம்'' ஆகிய உங்கள் வரங்களை அங்கு சென்று பயன்படுத்துங்கள். சத்துருவை முறியடித்து மக்களை மீட்கப் புறப்படாவிட்டால் படைக்கலன்களால் பயனென்ன?

*''சந்தைவெளிகளில் வரங்கள்'' (Gifts for the Marketplace)* எனும் காலத்திற்கேற்ற புத்தகத்தில் பண்டிதர் R. L. பிராண்ட் இப்படி எழுதி யுள்ளார்: ''படித்துக்கொண்டும், பரவசப்பட்டுக்கொண்டும் இருப்பதற் காக வரங்கள் கொடுக்கப்படவில்லை... ஆலயத்தின் நான்கு சுவர் களுக்குள்ளேயே வரங்கள் பெரும்பாலும் செயல்படவேண்டுமென்பது பெந்தெகொஸ்தே உலகின் பொதுவான கருத்து... ஆனால் ஆதிச்சபை யின் சரித்திரத்தைக் கவனித்தால் ஜெபக்கூட்டங்களைவிட தெருச்சந்தி களிலேயே அதிகமாய் வரங்களைச் செயல்படுத்தினார்களென்பது தெளிவாகிறது.'' அமெரிக்க ''அசெம்பிளி ஆப் காட்'' தலைவர் ரேமண்ட் கார்ல்சன் இப்புத்தகத்திற்கு எழுதியுள்ள அணிந்துரையில் ஆசிரியரது கருத்தை அப்படியே ஆமோதிக்கிறார்.

முறையே சுயபக்திவிருத்திக்கும், சபை பக்திவிருத்திக்கும் அருளப் படும் அந்நிய பாஷைகளும் தீர்க்கதரிசனமும்கூட நற்செய்திப்பணிப் பயனுள்ளவை என்பதைக் கவனியுங்கள். அந்நிய பாஷைகள் கேட்டுக் கொண்டிருக்கும் ''அவிசுவாசிகளுக்கு'' ஓர் அடையாளம். தீர்க்கதரிசன மானது உள்ளே வரும் ''அவிசுவாசியொருவனுக்கு'' உணர்த்துவிப்பா யிருக்கிறது (1 கொரி 14:22,24,25).

ஆவியானவரின் எழுப்புதலின் அழகிய சித்திரமொன்று எசேக்கியேல் 37இல் உண்டு. தீர்க்கதரிசி தீர்க்கதரிசனம் சொன்னதும் உலர்ந்த எலும்பு களுக்குள் கர்த்தர் ஆவியை நுழையச் செய்தார். சத்தம், அசைவு, எல்லாம் உண்டாயிற்று. ஆனால் அவைகள் மகா பெரிய சேனையாய்க் ''காலூன்றி'' நிற்கும்வரை வேலை முடியவில்லை! நற் செய்தியை அறிவிக்க விரையும் பாதங்கள்!

தனி நபரின் உயிர்மீட்சிக்கு சங்கீதம் 51க்கு இணையான ஜெபம் வேறில்லை. ''தேவனே... உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளா மலும், உமது பரிசுத்த ஆவியை என்னிடமிருந்து எடுத்துக்கொள்ளாமலும்

இரும். உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்'' என்று தாவீது கதறினான். ஏன்? ''***அப்பொழுது*** பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப் பேன்; பாவிகள் உம்மிடம் மனந்திரும்புவார்கள்'' (வச 11-13). எழுப்புதல் கூட்டம் ஒன்று தவறாமல் போகிறோமே, விளைவென்ன? நமது சாட்சி கேட்டு எத்தனை பேர் மனந்திரும்பியிருக்கின்றனர்? கணக்கெடுப்போம்.

பெந்தெகொஸ்தே மாரியைத் தொடர்ந்து தீர்க்கதரிசனம், சொப்பனம், தரிசனம் இவையெல்லாம் வரும் (அப் 2:17,18). ஆனால் இவைகளின் விளைவு என்னவாயிருக்கவேண்டும் தெரியுமா? ''அப்பொழுது கர்த்த ருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுகிறவனெவனோ அவன் இரட்சிக் கப்படுவான்'' (வச 21). முதலும் முக்கியமுமாக தேவன் ஆத்துமாக்களை இரட்சிப்பதிலேயே நோக்கங்கொண்டுள்ளார் என்பது தெளிவாகிற தல்லவா? தேவ ஆசீர்வாதங்கள் நம்மில் தேங்கிவிடக்கூடாது, நம்மி லிருந்து புறப்பட்டு ஓடவேண்டும் (யோ 7:37,38). ''நான் உன்னை ஆசீர்வதிப்பேன்... நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்'' (ஆதி 12:2).

இன்று தரிசனங்களுக்கும் சொப்பனங்களுக்கும் ஒரே கிராக்கி. நடபடிகள் புத்தகத்திலுள்ள தரிசனங்கள், சொப்பனங்களைக் கவனித் தால், அவற்றில் பெரும்பாலானவை மிஷனரிப் பணியை அடுத்தவையே என விளங்கும். பேதுருவுக்கு வந்த தரிசனம் புறவினத்தாருக்கு நற் செய்தியை எடுத்துச்செல்ல அழைப்பு (அத் 10). பவுலின் தரிசனங்களில் ஒன்று மக்கெதோனியாவுக்கு நற்செய்தியை எடுத்துச்செல்ல அழைப்பு (அத் 16). இன்னொரு தரிசனம் எதிர்ப்பு நிறைந்திருந்த இடத்திலும் தைரியமாய்ச் சாட்சிபகர தேவன் அவனுக்குத் தந்த உயிர்ப்பிப்பு (அத் 18). பொன் மாளிகைகள், பொன் கிரீடங்கள் என்றெல்லாம் தரிசனம் பார்த்த தாகச் சொல்லுகிறார்கள். அபாரம்! ஆனால், அறுப்புக்கு ஆயத்தமாயி ருக்கும் பொன்னிற வயல் நிலங்கள் தரிசனத்தில் வரவில்லையோ? சொப்பனக்காரர் செயல்வீரராய் மாறவேண்டும்.

இந்தியாவிலுள்ள பெந்தெகொஸ்தே சபைகள் பிற சபைகளைவிட அதிகமாக மிஷனரிப் பணிக்குச் செல்லும், செலவிடும் நாள் என்று வரும்? வருமா? திரள்கள் அழிவதைக் கண்டு தேவன் முடிவில்லாது பார்த்துக் கொண்டிருப்பாரோ? தேவன் இவ்வுலகில் இவ்வளவாய் அன்புகூர்ந்து தமது ஒரே குமாரனைத் தந்துவிட்டார். நாமோ நமது குமாரர், குமாரத்தி களில் அவ்வளவாய் அன்புகூர்ந்து உலகை மறந்துவிட்டோம்! அநியாயம்!



நடபடிகள் புத்தகத்தில் ''சந்தோஷம்'' என்பது பெரும்பாலும் நற் செய்திப் பணியை அடுத்தே கூறப்பட்டுள்ளது. சீடர் தங்களது சாட்சிக்காக அடிபட்டபோது அகமகிழ்ந்தனர். (5:40,41). பிலிப்புவின் நற்செய்திப் பணியால் சமாரியாவில் சந்தோஷம் (8:8). அந்தியோகியாவில் பலர் மனம்மாறுவதைக் கண்டபோது பர்னபா பரவசமடைந்தான் (11:22,23). அப்போஸ்தலர் சுவிசேஷத்தோடு தங்களிடம் வந்தது புறவினத்தாருக்குப் பூரிப்பு (13:47,48). பவுலையும் பர்னபாவையும் அடித்துத் துரத்தியதைக் கேட்ட சீடருக்கு ஆவியில் ஆனந்தம் (13:50-52). பெனிக்கே, சமாரியா நாடுகளில் புறவினத்தார் மனந்திரும்பிய செய்தி கேட்ட சகோதரர்க்கு ஒரே சந்தோஷம் (15:3). விளைச்சலால் பொங்கும் குதூகலமே ஆவியானவரின் ஆனந்தம். ஏனெனில், அவரே மிஷனரிப் பணியின் இயக்குநர் (13:4).

ஆவியானவரைக் குறித்து இயேசு சொன்ன வசனங்களில் மிகவும் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட ஒன்று மாற்கு 13:11 ஆகும். ''என்ன பேசு வோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலுமிருங்கள்; அந்நாழிகையிலே உங்களுக்கு எது அருள் செய்யப்படுமோ அதையே பேசுங்கள்; ஏனெனில் பேசுகிறவர் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசு கிறவர்.'' நண்பரே, இப்பகுதி பிரசங்கிப்பதைக் குறித்துப் பேசவே யில்லை. அதுவும் ஆயத்தமில்லாத சோம்பேறிப் பிரசங்கத்தை இது குறிப்பிடவேயில்லை! சொல்லப்பட்ட இடம், பொருள், காலத்தைக் கவனியுங்கள்: ''சகல இனத்தாருக்கும் சுவிசேஷம் முந்திப் பிரசங்கிக்கப் படவேண்டும். அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும் போது...'' (வச 10,11).

இந்தியாவில் கிறிஸ்தவத்திற்கெதிராக தங்கள் பேய்த்தலைகளை உயர்த்தும் சக்திகள் பெருகிக்கொண்டேயிருக்கின்றன. பெந்தெகொஸ்தே என்றால் சித்திரவதை, சிறைவாசம், சிரச்சேதம் எல்லாம் உண்டு. யார் உண்மையான பெந்தெகொஸ்தேகாரர் என்பது நாளடைவில் புலப்படும்! ''நீங்கள் கிறிஸ்துவின் நாமத்திற்காக நிந்திக்கப்பட் டால் பாக்கியவான்கள்; ஏனென்றால் தேவனது ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள் மேல் தங்கியிருக்கிறார்'' (1 பேது 4:14).

பூரணப்படுதல் பற்றிய விபரீத உபதேச வலையில் சிக்கிக்கொண் டோருமுண்டு. அவர்கள் தங்கள் காலணிகளுக்குப் பாலிஷ் போட்டுக் கொண்டேயிருப்பார்கள்—பணிக்களம் நோக்கி நடக்க அல்ல, ஜமுக்

காளம் விரித்த மொசைக் தரையில் சுற்றிச்சுற்றி வர! வெளியே போய் விட்டால் தூசி படிந்துவிடுமே என்ற பயம்! அப்பப்பா, ஏமாற்றுவதில் பிசாசு எத்தனை கில்லாடி!

நம்மிலுள்ள பதரையெல்லாம் எரித்து நம்மைத் தூய்மையாக்கத்தான் ஆவியின் அக்கினி என்பது உண்மை. அவர் நம்மை உள்ளும் புறம்பும் சுத்திகரிக்கிறார். ஆனால் எதற்காக? அலமாரியில் வைக்கவா? இல்லை, ''எஜமானுக்குப் பயனுள்ளதும், எந்த நற்செயலுக்கும் ஆயத்தமாக்கப் பட்டதுமான கனத்திற்குரிய பாத்திரமாய்'' இருக்க! (2 தீமோ 2:21). இயேசு வைப்போல் இருப்பதென்றால் அவரைப்போல் இயங்கவும் வேண்டும். ஒன்றில்லாது அடுத்தது முற்றுப்பெறாது.

ஆவியின் முதல் அருள்மாரியைத் தொடர்ந்து சீடர்கள் மகிழ்ச்சியோடு தேவனது மகத்துவங்களைப் பேசினார்கள் (அப் 2:11). இரண்டாம் அருள் மாரியைத் தொடர்ந்து, அவர்கள் தைரியத்தோடு தேவனது வசனத்தைப் பேசினார்கள் (4:31). இதோ, பெந்தெகொஸ்தேயின் நோக்கம் தெளிவாகி விட்டது: ***தேவனது மகத்துவங்களையும், வசனத்தையும், மகிழ்வோடும் துணிவோடும் அறிவிப்பது!***



# 11
# பிரசங்கிக்கக் கற்றுக்கொள்வோம்!

1963ஆம் ஆண்டு ஒரு வாலிபனாக முதன் முறை பிரசங்கித்தேன். மறுபடி பிறந்து ஓரண்டுகூட நிறைவடையவில்லை. படித்தவர் நிறைந்த தோர் ஆங்கிலிக்கன் சபையது. நான் எப்படி இரட்சிக்கப்பட்டேன் என்பதே அப்பிரசங்கம். பதினாறு வயது வாலிபனின் அந்த எளிய சாட்சி மூலம் தேவன் பலரோடு பேசினார். அன்று முதல் பிரசங்கித்துவந்திருக்கிறேன். அபிஷேகத்திற்காக ஆண்டவரைத் துதிக்கிறேன்.

எல்லாரும் பிரசங்கிகளாக அழைக்கப்படாவிடினும், பிரசங்கிக்க வேண்டிய தேவை ஒவ்வொரு விசுவாசிக்கும் என்றோ வரத்தான் செய்யும். இது நெருக்கடி காலம் அல்லவா? வேலை மிகுதி, வேலையாளோ குறைவு! எனவே அதற்கென்றே பயிற்சி பெற்றோருக்கே பிரசங்கப் பணியை விட்டு விட முடியாது. விசுவாசிகள் ''அனைவ ரும்'' எங்கும் சென்று வசனத்தைப் பிரசங்கித்தார்களென நடபடிகளில் வாசிக்கிறோம் (அப் 8:1,4).

ஆயத்தம் செய்வதும் பிரசங்கிப்பதும் எப்படியென ஒருவரும் தங்க ளுக்குக் கற்பிக்காததினாலேயே நல்ல விசுவாசிகளும் பிரசங்கிக்கத் தயங்கி நடுங்குகின்றனர். தங்கள் தொழில் இரகசியங்களை வெளிச் சொல்லப் பிரசங்கிகளும் மேய்ப்பரும் அஞ்சுகின்றனர்! தங்களை விக்கி ரகங்களாக்க விரும்பும் தலைவர்களிருப்பது எத்தனை வேதனை! சபை யானது மகப்பேறு இல்லமாகவோ, அனாதை விடுதிகளாகவோ இருந்து விடக்கூடாது. படைவீரர் பயிற்சி நிலையமாய் இருக்கவேண்டும் அது.

‘‘ஊழியத்தின் வேலைக்காக’’ விசுவாசிகளைப் பக்திவிருத்தியடையச் செய்து, பக்குவப்படுத்தும் தளமே சபையென்பது (எபே 4:11-13).

பிரசங்க ஆயத்தத்திற்கோ, பிரசங்கம் பண்ணவோ பத்துக் கட்டளை என்றெல்லாம் கிடையாது. ஆனால், இக்கட்டுரையிலுள்ள அடிப்படைத் தத்துவங்களைப் பின்பற்றினால் நீங்களும் பிரசங்கிக் கலாம்!

### *அ) ஆயத்தம்பண்ணுவது எப்படி?*

*1) கிரமமான தியானத்திற்கும், வேத ஆராய்ச்சிக்கும் உங்களை அர்ப்பணியுங்கள்.*

தியானமும் ஆராய்ச்சியும் வெவ்வேறானவை. ஆராய்ச்சியென்பது வெறுமனே அறிவைப் புகட்டலாம்; தியானமோ ஆன்மீகத் தன்மையுடையது. ஆராய்ச்சி மனதைத் தெளிவாக்கும்; தியானமோ ஆவியைப் புதுப்பிக்கும். அறிவு வளரவேண்டும்; அப்படியே அகமும் மிளிரவேண்டும்.

தியானமும் ஆராய்ச்சியும் ஒன்றையொன்று தொட்டே இருந் தாலும், ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே நேரம் ஒதுக்கவேண்டும். காலை ஜெப வேளையைத் தியானத்திற்கும், பிற வேளைகளை ஆராய்ச்சிக்கும் ஏற்ற தாகச் சிலர் கண்டுள்ளனர்.

முடிந்தவரை வசனத்தை முழங்காலில் தியானிப்பது நன்று. இதனால் ஜெப ஆவியும் தொழுகையின் ஆவியும் நிரம்பியிருக்க ஏதுவாகும். ஆராய்ச்சிக் குறிப்புகள் இல்லாத வேதமே தியானத்திற்குச் சிறந்தது. இத்தியானத்தின்போது விளக்கவுரை அல்லது பிற உதவி நூல்களை உங்களுக்கருகே வைத்துக்கொள்ளவேண்டாம். உங்கள் கவனம் சிதறக்கூடாது. தியானத்தில் கிட்டும் சிந்தனைகளைக் குறிப்பேட்டில் எழுதி வையுங்கள். வேதத்தில் குறிக்கத் தயங்கவேண்டாம். அடிக்கோடிட்ட சொற்கள் அல்லது வரிகள் அந்தப் பகுதியைப் பிரசங்கிக்கும்போது தனித் தெளிவுடன் காணப்படும்.

அனுதின தியான நூல்கள் நல்லதுதான்; ஆனால் சீக்கிரம் அவைகளுக்கப்பால் சென்றுவிடவேண்டும். சாயங்காலம்வரை பொறுக்கியும் ரூத்துக்குக் கிடைத்தது ஒரு மரக்கால் வாற்கோதுமைதான். ஆனால் நேரே போவாசிடம் சென்றபோதோ ஆறு மரக்கால் கிடைத்தது! (ரூத் 2:17; 3:15).

அடுத்து வருவது ஆராய்ச்சி. ஏதாவது ஓரிரு ஆராய்ச்சி வேதங்களைத் தெரிந்தெடுத்து, அவற்றை நன்கு படியுங்கள். சாதா வேதமும் ஒரு நல்ல



விளக்கவுரையும் மேல் என்று சிலர் கருதுகின்றனர். தியானம் தவிர்த்து தினமும் ஒரு மணி நேரமாவது ஆராய்ச்சிக்காக எடுத்துவைக்க முடியாவிடில் வாரயிறுதி, விடுமுறை நாட்களை அவசரமின்றிச் செய்யவேண்டிய இப்பயிற்சிக்காய்ப் பயன்படுத்துங்கள்.

இப்படி நீங்கள் தியானித்தும் ஆராய்ந்தும் வரும்போது ஆங்காங்கே பிரசங்கத்திற்கேற்ற சில கருத்துக்கள் கட்டாயம் கிடைக்கும். அவற்றை உடனுக்குடன் உங்கள் குறிப்பேட்டில் எழுதிவையுங்கள். தேதியையும் குறிப்பிடுங்கள். பின்னர் சமயம் வாய்க்கும்போது அக்கருத்துக்களை விரிவாக்குங்கள்.

*2) பிரசங்கிக்க அழைப்பு வரும்போது தலைப்பு அல்லது வசனப் பகுதியைத் தெரிந்தெடுக்க தேவ சமுகத்தில் காத்திருங்கள்.*

பிரசங்கம் கேட்கவிருக்கும் கூட்டத்தாருக்காக ஜெபியுங்கள். செய்தியைக் கூறத் துவங்குமுன் கர்த்தருடைய பாரம் அல்லது கர்த்தருடைய கரம் தங்கள் மீது வந்ததாக முன்னாள் தீர்க்கதரிசிகள் சாட்சிபகர்ந்தனர். பிரசங்கமானது தீர்க்கதரிசன ஆவியுடையதாயிருக்கவேண்டும். இல்லையேல் அதில் பயனென்ன? நீங்கள் ஜெபத்தில் தரித்திருக்கையில் சபையாரின் தேவையையும், தமது சிந்தையையும் தேவன் உங்கள் உள்ளத்தில் ஊற்றுவார் (யோ 12:49). அதற்கேற்ற வசனம் அல்லது தலைப்பு ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள்.

சில வேளைகளில், சபையாரைக் குறித்த அகத்தூண்டுதல் எதுவுமின்றி, இந்த வசனம் அல்லது தலைப்பில் பேசவேண்டுமென்ற அகவுணர்வு மட்டுமே உண்டாகும்.

இன்னும் பிற சமயங்களில், கூட்டம் ஒழுங்கு செய்பவர்களே இந்த வசனம் அல்லது தலைப்பில் பேசுங்களென்று சொல்லிவிடுவார்கள். இதை விடுதலையின்மை எனக் கணிக்கவேண்டாம். விருந்தினரைவிட மேய்ப்பருக்குத்தானே மந்தையின் நிலை நன்றாய்த் தெரியும்! (யோ 10:14). சொல்லப்போனால், எந்தத் தலைப்பில் பேசவேண்டுமெனச் சொல்லிவிட்டால் உங்களுக்குச் சுலபம்தானே!

மேற்குறிப்பிட்ட எதுவும் இல்லையெனில், பொருத்தமாய்த் தோன்றுகிற வசனம் அல்லது கருப்பொருளை நீங்களே தெரிந்தெடுத்துக்கொள்ளலாம். தேவன் அதைக் கேட்போருக்கு ஆசீர்வாதமாக்குவார். வேத வாக்கியங்கள் ‘‘எல்லாம்’’ பயனுள்ளவை! (2 தீமோ 3:16,17).

*3) தெரிந்தெடுத்த கருத்தை அல்லது வசனத்தை அசைபோடுவது போல் ஜெபித்து சிந்தித்து, ஜெபித்து சிந்தித்து, ஜெபித்து சிந்தித்துக் கொண்டேயிருங்கள்.*

பிரசங்கத்தை நீங்கள் சரியமைக்குமுன் பிரசங்கம் உங்களைச் சரியமைத்துவிடவேண்டும். தேவனிடமிருந்து வெளிப்பாடுகளைப் பெற்றபோது தானியேல், ''என் நினைவுகளால் மிகவும் கலங்கினேன்; என் முகம் வேறுபட்டது; இந்தக் காரியத்தை என் மனதிலே வைத்துக்கொண்டேன்... நான் சோர்படைந்து, சில நாள் வியாதிப்பட்டிருந்தேன்... அந்தத் தரிசனத்தினால் திகைத்துக்கொண்டிருந்தேன்'' என்றான் (தானி 7:28; 8:27). மனது, உடல், ஆன்மா, சமூக வாழ்வு ஆகிய வாழ்வின் அத்தனைப் பகுதிகளிலும் அவன் பாதிக்கப்பட்டிருந்ததைக் கவனியுங்கள். சீக்கிரத்தில் பிரசவிக்கப்போகிற ஒரு பெண்ணின் நிலை போன்றது அது.

விளைச்சலின் பலனை ''முதன்முதல்'' பெறவேண்டியவன் உழைக்கும் விவசாயியே (2 தீமோ 2:6). பிரசங்கிக்கப்போகிற சத்தியங்களுக்கு உங்களை அர்ப்பணியுங்கள். அவை முதலாவது உங்கள் வாழ்க்கைக்குரியவை. செய்தியை செய்தியாளரிடமிருந்து பிரித்தல் தவறு. ''நீ என் பிரமாணங்களை எடுத்துரைக்க... என்ன நியாயமுண்டு?... என் வார்த்தைகளை உனக்குப் பின்னாக எறிந்துபோடுகிறாய்'' என்று மாய்மாலப் பிரசங்கிக்கு தேவன் சவாலிடுகிறார் (சங் 50:16-21). வைத்தியனே, உன்னையே குணமாக்கிக்கொள்!

''பிரசங்கிப்பதை அப்பியாசி!'' இது முற்றிலும் சரி. ஆனால் ''அப்பியாசிப்பதையே பிரசங்கி'' என்பதற்கு விளக்கம் தேவை. எந்தப் பிரசங்கியும் பூரணப்பட்டவனல்ல. அப்படியானால் அவன் பூரணத்தைப் போதிக்கக்கூடாதா? நான் இன்னும் மோட்சத்திற்குப் போகவில்லை; ஆனால் நான் மோட்சத்தைப் பற்றிப் பிரசங்கிப்பதில் தவறில்லை என்றே எண்ணுகிறேன்! நமது அனுபவத்தையல்ல, தேவ வசனத்தையே பிரசங்கிக்கவேண்டும்.

வார்த்தை இயேசுவில் மாம்சமானது. நாம் முழுவதும் செய்தியின் பிடிப்பிற்குள் வந்துவிடவேண்டும். வேதப்பாணியில் பிரசங்கிக்க சரியான ஆயத்தம் இதுவே. வெறுமனே தலையில் உருவாகும் பிரசங்கங்கள் தலைகளுக்குத்தான் போகும். இதயமே இதயங்களைச் சந்திக்கும் (அப் 2:37). ''ஆழத்தை ஆழம் கூப்பிடுகிறது'' (சங் 42:7).



*4) பிரசங்கத்தை அமைப்பாய்க் கட்டத் தேவையானவற்றைச் சேகரியுங்கள்.*

சமையல் துவங்குமுன் காய்கறி, எண்ணெய், மற்றும் பொருட்கள் யாவும் ஆயத்தமாய் இருக்கவேண்டுமல்லவா? ஒரு நாள் காலை சிற்றுண்டி தயாரித்த விதத்தை மணமாகா மிஷனரிச் சகோதரர்கள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ''உப்புமா செய்யலாமென்று தீர்மானித்தோம். ரவை இல்லை என்று ஒருவர் சொன்னார். அடுத்தவர் கடைக்கு விரைந்து ரவை வாங்கிவந்தார். அப்பொழுதுதான் எண்ணெய் இல்லை என்று தெரிய வந்தது. இன்னொருவர் கடைக்கு ஓடினார். அடுப்பைப் பற்றவைக்க நினைத்தபோது மண்ணெண்ணெயும் இல்லை. இப்படி... எப்படியோ சமைத்து முடித்தோம். மணி பத்து. பசி பிடுங்கியது. சாப்பிட உட்கார்ந்தால் தட்டுகள் இன்னும் கழுவப்படவில்லை!'' அநேக பிரசங்கங்கள் இப்படித்தான் ஆயத்தம்பண்ணப்படுகின்றன.

வேதாகமச் சொல்லகராதி (Concordance) ஒன்றைப் பயன்படுத்தி தலைப்புக்குப் பொருத்தமான ஒத்துவாக்கியங்களைக் குறித்துக்கொள்ளுங்கள். வசனத்தைக் கொண்டே வசனத்தை விளக்குவதற்கு நிகரில்லை. சிறுகதைகளைத் தெரிந்தெடுங்கள். பிரசங்கத்திற்கு அவை ஜன்னல்கள் போல. ஆனால் அதிகம் வேண்டாம். சான்றோர் கூற்றுக்களைச் சேகரியுங்கள். சத்தியத்தை விளக்க இயேசுவும் பவுலும் பழமொழிகளைத் தாராளமாய்ப் பயன்படுத்தினர் (லூக் 4:23; அப் 17:28). பிறர் சொன்னதைச் சொல்லாதவன் சொல்லுவதை யார் சொல்லுவார்? முதுமொழிகளும் துணுக்குகளும் பிரசங்கத்திற்கு வாசனைப்பொருட்களாகும்.

*5) எல்லாக் கவனத்தோடும் பிரசங்கத்தை ஓர் அமைப்புக்குள் கொண்டுவாருங்கள்.*

தேவன் மிகப்பெரிய கட்டிட வல்லுநர். வேதம் முழுவதிலும் கட்டுமான அழகைக் காணலாம். இந்த நிலையில் ஆயத்தத்திற்காக நீங்கள் செலவிடும் நேரம் எவ்வளவு ஆசீர்வாதமானதென்பதைப் பிரசங்கிக்கும் போது உணருவீர்கள். மத்தேயு 10:20ஐ மேற்கோள்காட்டும் சோம்பேறிப் பிரசங்கிகளைப் பின்பற்றாதீர்கள். அது பிரசங்கபீடத்தையல்ல, நீதிமன்றப் பீடத்தைக் குறிக்கும் வேதப் பகுதி!

அடிப்படையாக ஒவ்வொரு பிரசங்கத்திற்கும் முன்னுரை, நடுப்பகுதி, முடிவுரை என்று மூன்று பிரிவுகள் இருக்கவேண்டும். சபையாரின் கவ

னத்தை ஈர்த்து, பேசவிருக்கும் பொருள்மீது அவர்களுக்கு விருப்பம் உண்டாக்குவதே முன்னுரையின் நோக்கம். முடிவுரையில் பிரசங்கத்தின் சாராம்சத்தைச் சுருங்கக் கூறி, கேட்போரைச் செயல்பட அழைக்கிறோம். பெந்தெகொஸ்தே நாளன்று பேதுருவின் பிரசங்கம் முன் ஆயத்தமில் லாதது. எனினும் இப்பாணியிலேயே அமைக்கப்பட்டிருந்தது.

பேச்சுத் தொடர்புக்காக தேவனருளியதே மொழியென்பது. உங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த கச்சிதமான சொற்களைத் தெரிந்தெடுங் கள். சொல்லகராதியைப் (Dictionary) பயன்படுத்துவது நல்லது. அழகை ரசிக்காதோர் யார்? அடுக்குமொழி அனைவரையும் அசைத்துவிடும். துணியை வாங்கி அப்படியே சுற்றிக்கொள்ளுகிறோமா? இல்லை! அதைப் பொருத்தமாகத் தைக்கிறோம். நிறங்களை ஏற்றபடி இணைக்கிறோம். பைத்தியப் பிரசங்கத்தினாலல்ல, பிரசங்கத்தின் பைத்தியத்தினால் தேவன் மக்களை இரட்சிக்கிறார்! (1 கொரி 1:21).

ஒருவேளை நீங்கள் கல்வியறிவில் குறைந்தவராயிருக்கலாம். அப் படியானால் பிரசங்க ஆயத்தத்திற்கு இவ்வளவு எழுத்துவேலை முடியாது போகலாம். அதைத் துர்ப்பாக்கியமெனக் கருதத் தேவையில்லை. பிரசங்கத்தில் சொல்லலங்காரமும், கட்டமைப்பும் இருக்கிறதோ இல் லையோ, அதில் ஆவியின் வல்லமை நிரம்பியிராவிட்டால் கனியிராது (1 கொரி 2:4). பிரசங்க ஆயத்தத்தில் உங்களை முழுமையாய் ஊற்றி முடிந்த அளவு செய்யுங்கள். சோம்பேறித்தனம்தான் தவறு (மத் 25:15,26).

பிரசங்கக் குறிப்புகளைத் தெளிவாய் எழுதுங்கள். குறிப்புத்தாள் குழப்பமாயிருந்தால் பிரசங்கமும் அப்படித்தானிருக்கும். அமைப்பில்லா பிரசங்கம் மக்களுக்குக் கடுப்புண்டாக்கும். குறிப்புகளை மையினால் எழுதவேண்டாம். வியர்வைத் துளிகளால் அழிந்துவிடும். குறிப்புத்தாளின் அளவு வேதப்புத்தகத்திற்குள் வைக்க ஏற்றதாயிருக்கவேண்டும். கரிச் சட்டியைச் சாப்பாட்டு மேசைக்குக் கொண்டுவர மாட்டோமல்லவா? சமைப்பதைப் போலவே பரிமாறுவதும் ஒரு கலை. இறுதியாகக் குறிப்பு களை எழுதும்போது இதை நினைவிற் கொள்க.

துவக்கத்தில் இப்படியெல்லாம் ஆயத்தம் செய்வது உங்களுக்குக் கடினமாயிருக்கலாம். உங்கள் கருத்துக்களை, குறிப்புகளை மற்ற பிரசங்கி களிடம் காட்டி உதவி நாடுங்கள். பிறருதவி நாடுவது ஆன்மீக முதிர்ச்சிக்கு அடையாளம் (1 கொரி 12:20,21). பில்லி கிரகாம் இன்றும் பிரசங்க ஆயத்



தத்திற்குத் தனது உடன் ஊழியரோடு கலந்தாலோசிக்கிறார். பிரசங்கக் குறிப்புகள் கொண்ட பல புத்தகங்களும் உண்டு. பிரசங்கிக்கத் துவங்கு வோர் இவற்றைப் பயன்படுத்தலாம்; நாளடைவில் தாங்களாகவே ஆயத்தம்பண்ணக் கற்றுவிடுவர். நடைவண்டி வைத்துக் குழந்தைகள் நடக்கப் பழகுவது தவறா?

### *ஆ) பிரசங்கிப்பது எப்படி?*

பிரசங்கிக்கச் செல்லுமுன் புதிய அபிஷேகம் பெற தேவ சமுகத்தில் விழுந்துகிடக்கவேண்டும் (ஏசா 61:1; அப் 4:31ஆ). மன்னவர்முன் உடைந்து நிற்பவன் மனிதர்முன் உரமாய் நிற்பான் (உபா 10:8; 1 இரா 17:1). அம்பலத்திலல்ல, அறையிலேயே வெற்றியும் தோல்வியும் நிச்ச யிக்கப்படும். தடையின்றி வார்த்தை வர ஜெபியுங்கள் (எபே 6:19). கேட் போரை ஆயத்தப்படுத்த தேவனிடம் மன்றாடுங்கள்.

சிலர் உபவாசத்தோடு பிரசங்கிப்பர். மற்றவர்களுக்கு வயிறு வெறுமை யாயிருந்தால் பேச முடியாது. நான் ஆயத்தத்தின்போதே உபவாசித்துவிடு கிறேன். எப்படியானாலும், உண்டி சிறுத்தல் பிரசங்கிக்கு அழகு!

பிரசங்கிக்குமுன் பல் துலக்குங்கள். அப்பொழுது வார்த்தைகள் தெளிவாயிருக்கும். வாய் சுத்தம் செய்தபின் எதையும் சாப்பிடவேண்டாம்.

பேசச் செல்லுமுன் குளித்தல் புத்துணர்வளிக்கும். எடுப்பாய் உடுத் துங்கள். மிடுக்கான தோற்றங்கள் வேண்டாம். வெப்பமான கால நிலை யில் ''டை'' கட்டுவது அர்த்தமற்றது! எளிமைக்குத்தான் மதிப்பு. பழக்க மில்லாத உடைகளை அணிந்துகொண்டு பிரசங்கிக்காதீர்கள். எப்பொழு தும்போலிருங்கள். இல்லையேல் உங்களுக்கு முடிந்ததையும் செய்ய முடியாமற்போவீர்கள் (1 சாமு 17:38-40).

புன்முறுவலோடு சபையாரை வாழ்த்திப் பேசத் துவங்குங்கள். கற்சிலை போல் நிற்காதீர்கள். கேட்போரின் எதிரொலிப் பாவனைகளைக் கவனிக்கவேண்டும். திருதிருவென்று விழித்தால் சொன்னதைக் கூடுதல் விளக்கிச் சொல்லவேண்டுமெனப் பொருள். செத்தவர்கள்போல் மக்கள் உட்கார்ந்திருந்தால் அப்பொழுதுதான் நீங்கள் நகைச்சுவையான தொன்றைச் சொல்லவேண்டும், அல்லது ஒரு கவி பாடவேண்டுமென்று புரிந்துகொள்ளவேண்டும். நீங்கள் பிரசங்கபீடத்தைவிட்டு எப்பொழுது இறங்கவேண்டுமென்பதையும் அவர்கள் முகங்கள் சொல்லும்!

வசனங்களை நீங்களே எடுத்து வாசியுங்கள். அப்பொழுதுதான் யாவருக்கும் தெளிவாய்க் கேட்கும். மட்டுமல்ல, எந்த வார்த்தையை அல்லது சொற்றொடரை அழுத்திச் சொல்லவேண்டுமென்று உங்களுக்குத்தானே தெரியும். அப்படியே, நீங்கள் அந்த வசனப்பகுதியைப் பார்க்கும்போது இடம் பொருள் காலம் தெரிந்து அதை விளக்க வசதியாயிருக்கும். மேலும், ஆங்காங்கே ஓரங்களில் நீங்கள் குறித்துவைத்திருப்பவையும் சரியாகப் பயன்படும்.

ஒரே தொனியில் பேசிக்கொண்டிருக்கக்கூடாது. ஏற்றமும் இறக்கமும் தேவை. கத்துவது வல்லமை என்று பொருள்படாது! மைக்கை அதற்குரிய ஸ்டான்டில் வைத்துவிடுங்கள். திரையுலகு பாணியெல்லாம் வேண்டாம். இன்னொரு பிரசங்கியாரின் பாணியைக் காப்பியடிக்காதீர்கள். தேவன் உங்களுக்கென்று வைத்திருக்கும் ஒரிஜினலை இழந்துவிடுவீர்கள். உருக்கமாய், உற்சாகமாய்ப் பேசுங்கள். தொனிப்பாய், தெளிவாய்ப் பிரசங்கியுங்கள். பிரசங்கபீடத்தில் நெருப்பிருந்தால் யார் கவனியாதிருக்க முடியும்? (யோ 5:35; லூக் 24:32).

தாளிலுள்ள குறிப்புகளை அப்படியே பின்பற்றுங்கள். ஆவியானவர் எதையாவது மாற்றும்படி தெளிவாய் நடத்தினால் வளைந்து கொடுங்கள். அல்லேலூயா, ஸ்தோத்திரம் என்பவையெல்லாம் இடைவெளியை நிரப்புவதற்கான சொற்களல்ல! பிரசங்கம் சத்தாயிருக்கவேண்டும். அவ்வளவு காலமாகியும் கெட்டியான உணவையல்ல, பாலுணவையே விசுவாசிகளுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறதேயென எபிரெய நிருப ஆக்கியோன் புலம்பினான் (எபி 5:12-14). இன்றோ பல பிரசங்கபீடங்களிலிருந்து பால்கூட சுத்தமாய்க் கிடைப்பதில்லை! இது பாலில் தண்ணீர் சேர்த்ததா, தண்ணீரில் பால் சேர்த்ததா என்றும் சிலவேளை நினைக்கத் தோன்றுகிறது! கதைகளையும், அனுபவங்களையுமல்ல, ''வசனத்தைப்'' பிரசங்கியுங்கள்.

தேவ மகிமையே பிரசங்கிப்பதில் முக்கிய நோக்காயிருக்கவேண்டும். மனிதரைப் பிரியப்படுத்துகிறவன் பிரசங்க வேலையை விட்டுவிட வேண்டும் (கலா 1:10; 2 கொரி 4:2). தாளம்போட இது காலமல்ல.

ஆரம்பிக்க முடியாதிருப்பது குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறேன். சில பிரசங்கிமாருக்கு நிறுத்த முடியாது! எப்படி, எங்கு, எதில் நிறுத்துவதென்று தெரியாது வனாந்தரத்தில் சுற்றிச் சுற்றி வருவர். மீன்கள் வலைக்குள் வந்துவிட்டதென்று தெரிந்தபின் இழுப்பதில் தாமதம் கூடாது. Stand up, Speak up, Shut up! இது பிரசங்கிகளுக்குச் சொல்லப்படும் பொன்மொழி!



தடையின்றிப் பிரசங்கித்தால் தங்களைப் புகழ்ந்துகொள்வதும், தடுமாறினால் மக்களைப் பழிசாட்டுவதும் பிரசங்கிகள் வழக்கம். இது தவறு. அவிசுவாசிகளையும், அது போன்றே விசுவாசிகளையும் அந்தகாரத்திலிருந்து விடுவிக்கும் போராட்டமே பிரசங்கமாகும் (2 கொரி 4:4; வெளி 3:17,18). அது சுலபமா? ஆனால் உத்தமப் பிரசங்கி எவனும் பவுலுடன் சேர்ந்து, ''கர்த்தரோ எனக்குத் துணை நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காக... என்னைப் பலப்படுத்தினார்'' எனச் சாட்சியிடலாம் (2 தீமோ 4:17).

பிரசங்கம் முடிந்ததும் சற்று நேரம் தேவனோடு தனித்துச் செலவிடுங்கள். தேவனுக்கும், உங்களுக்கும், மக்களுக்கும் முன்பாக உண்மையாய்ப் பிரசங்கித்தீர்களாவென ஆராய்ந்துபாருங்கள். தெரிந்தோ தெரியாமலோ தேவ மகிமையைத் தொட்டிருந்தால் அறிக்கையிடுங்கள். ஆகாயத்துப் பறவைகள் பொறுக்கிக்கொண்டு போகாதபடி விதைகளைப் புதைத்து மறைக்க தேவனைக் கேளுங்கள். நீர்ப்பாய்ச்ச ஓர் அப்பொல்லோவை அனுப்ப வேண்டுங்கள். முப்பது, அறுபது, நூறு மடங்கு விளைச்சலை உரிமைபாராட்டி மன்றாடுங்கள்.

பிரசங்கம் செய்துகொண்டிருக்கும்போதே சில புதிய கருத்துக்கள் வந்திருக்கும். அவற்றைப் பின்னர் உங்களது குறிப்புத்தாளில் சேர்த்துக்கொள்ளுங்கள். எப்பொழுது, எங்கு அந்தப் பிரசங்கத்தைச் செய்தீர்களென்பதையும் குறித்துக்கொள்ளுங்கள். அதே பிரசங்கத்தை மறுபடியும் பிரசங்கிப்பதில் தவறேதுமில்லை—ஆனால் அதே சபையாருக்கல்ல!

*இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி? (How to Preach Better)* என்ற தலைப்பில் நடத்தப்பட்ட 3 நாள் கருத்தரங்கில் நான் கொடுத்த செய்தித் தொகுப்பு 6 ஒளித்தட்டுகளில் உண்டு.

# 12
# பிசாசுகளைத் துரத்துவோம்!

1965ஆம் ஆண்டு நான் மாணவனாயிருக்கும்போது முதன்முறையாகப் பிசாசுகளைத் துரத்தும் அனுபவம் எனக்குக் கிட்டியது. இளம் வாலிபனாகவும், ஆன்மீகக் குழந்தையாகவுமிருந்த எனக்குப் பிசாசுகளைப் பற்றிய அறிவு மிகவும் குறைவு. மாலைத் தியானத்திற்காகக் காடுகளுக்குள் செல்வது எனது வழக்கம். ஒரு நாள் ஒரு கிழவி அலறிக்கொண்டு வழியில் கிடப்பதைக் கண்டேன். எனக்கு ஒரு பக்கம் பயம்தான். ஆனாலும் என்னைத் தைரியப்படுத்திக்கொண்டு, இயேசுவின் நாமத்தில் பிசாசை அதட்டினேன். மறுநாள் மாலை அவள் தெளிவுடன் அங்கு நடமாடிக் கொண்டிருந்தாள். கரங்கூப்பி எனக்கு நன்றி தெரிவித்தாள். அவளுக்கு நற்செய்தியைப் பகிர்ந்தேன்.

சில வாரங்களுக்குப்பின் பில்லிசூனியக் கட்டினால் அவதியுற்றுக் கொண்டிருந்த தனது அண்டை வீட்டுக் குடும்பத்தினரைப்பற்றி எனது ஜெபத்தோழன் என்னோடு பகிர்ந்துகொண்டான். அவ்வீட்டிலுள்ள அனைவரும் திடீரென்று அசாதாரணமாய்ச் சிரிப்பார்களாம், குரங்குகள்போல் உடலைச் சொரிவார்களாம், பல இரவுகள் தூக்கமேயில்லையாம். எனது நண்பனும் நானும் நன்கு ஜெபித்துவிடடு அக்குடும்பத்தைச் சந்திக்கச் சென்றோம். அவர்களுக்கு இயேசுவை அறிவித்து, அசுத்த ஆவிகளை அதட்டினோம். உடனே விடுதலை பெற்றனர். இரவில் நன்கு தூங்கினர்.



### *அதிகாரமா, வல்லமையா?*

பிசாசுகளைக் குறித்துத் தெளிவாக அறிந்துகொள்ளும்படி இவ்விரு தொடர்ந்த அனுபவங்களும் வேதத்தை ஆராய எனக்கு ஊக்கமூட்டின. பிசாசுகளுக்கிருப்பது வல்லமை, விசுவாசிகளுக்கிருப்பதோ அதிகாரம்; அதிகாரத்திற்கு முன் வல்லமை தலைவணங்கும்—இதுவே நான் கண்டறிந்த முதல் சத்தியம். சத்துருவின் சகல ‘‘வல்லமையையும்’’ மேற்கொள்ள உங்களுக்கு ‘‘அதிகாரம்’’ கொடுக்கிறேன் என்றார் இயேசு (லூக் 10:19). மெலிந்த காவல்துறை ஊழியர் ஒருவரால் விரைந்துவரும் சக்திமிகுந்த வாகனத்தை நிறுத்த முடிகிறது; ஏனென்றால் அவருக்கிருப்பது அதிகாரம்! இருப்புப்பாதை அதிகாரி ஒருவரால் விரையும் எஞ்சினைக் கொடிகாட்டி நிறுத்த முடிகிறது; ஏனென்றால், அவருக்கிருப்பது அதிகாரம்! பரிசுத்தவான்களிலேயே பலங்குன்றியவனும் பிசாசுகளைத் தலைதெறிக்க ஓடச்செய்யலாம்!

### *இறையியலும், பிசாசியலும்*

இறையியல் என்பது தேவனைக் குறித்த அறிவாகும். பிசாசியல் என்பது சாத்தானையும் அவனது தூதர்களையும குறித்த அறிவாகும். பிசாசுகள் இருக்கின்றனவா என்பதே பல சபைகளுக்குச் சந்தேகம். பல வேதாகமக் கல்லூரிகளில் இறையியல் கற்றுக்கொடுக்கப்படுகிறது; பிசாசியல் குறிப்பிடப்படுவதேயில்லை. இதைச் சத்துரு சாதகமாக்கிக்கொண்டு கிறிஸ்துவத்திற்குள் புகுந்து விளையாடிக்கொண்டிருக்கிறான். மனிதனது வீழ்ச்சியை விளக்குமுன்னரே சாத்தானின் குணத்தை வேதம் அப்பட்டமாக்குகிறதென்பதை அறியீர்களா? (ஆதி 3:1). பிசாசின் தந்திரங்கள் தங்களுக்குத் தெரியாதவைகளல்ல என்றனர் அப்போஸ்தலர் (2 கொரி 22:11). நாம் தெரியாதிருக்கலாமோ? வேதத்திலிருந்து பிசாசுகளைக் குறித்து ஏராளம் அறிந்துகொள்ளலாம். இதோ சில அடிப்படை உண்மைகள்—

அ) பிசாசுகளுக்கு மனித அறிவுக்கு அப்பாற்பட்ட ஞானமுண்டு. ‘‘நீ ஞானத்தால் நிறைந்தவன்’’ என்று லூசிபரைக் குறித்துச் சொல்லப்பட்டது (எசேக் 28:12). பிசாசுகளுக்கு மனுக்குலத்தோடு பல்லாயிரமாண்டு அனுபவமுண்டு. எங்கே தாக்கினால் மனிதன் விழுவானென்று அவைகளுக்கு நன்றாகவே தெரியும். தந்திரமே சாத்தானின் முதற்குணம் (ஆதி 3:1).

ஆ) பிசாசுகளுக்கு அராதாரணமான பலம் உண்டு. அசுத்த ஆவியுள்ள ஒருவனால் இரும்புச் சங்கிலிகளையும் விலங்குகளையும் தகர்த்தெறிய

முடிந்தது. ஒருவனும் அவனை அடக்க முடியவில்லை (மாற் 5:1-4). பொல்லாத ஆவி பிடித்திருந்த இன்னொருவனால் ஏழு வாலிபரைக் காயப்படுத்தி நிர்வாணமாய்த் துரத்திவிட முடிந்தது (அப் 19:14-16).

இ) பிசாசுகளுக்கு அழிப்பதே தொழில். ''திருடவும், கொல்லவும், அழிக்கவுமே'' வரும் திருடன் என்று இயேசு பிசாசைக் குறிப்பிட்டார் (யோ 10:10). ஊமையாக்குவது (மத் 9:32,33), குருடாக்குவது (மத் 12:22), அங்கவீனமாக்குவது (லூக் 13:11-13,16), வலிப்புண்டாக்குவது (மத் 17:15-18), புத்தியிழக்கச் செய்வது (லூக் 8:27), இப்படிச் பல சேதங்களை அசுத்த ஆவிகள் உண்டாக்கும். தங்கள் பிடிப்பிற்குள் வந்தவர்களைத் தற்கொலை செய்யத் தூண்டுவதும் அசுத்த ஆவிகளுக்குப் பிரியம் (மாற் 9:22).

ஈ) பிசாசின் பட்டாளம் நேர்த்தியான அமைப்புள்ளது. துரைத்த னங்கள், அதிகாரங்கள், லோகாதிபதிகள், சேனைகள் என்று சத்துருவுக்கு வரிசை கள் உண்டு (எபே 6:12). மட்டுமல்ல, அவனது இராஜ்யம் பிரியாது நிற்கிறது (மத் 12:26).

உ) பிசாசுகளுக்கு அற்புதம் செய்யும் சக்திகளுண்டு. தவறாது குறி சொல்லும் ஆவிகளெல்லாம் உண்டு (அப் 16:16). கடைசிகால விசுவாசத் துரோகத்தை முன்னறிவிக்கும்போது சாத்தானின் பொய்யான அற்புதங் களைக் குறித்துப் பவுல் எழுதினான் (1 தெச 2:9).

### *துரதறிவிப்போம், துரத்துவோம்!*

பிசாசு துரத்துவதை நற்செய்திப் பணியிலிருந்து பிரிக்கவியலாது. பன்னிருவரைப் பணிக்கும்போது, ''பிரசங்கியுங்கள்... சுகமாக்குங்கள்... பிசாசுகளைத் துரத்துங்கள்'' என்றார் இயேசு (மத் 10:1-8). நற்செய்திப் பேராணையிலும் பிசாசுகளைத் துரத்துதலை இயேசு இணைத்தார் (மாற் 16:15-17). நற்செய்திப் புத்தகங்களில் காணப்படும் இயேசுவின் மாதி ரியை அப்போஸ்தலரும் ஆதிச் சபையினரும் அப்படியே பின்பற்றியதை நடபடிகளில் காண்கிறோம்.

இறையரசின் செய்தியைப் பறைசாற்றுவதே நற்செய்திப் பணியாம். பிசாசுகளைத் துரத்துகையில் இறையரசின் வல்லமை வெளிக்காட்டப் படுகிறது: ''நான் தேவனது விரலினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால் தேவ இராஜ்யம் உங்களிடம் வந்திருக்கிறதே'' என்று தமது ஊழியத்திற்கு நிரூபணமாய் இயேசு அறிவித்தார் (லூக் 11:20).



ஒன்று அல்லது பல அசுத்த ஆவிகள் ஒரு மனிதனின் உடலில் குடி புகுந்து தங்கள் விருப்பம்போல் அவனை ஆட்டிப்படைக்கும் நிலையே பிசாசு பிடித்தல் எனப்படும். முழு மனிதனுக்கும் ஊழியம் செய்யாத பட்சத்தில், முழுச் சுவிசேஷத்தையும் பிரசங்கிக்கிறோமெனச் சொல்ல முடியாது. பிசாசு துரத்தப்படும்வரை பிசாசு பிடித்தவன் தெளிவான மன நிலையில் நற்செய்தியைக் கேட்க முடியாது (மாற் 5:15).

பிசாசு பிடித்தவர்களை விடுதலையாக்குவது எப்படியென இங்கு கற்றுக்கொள்வோம்.

### *1. ஆவியைப் பகுத்தறியுங்கள்! (Discerning)*

ஏமாற்றுவதில் பிசாசுக்கு நிகரில்லை. எளிதில் தன்னை அடையாளங் காட்டமாட்டான். பிசாசுகளைத் துரத்தச் செல்லுவோரை ஏமாற்ற பல வேடங்கள் போடுவான். தன்னை ஒளியின் தூதனாகவும், தனது ஊழியரை நீதியின் ஊழியராகவும் காட்டுவான் (2 கொரி 11:14,15). பகுத்தறியும் கலையில் வளர நம்மைப் பொறுத்தவரை நாம் மூன்று காரியங்களைச் செய்யவேண்டும்.

அ) முதலாவது, நற்செய்திகளிலும், நடபடிகளிலும் ஆண்டவரும் அப் போஸ்தலரும் பிசாசுகளை எவ்விதம் அடையாளங்கண்டு துரத்தினார் களென்று படியுங்கள். இதோ சில வசனக் குறிப்புகள்: மத் 8:28-34; 9:32-34; 12:22-29; 17:14-20; மாற் 1:21-28; 7:25-30; லூக் 8:2; 11:4; 13:10-21; அப் 8:7; 16:16-18. நமது படிப்பினைக்கென்றே இச்சம்ப வங்கள் விபரமாக எழுதப்பட்டுள்ளன.

ஆ) அடுத்து, ஞானத்திற்காக ஜெபியுங்கள். பிசாசு விரட்டும் ஊழி யத்தில் ஆவிகளைப் பகுத்தறிதலே மிகத் தேவையான வரமாகும். அதை விரும்பி தேவனிடம் குறிப்பாய்க் கேளுங்கள். அந்த அடிமைப் பெண் சொன்னதெல்லாம் அப்படியே உண்மையாயிருந்தாலும் அவளுக்குள்ளி ருப்பது குறி சொல்லும் ஆவியென்று பவுல் கண்டுகொண்டான் (அப் 16:16-18). தமது பிள்ளைகளுக்கு இவ்வரத்தைக் கொடுக்க தேவன் விரும்புகிறார். ஆனால் நாம் நமது ஜெபத்திலும் தியானத்திலும் கவனக் குறைவாயிருந்தால் பகுத்தறிவில் வளர்வதறிது. ''இளைப்படைந்தவ னுக்குச் சமயத்திற்கேற்ற வார்த்தை சொல்ல நான் அறியும்படி கர்த்தராகிய ஆண்டவர் எனக்குக் கல்விமானின் நாவைத் தந்தருளினார்; காலை தோறும் என்னை எழுப்புகிறார்; கற்றுக்கொள்ளுகிறவர்களைப்போல நான்

கேட்கும்படி என் செவியைக் கவனிக்கச் செய்கிறார்'' என்று இயேசு தீர்க்கதரிசனத்தில் சாட்சியிட்டுள்ளார் (ஏசா 50:4).

இ) மூன்றாவது, விடுதலை ஊழியத்தில் தேவனால் சிறப்பாய்ப் பயன் படுத்தப்படும் ஊழியரைக் கவனியுங்கள். இயேசு பிசாசுகளை எவ்விதம் துரத்தினாரென சீடர்கள் கூர்ந்து கவனித்தனர். கேள்விகள் கேட்டுப் பல காரியங்களைக் கற்றுக்கொண்டனர் (மத் 17:18,19). பிசாசுகளைத் துரத்து வதில் பேதுருவும் பவுலும் தேவனால் வல்லமையாய்ப் பயன்படுத்தப் பட்டனர் (அப் 5:15,16; 19:11,12). இன்றும் இது போன்ற ஊழியருண்டு. அவர்களிடமிருந்து நடைமுறைப் படிப்பினைகள் பல பெறலாம்.

ஆவியைப் பகுத்தறிந்தவுடன்—

### *2. பிசாசைத் துரத்துங்கள்! (Driving)*

#### *அ) அதிகாரத்தினால்*

துவக்கத்தில் குறிப்பிட்டபடி பிசாசுக்கு விரோதமான நமது பிரதான ஆயுதம் கிறிஸ்துவினால் நாம் பெற்ற அதிகாரமே. பிதாவானவர் குமார னுக்கு அதிகாரம் கொடுத்தார் (மத் 28:18; மாற் 1:27). கிறிஸ்து அந்த அதிகாரத்தை முதலில் பன்னிருவருக்கும் (மத் 10:1; மாற் 6:7), அடுத்து, அந்த 70 பேருக்கும் (லூக் 10:1,19), இறுதியாக அனைத்து விசுவாசி களுக்கும் கொடுத்துவிட்டார் (மாற் 16:17). தேவன் நமக்களித்துள்ள நிலையினாலேயே இந்த அதிகாரத்தை நாம் அனுபவிக்க முடிகிறது. நமது பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டுள்ளன. எனவேதான் பிசாசுகள் நமக்குக் கீழ்ப்படிகின்றன (லூக் 10:18-20). நாம் கிறிஸ்துவின் ஸ்தானாபதி களாயிருக்கிறோம். எனவேதான் தோற்கடிக்கப்பட்ட சத்துரு நமக்குமுன் தலைவணங்குகிறான் (2 கொரி 5:20அ).

ஆனால் நமது நிலையின்படியான இந்த அதிகாரம் நடைமுறையில் செயல்படுவது எந்த அளவு நாம் கிறிஸ்துவின் அதிகாரத்திற்கு அடி பணிந்துள்ளோம் என்பதைப் பொருத்தே உள்ளது. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன் சுகமான சம்பவத்தைவிட இத்தத்துவத்தைச் சிறப்பாக விளக்குவது வேறொன்றுமில்லை. தான் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருந் தும் தனது சேவகர் தனக்குக் கீழ்ப்படிகிறார்களென்று அவன் சொன்ன போது, பிதாவின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டிருந்த இயேசுவின் அதிகாரத்தையே அவன் அவ்விதம் சுட்டிக்காட்டினான் (மத் 8:8,9). இயேசு



தமது பிதாவுக்கு முழுமையாகக் கீழ்ப்படிந்ததால், பிசாசுகளும் இயேசு வுக்கு முணங்காமல் கீழ்ப்படிந்தன. கீழ்க்கண்ட வசனங்கள் மாறாத இச்சத்தியத்தை இன்னும் தெளிவுபடுத்துகின்றன.

''உங்கள் கீழ்ப்படிதல் யாவருக்கும் தெரிய வந்திருக்கிறது... தேவன் சீக்கிரம் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார்'' (ரோ 16:19,20).

''தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்'' (யாக் 4:7).

''ஆ, என் ஜனம் எனக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேல் என் வழிகளில் நடந்தால் நலமாயிருக்கும்! நான் சீக்கிரத்தில் அவர்கள் எதிராளிகளைத் தாழ்த்துவேன்'' (சங் 81:13,14).

நாம் பிசாசுகளைத் துரத்துவது ''நமது'' பரிசுத்தத்தினாலல்ல. எனினும், பிசாசுக்கு ''நம்மிடம் ஒன்றுமில்லை'' என நிச்சயித்துக் கொள்ளவேண் டும் (யோ 14:30). கீழ்ப்படியாமையிலும், இரகசிய பாவத்திலும் வாழ்ந்து கொண்டு பிசாசுகளைத் துரத்த முயல்வது பேராபத்து. ஸ்கேவாவின் குமாரருக்கு நேர்ந்தது தெரியுமல்லவா? (அப் 19:14-16). பாளையத்தி லிருந்து சாபத்தீடானது அகற்றப்படும்வரை ஆயி போன்ற சிறிய எதிரி யையும் துரத்த முடியாது! (யோசு 7). ஒளியில் நடந்து இயேசுவின் இரத்தத்தால் நெடுகவே சுத்திகரிக்கப்படுவது பிசாசுக்கெதிரான நமது சாட்சியை வலுப்படுத்தும் (வெளி 12:11). இயேசுவின் இரத்தம், இயேசு வின் நாமம் என்று மந்திரம்போல் சொல்லுவது ஒன்றையும் சாதிக்காது. நல்மனச்சாட்சி அத்தியாவசியம் (எபி 9:14). இப்படிச் சொல்வதால், பூரணமடைந்த பின்னரே பிசாசு விரட்டச் செல்லவேண்டும் என்றும் நினைத்துவிடக்கூடாது.

#### *ஆ) விசுவாசத்தினால்*

அதிகாரத்தோடு விசுவாசமும் வேண்டும். பிசாசு பிடித்த இளை ஞனைச் சீடர்கள் விடுவிக்க முடியாமற்போனதற்கு இயேசு சொன்ன முதற்காரணம் அவர்களது அவிசுவாசமே (மத் 17:19,20). பிசாசு துரத்து வதை மலையை நகர்த்துவதற்கு ஒப்பிட்டுப் பேசினார். ''மலையைப் பார்த்து'' கட்டளை கொடுங்கள் என்று சீடருக்குப் போதித்தார். ஆம், நாம் நேரடியாகப் பிசாசுக்கு ஆணையிடவேண்டும். இதோ, மாதிரிக்குச் சில கட்டளைச் சொற்கள்: ''அசுத்த ஆவியே இந்த மனிதனை விட்டுப் புறப் பட்டுப் போ!'' ''நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசு கிறிஸ்துவின்

நாமத்தினாலே உனக்குக் கட்டளையிடுகிறேன்!'' (மாற் 5:8; அப் 16:18). தேவன் அதிகாரத்தை நமக்குத் தருகிறார்; ''நாமமே'' விரட்டவேண்டும். உங்களைச் செய்யச் சொல்லியிருப்பதைச் செய்ய தேவனிடம் சொல்லாதிருங்கள்!

உபவாசத்தினாலும் ஜெபத்தினாலும் விசுவாசம் வலுவடைகிறது (மத் 17:20,21). தேவ வல்லமையைக் காண விரும்பினால் உபவாச ஜெப வேளைகளைத் தவறவிடக்கூடாது. எப்பொழுதும் ஆவியினால் நிறைந்திருங்கள். கர்த்தருக்கு முன் காத்திருந்து, அபிஷேகத்தைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள் (அப் 10:38). தினமும் போதுமான நேரம் தேவப் பிரசன்னத்தில் செலவிடுங்கள். ''உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்... சிங்கத்தின் மேலும், விரியன் பாம்பின் மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்'' (சங் 91:1,13).

செயல்படுத்துவதால் விசுவாசம் வளருகிறது. தங்களது விசுவாசத்தைப் பெருக்கும்படி வேண்டிய சீடருக்கு இயேசு தந்த பதில் அதுதான் (லூக் 17:5,6). நாம் செயலில் குதிக்கும்போது கர்த்தர் நம்மை உற்சாகப்படுத்தவே செய்கிறார். ''ஆண்டவரே, உமது நாமத்தினால் பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகின்றன'' என்று வியப்புடன் அந்த 70 பேர் திரும்பி வந்தனர் (லூக் 10:17). அப்படியானால், அப்படி நடக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை என்றுதானே பொருள்! ஆனாலும் அவர்கள் செயல்பட்டார்கள்! அதுவே இரகசியம்.

வசனத்திலுள்ள வாக்குகளைத் தியானிப்பதால் விசுவாசம் வளம் பெறுகிறது. வார்த்தையினால் இயேசு பிசாசுகளைத் துரத்தினார் (மத் 8:16). தேவ வசனம் நம்மில் நிலைத்திருக்கும்போதுதான் பொல்லாங்கனை மேற்கொள்ளும் பலவான்களாகிறோம் (1 யோ 2:14ஆ). வசனத்தால் நிறைந்திருங்கள். சத்துருவைச் சந்திக்கும்போது சரியான வசனத்தை ஆவியானவர் உங்களுக்கு நினைப்பூட்டுவார்.

***பிசாசு விரட்டுகையில் செய்யக்கூடாதவை:***

***அ) பயப்படாதீர்கள்!***

சத்துருவின்மேல் தமது சீடருக்கு அதிகாரம் கொடுக்கையில் ''ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது'' என்று இயேசு வாக்களித்தார் (லூக் 10:19). உலகிலிருக்கிறவனிலும் நமது உள்ளிலிருக்கிறவர் பெரியவரல்



லவா? (1 யோ 4:4). பில்லிசூனியக் கட்டிலிருப்போரை விடுவிக்க முற்படுகையில் எண்ணாகமம் 23:23ஐ நினைவுபடுத்திக்கொள்ளுங்கள். ''யாக்கோபுக்கு விரோதமான மந்திரவாதம் இல்லை, இஸ்ரவேலுக்கு விரோதமான குறிசொல்லுதலும் இல்லை.'' தைரியமாயிருங்கள். காயப்பட்ட சர்ப்பம் உங்கள் மீது சீறும். ஆனால் கர்த்தருடைய தூதன் உங்களைச் சூழப் பாளையமிறங்குவார் (சங் 34:7).

***ஆ) பிசாசுகளோடு உரையாடாதீர்கள்!***

சிலரிடம் இயேசு பெயரைக் கேட்டார், அவ்வளவுதான் (மாற் 5:9). பிசாசுகளைப் பேசவும் அவர் அனுமதிக்கவில்லை (லூக் 4:41). ''இனி இவனைப் பிடிக்கமாட்டேன்,'' ''இங்கிருந்து பாதாளத்திற்குப் போய்விடுவேன்'' என்றெல்லாம் அசுத்த ஆவிகளிடம் வாக்குமூலம் வாங்குவது அர்த்தமற்றது. ஆயிரம் வாக்குப்பண்ணி அத்தனையையும் மீறிவிடும். அவர்களது தலைவன் பொய்க்குப் பிதாவாச்சுதே! (யோ 8:44). அவனது தூதர்கள் பொய்யின் ஆவிகளாய்த்தானே இருப்பார்கள்! புகழ்பெற்ற இந்திய சுவிசேஷகர் ஒருவர் தினம் மாலைக்கூட்டம் முடிந்ததும் பிசாசுகளோடு உரையாடியும், வாக்குவாதம்பண்ணியும் நேரம் செலவிட்டார். முடிவில் அவர் வஞ்சிக்கப்பட்டு ஆயிரங்களை வழி பிசகச்செய்தார்.

***இ) பிசாசைச் சபிக்காதீர்கள்!***

பிசாசை அதட்டலாம், சபிக்கக்கூடாது. அதற்கு நமக்கு உரிமை இல்லை. பிரதான தூதன் மிகாவேலும் பிற தேவ தூதர்களுங்கூட பிசாசையோ அவனது தூதர்களையோ தூஷிக்க அஞ்சினர் (2 பேது 2:11; யூதா 9). அப்படியே, பிசாசைக் கட்டுவதற்கும் வேதத்தில் நேரடியான தெளிவான கட்டளையில்லை. ஆயிரமாண்டு ஆட்சியின்போது ஒரு தூதன் அதைச் செய்யும்படி நியமிக்கப்பட்டிருக்கிறது (வெளி 20:1,2). தெளிவாக நமக்குக் கட்டளையிடப்பட்டவைகளை மட்டும் செய்வோம். வரம்பை மீறக்கூடாது. அடாததை நாம் செய்ய முனைந்தால் பிசாசுக்கு அசட்டுச் சிரிப்புதான்!

***ஈ) பிசாசு பிடித்தவனைக் கொடுமைப்படுத்தாதீர்கள்!***

ஏற்கனவே பிசாசு அவனைப் பாதியாக்கி வைத்திருக்கிறான். நீங்கள் வேறு அவன் முடியைப் பிடித்திழுப்பது, அடிப்பது, கண்ணுக்குள் எண்ணெய் விடுவது, நெற்றியில் கை வைத்துக் கீழே தள்ளுவது, இப்படியெல்லாம் செய்யாதீர்கள். அதுபோல கூச்சலும் அவசிய மில்லை. பிசாசு என்ன செவிடா?

*உ) தனித்துச் செல்லாதீர்கள்!*

இயேசு தமது சீடரை இரண்டிரண்டு பேராக அனுப்பினார். ஒருவரை விட இருவர் எப்பொழுதுமே மேல். பிசாசுகளைத் துரத்துவதில் குழுவாகச் செயல்படுவதே சிறந்த ஊழிய முறை. ''அவர்கள்'' பிசாசுகளைத் துரத்து வார்களென்றார் இயேசு (மாற் 16:17). பாதாளத்தின் வாசல்கள் ''சபையை'' மேற்கொள்வதில்லை (மாற் 16:18).

*ஊ) அஞ்ஞான முறைகளைக் கையாடாதீர்கள்!*

பிசாசு பிடித்தவனை ஜெபித்த தண்ணீரைக் குடிக்கச் சொல்லுவது, சுவர் தரையெல்லாம் அதைத் தெளிப்பது, இவையெல்லாம் அஞ்ஞானி களின் பழக்கங்கள். வேண்டவே வேண்டாம்.

பிசாசைத் துரத்தியதும் விடுதலை பெற்றவனுக்கு நாம் செய்யவேண் டிய அடுத்த முக்கிய ஊழியம் துவங்குகிறது—

### *3. விடுதலைப் பெற்றவனைச் சீடனாக்குங்கள்! (Discipling)*

விடுதலை பெற்றவன் பாவத்திலிருந்து உண்மையாய் மனந்திரும்ப வேண்டும். அவன் கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்பின் மகிழ்ச்சியை அனுபவிக்க நடத்தப்படவேண்டும். அப்போஸ்தலர் மனந்திரும்புதலைப் பிரசங்கித்துப் பிசாசுகளைத் துரத்தினர் (மாற் 6:12,13). அவன் தண்ணீரில் ஞானஸ்நானம் பெறச் செய்யவேண்டும்.

விக்கிரகங்களையும் பிசாசின் செயல்களுக்கடுத்த பொருட்களையும் எறிந்துவிடுவது அவசியம். பல இடங்களில் விக்கிரகங்களையும் பிசாசு களையும் வேதம் சம்பந்தப்படுத்திப் பேசுகிறது (சங் 106:36-38; 1 கொரி 10:19,20). எபேசுவிலே மனந்திரும்பிய மந்திரவாதிகள் விலையுயர்ந்த தங்கள் புத்தகங்களையும் பொதுவிடத்தில் எரித்துப்போட்டனர் (அப் 19:19).

விடுதலை பெற்றவன் ஆவியினால் நிரப்பப்பட ஜெபியுங்கள். பிசாசுகள் திரும்ப நுழைய வாய்ப்பில்லாதுபோகவேண்டும் (மத் 12:43,45). ஆவி யின் நிறைவைப் பெற்றால்தான் அவன் பயமும் வீண் கவலையுமின்றி தேவனைத் துதித்து மகிழ்ந்திருக்க முடியும் (எபே 5:18-20). தனது கவலை களைக் கர்த்தர்மீது வைத்துவிடத் தெரியாதவனே கர்ஜிக்கும் சிங்கத்திற்கு இலக்காவான் (1 பேது 5:7-9). நெடுங்காலப் பிடிப்பிலிருந்து விடுதலை பெறுபவர்கள் சாதகமாய்ச் சிந்திக்கப் பழகும்படி கிறிஸ்தவ மனோதத்துவ மருத்துவரிடம் உதவி பெறுவதும் நல்லது.



வேதத்தைத் தியானிக்கும் முறையை அவனுக்குப் போதியுங்கள். படிப் பறிவற்றவனானால், கிறிஸ்துவில் அவனுக்குண்டான நிலையையும், வெற்றியைக் குறிப்பிடும் வசனங்களையும், பாதுகாப்புக்கான தேவனது வாக்குகளையும் ஒவ்வொன்றாய் அவன் மனனம் செய்ய உதவுங்கள். சத்துருவுக்கெதிராக ஆவியின் பட்டயத்தைப் பயன்படுத்த அவனைப் பழக்குவியுங்கள் (எபே 6:17).

அவனை விசுவாசிகளின் ஐக்கியம் ஒன்றில் இணைத்துவிடுங்கள். அது அவனுக்கு இன்றியமையாதது (பிர 4:12). தனித்துச் செல்லும் ஆடு பீறும் ஓநாயிடம் தப்புவதரிது.

விடுதலை பெற்றவன் தேவனுக்கடுத்தவைகளில் தீவிர ஈடுபாடு கொள்ளச் செய்யுங்கள். ''நீ உன் இனத்தாரிடம் உன் வீட்டிற்குப் போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச் செய்தவைகளையெல்லாம் அவர் களுக்கு அறிவி'' என்று பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டவனிடம் இயேசு சொன்னார். அவன் உடனே போய்ப் பத்துப் பட்டணங்களை (=தெக்கப்போலி) நற்செய்திமயமாக்கினான்! (மாற் 5:19,20). மகத லேனாள் மரியாள் இன்னொரு சிறந்த எடுத்துக்காட்டு. இயேசு அவளிட மிருந்து ஏழு பிசாசுகளைத் துரத்தியிருந்தார். அவள் இயேசுவின் நற் செய்திக்குழுவில் ஒரு தீவிர அங்கமானாள் (லூக் 8:1,2). உயிர்த்தெழுந்த கர்த்தரை முதலாவது சந்தித்து அச்செய்தியைப் பரப்பியது அவள்தான்! (மாற் 16:1,9,10).

### *இன்றே துவங்குங்கள்!*

இந்தியக் கிராமங்களிலும், ஆதிவாசிப் பகுதிகளிலும் பிசாசு பிடித் திருப்போர் ஏராளம். சீயோனிலிருந்து இரட்சகர்கள் வருவார்களென அவர்கள் ஆண்டாண்டாய்க் காத்திருக்கிறார்கள்! இயேசுவின் நாமத்தில் அவர்களிடம் விரையுங்கள். ''கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலைக் கூற'' கர்த்தருடைய ஆவியானவர் உங்கள்மேல் இருக்கிறார் (ஏசா 61:1). Devil Driver எனும் D.D. பட்டத்தைப் பரலோகம் உங்களுக்களிக்கிறது. சர்வகலாசாலை எதுவும் அளிக்க முடியாத இப்பட்டம் சர்வலோகம் எங்கும் அங்கிகரிக்கப்படும்!

**கிறிஸ்தவ வாழ்வில்**
**நிறைவாய் வளர உணவளிக்கும்**
**ஒரு தினசரித் தியான நூல்...**




*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

**அனைத்துச் சபையினரும்...**
**அனைத்து வயதினரும்...**
**அனைத்துத் துறையினரும்...**
**விரும்பி வாசிக்கும்**
**ஒரு புதிய படைப்பு**

ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி,
பெங்காலி, மராத்தி, மலையாளம், தெலுங்கு
ஆகிய மொழிகளிலும் உண்டு.

*432 பக்கங்கள்*
*விலை ரூ. 100/– அனுப்பச் செலவு ரூ. 25/–*

கிடைக்குமிடம்:
Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 91 044 28450411*
*<blc@bym-india.org>*



**ஆசிரியரது பிற நூல்கள்**

- அறிவூட்டும் அகவுணர்வுகள்
- ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?
- ஆனந்த அறுவடை
- இரட்சிக்கப்படுவது எப்படி?
- உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்
- ஊழியரும் மக்களும்
- எதிர்நீச்சல் வாலிபர்
- எப்படிக் கொடுக்கக்கூடாது?
- எப்படித் தியானிக்கக்கூடாது?
- எப்படி ஜெபிக்கக்கூடாது?
- ஐந்தப்பம் இருமீன்
- கண் திறக்கும் கட்டுரைகள்
- கீழ்ப்படிதலே மேல்படி!
- சமநிலைக் கிறிஸ்தவன்
- சிறு நரிகள்
- திறந்த வானம்
- திரும்பிய மனிதன்
- தெளிவான பதில்கள்
- நெஞ்சில் நெருப்பு
- பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!
- பொற்பழங்கள்
- மாணவ மணிகளுக்கு...
- வல்லமை தேவனுடையது!
- விசுவாச வாழ்வு

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.

இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச் செய்திகள்
அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும் கிடைக்குமிடம்—

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 91 044 28450411*
*<blc@bym-india.org>*

**StanleyOnBible.com**

*A WEBSITE FOR BIBLE LOVERS*

## CONTENTS

p ***My Letters***
Stanley talks heart to heart
with the Visitors of this Website.

p ***General Messages***
Enlightening Articles for Christian Growth

p ***Sermon Outlines***
Outlines on miscellaneous subjects for
Personal Meditation and Pulpit Preaching

p ***Bible Studies***
Studies on specific themes
and select books of the Bible

p ***Doctrinal Essays***
Corrective Teaching to uphold
Sound Doctrines of the Bible

p ***Youth Matters***
Practical Guidelines to Young Men
and Young Women for Successful Living

p ***Leaders Column***
Biblical Insights and Practical Lessons
on Christian Leadership

p ***Missionary Challenge***
Calling Christians to obey
the Great Commission of Christ

p ***My Answers***
Answers to Questions
frequently asked but rarely answered

p ***Quotable Quotes***
Stanley's analytical Statements
about Christian Life and Ministry

Register your e-mail id in this website
to receive updates instantly.



# ஆசீர்வாத இளைஞர் இயக்கம்

***எழுப்புதலுக்கும் நற்செய்தி அறிவிப்பிற்கும் அர்ப்பணிக்கப்பட்டு
1971 முதல் இயங்கிவரும், சபைப்பிரிவு பாகுபாடில்லாத,
ஒரு திருப்பணி***

r

எழுப்புதல் முகாம்கள், திருமறைப் பாடங்கள்,
பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்;

r

பள்ளிகள், கல்லூரிகளில் மாணவ மாணவியருக்கு
ஜெபக்குழுக்கள் உருவாக்குதல்;

r

முழுநேர ஊழியரல்லாத சகோதர சகோதரிகளின்
குழுக்கள் மூலம் கிராமங்கள், குடிசைப் பகுதிகள்,
மருத்துவமனைகள் முதலியவற்றைச் சந்தித்தல்.

r

300க்கும் மேற்பட்ட முழுநேர மிஷனரிகள் மூலம் அசாம்,
ஆந்திரப் பிரதேசம், இராஜஸ்தான், உத்திரப் பிரதேசம், ஒரிசா, கர்நாடகம், குஜராத்,
கேரளம், சத்தீஸ்கார், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம்,
மேற்கு வங்கம், தமிழகம் மற்றும் ஜார்கண்ட் ஆகிய மாநிலங்களிலுள்ள
கவனிப்பாரற்ற கிராமங்களிலும் ஆதிவாசிப் பகுதிகளிலும்
சபைகள் நிறுவுதல்.

r

அசாமி, ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம்,
குஜராத்தி, தமிழ், தெலுங்கு, பெங்காலி, மராத்தி, மலையாளம்
ஆகிய மொழிகளில் *"ஆசீர்வாதம்"* எனும் பத்திரிகை,
புத்தகங்கள் மற்றும் ஒலி-ஒளித்தட்டுகள் வெளியிடுதல்.

r

மருத்துவப்பணி, நிவாரணப்பணி மற்றும் எழுத்தறிவு கற்பித்தல்
மூலம் எளியோர், ஒதுக்கப்பட்டோருக்கு உதவுதல்.

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்! ஆதரியுங்கள்!*

**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்**
**சர்ச் காலனி, வேலூர் 632 006**
**தொலைபேசி: 00 91 416-2242943, 2248943**
<hq@bym-india.org>
www.bym-india.org